Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 20

# ஈழநாடு

வாரமலர்

மலர் 12 சௌமிய ஆடி 2 ஜமா. அவ் 13 (18-7-70) சனிக்கிழமை இதழ் — 157

முக்கிய வேண்டுகோள்!

1970ம்- ஆண்டு விளம்பர நிதி யாவும் செலவாகி விட்டதால் தயவுசெய்து விளம்பரம் கேட்டு சிரமம் தரவேண்டாமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

மில்க்வைற் சோப் தொழிற்சாலை

... ணம்.

## அரசியல் நிர்ணய சபை பிரேரணை:

# தமிழரசுக் கட்சி எதிர்க்கும்!

## ஆட்சி மன்றக் குழு கூட்டத்தில் முடிவு; 19-ல் நவரலங்கா செல்வர்

— நமது நிருபர் —

**அரசியல்நிர்ணயசபை நிறுவும் கூட்டுமுன்னணி அரசாங்கத்தின் திட்டத்தை தமிழரசுக்கட்சி எதிர்த்து வாக்களிக்கும்.**

**நேற்றுக்காலை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் இல்லத்தில் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது.**

இம்மாதம் 19-ந் திகதி 'நவரலங்கா'வில் நடைபெறும் அரசியல் நிர்ணய சபைஅங்குரார்ப்பணக் கூட்டத்தில் தமிழரசுக்கட்சி ஆட்சிமன்ற உறுப்பினர்கள் சகலரும் கலந்துகொள்ள வேண்டும். ஆயினும்பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவினல் கொண்டுவரப்படவிருக்கும் இதுசம்பந்தமான பிரேரணையைத் தமிழரசுக் கட்சி எம். பிக்கள் எதிர்க்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

பலமணிநேரம் நடைபெற்ற இக்கூட்டத்தில் தமிழரசுக்கட்சி எம். பிக்களும், செனட்டர்களும் கலந்துகொண்டனர், நேற்று நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் வருமாறு:—

"பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயகா கூறுவது போல சிங்கள மக்கள் இம்முறை பெரும்பான்மைப் பலத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை ஆட்சிமன்றம் அனுப்பிவைத்துள்ள போதிலும் கடந்த 22 வருடங்களாக தமிழ்மக்கள் பெரும்பான்மையாக தமிழரசுக் கட்சியை ஆதரித்து வருகின்றனர். இந்த நிலைமையில்கூட கட்சியின் கோரிக்கைகளையும் தமிழ் மக்களின் உரிமைகளையும் வழங்குவதற்கு இந்த அரசாங்கம் பல சாட்டுப்போக்குகளைகூறிவந்துள்ளது. இன்று ஜனநாயக ரீதியில் மக்கள் மத்தியில் வாக்குகளைப்பெற்று, பெரும்பான்மைக்கட்சியாக வந்த பின்பு சர்வாதிகாரத்தையும், தான்தோன்றித்தனமான செயல்களையும் திணிக்கமுற்படுகிறது. இதை நாம் முற்ருகஎதிர்ப்பதுடன் ஆட்சிமன்றத்தின் உள்ளேயும், வெளியேயும் போராட்டம் நடத்தவேண்டுமெனத் தீர்மானிக்கிறோம்

(நல். நிருபர்)

'கலாச்சாரத்துக்கு புறம்பான

## தமிழகத்து பத்திரிகைகளை தடைசெய்ய வேண்டும்"

(நமது கொழும்பு நிருபர்)

தமிழகத்திலிருந்து வெளியாகும்கலாச்சாரம் சம்பந்தமான விடயங்களை அடக்கிய பத்திரிகைகளைத் தவிர ஏனைய பத்திரிகைகளைத் தடைவிதிக்க வேண்டுமென்று ஸ்ரீலங்கா பத்திரிகையாளர் சங்கப்பிரதிநிதிகள் பிரதமரிடம் கேட்டுக் கொண்டுள்ளனர்,

பேட்டியின்போது தென்னிந்தியப் பத்திரிகைள் பல ஆபாசச் செய்திகளைக் கொண்டதாகஅமைந்துள்ளதென்று சுட்டிக்காட்டினர்.

தென்னிந்தியாவிலிருந்து வெளிவரும் பத்திரிகைகள் இங்கு குறிப்பிட்ட விலைக்கு அதிகமாக விற்கப்படுவதாகவும் தெரிவித்தனர்.

தென்னிந்தியப்பத்திரிகைகள் இங்கு வெளிவருவதனல் இலங்கையில் தடைசெய்யப்படுகின்ற செய்திகளும் அவற்றில் இடம்பெறுவதனல் தடையினல் பலனற்றுப் போய்விடுகின்றனவென்றும் தெரிவித்தனர்.

# தமிழரசு நேற்றுக் கூட்டிய மகாநாடு

(கொழும்பு நிருபர்)

தமிழரசுக்கட்சி கூட்டிய பொது மகாநாடு நேற்று சைவமங்கையர் கழகத்தில் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்துக்கு பத்திரிகையாளர் எவரும் அனுமதிக்கப்படவில்லை. அழைப்பு அனுப்பப்பட்டவர்கள் மட்டும் அனுமதிக்கப்பட்டனர்.

செனட்டர் திரு. நீதிராசா, செனட்டர் நடேசன் உட்பட பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

கூட்டம் உள்ளே நடந்துகொண்டிருந்தபோது வெளியே கணிசமானவர்கள் நின்று கொண்டிருந்தனர். தம்மை உள்ளே அனுமதிக்கும்படியும் வேண்டினர்.

மகாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவு அறிவிக்கப்படவில்லை.

# செல், கல்டெக்ஸ், எஸ்ஸோ கம்பனிகள் தேசியமயமாகும்!

## பெற்றோலியம் கூட்டுத் தாபன அதிபர் அறிவிப்பு

(நமது கொழும்பு நிருபர்)

பெட்ரோலியம் எரிபொருட்களை விற்பனை செய்யும், 'செல்', 'கல்டெக்ஸ்', 'எஸ்ஸோ'' போன்ற கம்பனிகளை தேசிய மயமாக்க அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

இத்தகவலை பெட்ரோலியம் கூட்டுந்தாபன அதிபர் திரு. ஈ, ஆர்.எஸ். குமாரசாமி நேற்று தெரிவித்தார்.

1961-ம் ஆண்டில் பெட்ரோலியம் கூட்டுத்தாபனத்தை தேசியமயமாக்கிய போதிலும் டட்லி சேனநாயகா அரசாங்கம் முற்குறிப்பிட்ட உபபொருட்களை விநியோகிக்கும் கல்டெக்ஸ், செல், 'எஸ்ஸோ' போன்ற கம்பனிகளை கப்பல்களுக்குத் தேவையான எரிபொருள்களை வழங்க அனுமதியளித்திருந்தது.

தேவை

கொழும்பிலுள்ள வேலைத்தலத்திற்கு:

1 கடைசல் தொழிலாளி (LATHEMAN)

2 மில்லிங் அன்ட் ஷேப்பிங் (MILLING AND SHAPING) இயந்திர இயக்குனர்

3 மின்கம்பி இணைப்பாளர்

அனுபவமும் தகுதியுமுடையோர் விண்ணப்பிக்கவும்.

இப்ராஹிம் ஜபார்ஜி

இல. 218, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.

2128

லண்டனில்

## கருணாநிதி கண்கள் பரிசோதனை

லண்டன், ஜூலை. 17

தமிழகமுதல்வர் திரு. மு. கருணாநிதியை லண்டனிலுள்ள பிரபல கண்வைத்திய நிபுணர் பரிசோதனை செய்தார். அவரது கண்களை நன்ருகப்பரிசோதனைசெய்த வைத்தியநிபுணர் திருப்தி தெரிவித்தார்.

பாலாவி கோர விபத்து:

## பெண்ணை திரும்பிபார்த்தார் பஸ் ரயிலுடன் மோதியது

(நமது கொழும்பு நிருபர்)

"முன்சீட்டிலிருந்த இளம் மேற்றன் பெண் ஒருவரை கண்ணுடியில் பார்த்துவிட்டு பஸ்சாரதிதிரும்பிப்பார்த்த போதே ரயிலுடன் பஸ் கோரவிபத்தில் சிக்கியது"

இவ்வாறு நேற்று முன்தினம் பாலாவிக்கு அருகில் நடந்த ரயில்-பஸ் கோர விபத்து பற்றி விசாரணை நடாத்திய புத்தளம் மாஜிஸ்திரேட் முன் சாட்சியமளித்த ஒருவர் தெரிவித்தார். சாட்சியமளித்தவர் குறிப்பிட்ட பஸ்ஸில் பிரயாணம் செய்து நடந்தவிபத்தில் சிறுகாயங்களுடன் தப்பியவர்.

பஸ் சாரதி யாப்பா 1500 ரூபாய் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

## கதிர்காமசுவாமி கோவில் திருவிழா

திருக்கேதீஸ்வரம், சனி

இன்று திருக்கேதீஸ்வரம் கதிர்காமசுவாமி கோவில் திருவிழா ஆரம்பமாகிறது. நாளை வவனியாவிலிருந்து காவடிகளும், நல்லூரிலிருந்து நிறைகுட ஊர்வலமும் புறப்பட்டு திருக்கேதீஸ்வரத்தை வந்தடையும். நாளையின்று-அதாவது 20-ந் திகதி தீர்த்தோற்சவம் இடம்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் அரங்கு

# அரசியல் நிர்ணய சபைக் கூட்டமும் அரசியல் கட்சிகள் நிலையும்

அரசியல் நிர்ணயசபையாக மக்கள் பிரதிநிதிகள் சபையை மாற்றும் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை கொழும்பிலுள்ள 'நவரலங்கா' மண்டபத்தில் நடைபெறுகிறது.

'அரசியல் நிர்ணய சபையின் முதற்கூட்ட வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு ஆட்சிமன்ற உறுப்பினர் அத்தனை பேரையும் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகா அழைத்திருக்கிறார்.

நவரலங்காவில் நாளை நடைபெறும் அரசியல் நிர்ணய சபையின் முதற்கூட்ட வைபவத்தில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஆட்சிமன்ற உறுப்பினர் அனைவரும் அரசியல் நிர்ணய சபை உறுப்பினராக மாறிப் புதிய அரசியல் அமைப்பை உருவாக்கக் கோரும் பிரேரணையை பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகா பிரேரிப்பார்.

அரசியல் நிர்ணயசபையின் முதற்கூட்டத்தில் கலந்து கொள்வதா, அரசியல் நிர்ணய சபையாக்கும் பிரேரணையை ஆதரித்து வாக்களிப்பதா என்பது பற்றி ஆட்சிமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சிகளாக விளங்கும் ஐக்கிய தேசியக்கட்சியும் தமிழ் அரசுக்கட்சியும் தனித்தனியே கூடி ஆராய்ந்திருக்கின்றன.

'நவரலங்கா'வில் நாளை நடைபெறும் முதற்கூட்டத்தில் கலந்து கொள்வதென்றும் பிரதமர் திருமதி சிறிமா கொண்டு வரும் பிரேரணையைஆதரித்துவாக்களிப்பதென்றும் ஐக்கிய தேசியக்கட்சியினர் தீர்மானித்திருக்கின்றனர். முதற் கூட்டத்தில் கலந்து கொள்வதென்று தமிழரசுக்கட்சியினரும் முடிவு செய்திருக்கின்றனர். அரசியல் நிர்ணய சபையாக்கும் பிரதமரின் பிரேரணையையும் தமிழரசுக்கட்சியினர் ஆதரிப்பார்களென்று எதிர்பார்க்கலாம்.

"மக்களால் தெரிவு செய்யப்படும் மக்கள் பிரதிநிதிகள் அரசியல் நிர்ணயசபை உறுப்பினர்களாகக் கணிக்கப்பட்டு புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவார்கள் என்று கூட்டணியினர் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருந்தனர். இது கூட்டணி அரசாங்கத்தின் முதலாவது சிம்மாசனப் பிரசங்கத்திலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கூட்டணியினரை மிகப் பெரும்பான்மையாகத் தெரிவு செய்து அதை ஆட்சிபீடத்தில் மக்கள் அமர்த்தியதன்மூலம் மக்கள் பிரதிநிதிகள் சபையே அரசியல் நிர்ணய சபையாக மாறி புதிய அரசியல் அமைப்பை உருவாக்க அதிகாரம் பெற்றிருக்கிறதென்பது ஆளும் கட்சியின் நிலை. சிம்மாசனப் பிரசங்கத்தை ஆட்சி மன்றம் ஒருமனதாக ஏற்றுக் கொண்டபின்னர் அரசியல் நிர்ணயசபையாக ஆட்சி மன்றம் செயல்பட முடியுமாவென்றும் புதிய அரசியல் அமைப்பை உருவாக்க அதிகாரம் இருக்கிறதா வென்றும் சிலர் கேட்பதில் அர்த்தமில்லையென்று அரசியல் அமைப்புக்குப் பொறுப்பான அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா கூறி அரசியல் நிர்ணய சபையாக இந்த ஆட்சிமன்றம் பிரகடனம் செய்ய முடியுமென்றும் புதிய அரசியல் அமைப்பை உருவாக்க அதற்கு அதிகாரமிருக்கிறதென்றும் அவர் சில தினங்களுக்குமுன் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்.

அமைச்சரின் விளக்கம் தமிழரசுக்கட்சியினரும், ஐக்கிய தேசியக் கட்சியினரும் கிளப்பிய சந்தேகங்களைத் தெளிவு படுத்துவதற்குப் பதில் மேலும் குழப்பியிருக்கிறதென்பது சிலரின் கருத்து

சட்டமூளைகள் சட்டம் பற்றி நுணுகி ஆராய்ந்து கருத்து வெளியிட்டன. நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வது பற்றியும் ஆலோசனைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிமன்றக் குழு நீண்ட நேர ஆலோசனை நடத்தி வாதப் பிரதிவாதங்கள் நடத்தியபின் அரசியல் நிர்ணய சபையின் முதல் கூட்டத்தில் கலந்துகொண்டு அரசியல் நிர்ணயசபைப் பிரகடனப் பிரேரணையை ஆதரிப்பதென்று தீர்மானித்திருக்கிறது.

சட்டம் என்னதான் வாய்ப்பாக இருந்தாலும், சட்டத்தை வைத்து புதிய 'சோஷலிஸக் குடியரசு' அமைக்கும்வகையில் புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கும் அதை உருவாக்கும் அரசியல் நிர்ணயசபையைக் கூட்டுவதற்கும் ஐக்கிய தேசீயக் கட்சி எதிர்த்தால், கூட்டணியை ஆட்சிபீடத்துக்குள் கொண்டுவந்த இந்த நாட்டின் பெரும்பான்மை மக்களின் எதிர்ப்பைத் தேடிக் கொள்ள நேரிடும். சோஷலிஸக் குடியரசை எதிர்க்கிறார்கள் என்று கூறி 'அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின்' கையாட்கள் என்ற அவப்பெயரும் கேட்க நேரிடும். இவை தவிர இலங்கையை ஒரு குடியரசாக்க வேண்டுமென்பது ஐக்கிய தேசீயக் கட்சியின் கொள்கையுமாகும்.

தமிழ் அரசுக் கட்சியைப் பொறுத்தவரையில் இலங்கை ஒரு சோஷலிஸக் குடியரசாவதை அது எதிர்க்கவில்லை. சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணைமீது நடைபெற்ற விவாதத்தில் இது தெளிவுபடுத்தப்பட்டது. புதிய அரசியல் அமைப்பு சமஷ்டி ஆட்சி அமைப்பாக இருக்க வேண்டுமென்பதே அதன் விருப்பம். அந்த விருப்பம் இப்போது ஈடேறக்கூடியதல்லவென்பதும் அதற்குத் தெரியும். ஆனாலும் இந்த ஆட்சிமன்றத்தையே அரசியல் நிர்ணயசபையாக மாற்ருமல், இந்தியா முன்னர் வழிகாட்டியதுபோல அரசியல் நிர்ணயசபையொன்றைத் தனியாகவே கூட்டியதுபோல இங்கும் அரசியல் நிர்ணயசபையொன்றைத் தனியாகக் கூட்டினால் கண்டிப்பகுதியிலிருந்தும் சிலர் சமஷ்டி ஆட்சி அமைப்புக்குச் சாதகமாகப் பேசக்கூடுமென்பது தமிழரசுக் கட்சியின் நம்பிக்கை. சமஷ்டி ஆட்சி அமைப்புத்தவிர புதிய அரசியல் அமைப்பில் 29-வது ஷரத்தும் இடம் பெறவேண்டுமென்பதும் தமிழரசுக்கட்சியினரின் விருப்பம். இந்த ஷரத்துக்குக் கூட்டணியினர் முன்னரே எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றனர். இதனால் தான் ஆட்சிமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாக்கி தாகவும், பின்னர் அந்த மூளைகள் கைவிட்டுவிட்டதாகவும் அரசியலறிந்தவர்கள் சிலர் கூறுகின்றனர்.

ஐம்பதுக்கைம்பது கோரிக்கைதான் இங்கு தமிழர் பிரச்னைகளுக்கெல்லாம் மூல காரணமென்பதும் அவர்கள் கருத்து.

இதேநிலை இலங்கையை ஒரு சோஷலிஸக் குடியரசாக்கும் முயற்சியிலும் ஏற்படக்கூடாது. இந்த வகையில் அரசியல் நிர்ணய சபையின் முதற் கூட்டத்திற் கலந்துகொள்வதென்று தமிழரசுக்கட்சியினரும், தமிழ்க் காங்கிரஸாரும் செய்துள்ள முடிவு விவேகமானதாகும்.

புதிய அரசியலமைப்பு எப்படியிருக்குமென்பதுபற்றி இப்போது எதுவும் சரியாகத் தெரியவில்லை. அரசியல் நிர்ணயசபை புதிய அரசியல் அமைப்புப்பற்றி விவாதித்து அதைத் தயாரிக்கும்போது தமிழரசு தமிழ்க்காங்கிரஸ் பிரதிநிதிகள் மட்டுமல்ல இதர சிறுபான்மையினரின் பிரதிநிதிகளும் சிறுபான்மை மக்களின் உரிமை சம்பந்தமாக விழிப்புடனிருந்து, ஒன்றுகூடி ஆலோசனை செய்து. தக்க யோசனைகளைத் தெரிவிக்கவேண்டும். சிம்மாசனப்பிரசங்க விவாதத்தின்போது அரசியல் நிர்ணய சபையின் அதிகாரம்பற்றிச் சிந்திக்காமல்விட்டு பின்னர் இப்போது சட்டநடவடிக்கைகள்பற்றி ஆராய்வது போல அரசியலமைப்பை உருவாக்கியபின் சிந்திக்கும் நிலை ஏற்படக்கூடாது.

**எஸ். எம். ஜி.**

# புதிய அரசியல் அமைப்புப்பற்றி ஆர்தர் ரணசிங்காவின் அச்சம்

குவதற்கு அதிகாரம் இல்லையென்ற பிரச்னையைத் தமிழ் அரசுக் கட்சியினர் கிளப்பிப்பார்த்தனர். கூட்டணியினர் பெற்ற ஆணை தமிழ் மக்களிடமிருந்து பெறவில்லையென்றும் சுட்டிக்காட்டினர்.

ஆனாலும் அரசியல் நிர்ணயசபை கூடுவதை நீதிமன்றம் மூலம் சட்டப் பிரச்னையைக் கிளப்பி நிறுத்த முயன்ருலோ, புதிய சோஷலிஸக் குடியரசு தோன்றுவதற்கான புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவதற்குத் தடையாக இருந்தாலோ, இப்பொழுதே பெரும்பான்மை மக்களால் சந்தேகக்கண் கொண்டு பார்க்கப்படும் தமிழரசுக்கட்சியினர் இந்த நாட்டின்மீது விசுவாசமில்லாதர்கள்என்ற பழிச்சொல் கேட்க நேரிடும் செனட்டில் நீதியமைச்சர் பேசியது 'சரி' யென்று சிங்கள மக்கள் சொல்வதற்கும் வழிவகுத்துவிடலாம்.

இலங்கைக்கு அரசியல் சுதந்திரம் வழங்குவதற்கான முயற்சிகள் நடைபெற்ற சமயத்தில் ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கை இலங்கையருக்கு சில [illegible] பிரிட்டிஷ் மூளைகள்தான் பின்னணியில் செயல்பட்ட

பெரும்பான்மைச் சமூகத்தவர்களின் உரிமைகளைப் பொறுத்தவரையில் கூட்டணியினர் எதைக்கொண்டு வந்தாலும், எந்த முயற்சி செய்தாலும் அதை ஐக்கிய தேசியக்கட்சியினர் எதிர்க்க மாட்டார்கள். சிறுபான்மையினரைப் பொறுத்தவரையில் துரதிர்ஷ்டவசமாக சிறுபான்மை இனத்தின் பிரதிநிதிகளே அந்த முயற்சிகளை எதிர்ப்பதும் ஆட்சிமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் வாதப் பிரதிவாதங்கள் செய்து பெரும்பான்மைக் கட்சிகளுக்கு நல்ல வாய்ப்பைத் தேடிக் கொடுப்பதும் வழக்கமாகி வந்திருக்கிறது. இதேநிலை இனியும் நீடிப்பதற்கும் கட்சிவேறுபாடுகள் சிறுபான்மையினரின் உரிமைகளை இல்லாமல் செய்ய வழிவகுக்கவும் இடம்கொடுக்கக் கூடாது.

புதிய அரசியல் அமைப்பு சம்பந்தமாக பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்குள்ளேயே இப்போது சிறிது சந்தேகத்தை ஏற்படுத்தத் தொடங்கியிருக்கிறது என்று சொல்லலாம். சுதந்திரஇலங்கையின் முதலாவது பிரதம மந்திரியின் நிரந்தரக் காரியதரிசியாகவும் மத்திய வங்கியின் கவர்னராகவும்பதவிவகித்த சேர். ஆர்தர் ரணசிங்கா புதிய அரசியல் அமைப்பு சம்பந்தமாக விடுத்த அறிக்கையை, கூட்டணியை ஆட்சிக்கு கொண்டுவந்த பெருமை தங்களையேசாரும் என்று கூறிக்கொண்டுபுதிய அரசாங்கத்துக்குபல யோசனைகளையும் கூறிவடும் சுயாதீனப் பத்திரிகா சமாசத்தைச் சேர்ந்த ஆங்கிலத்தினசரியான 'சன்' பத்திரிகை முதல்பக்கத்தில் முக்கியத்துவம் கொடுத்துகொட்டை எழுத்தில் தலைப்பிட்டுப் பிரசுரித்து வெளியிட்டிருக்கிறது.

புதியஅரசியல் அமைப்பை உருவாக்குவதற்குப் பொறுப்பான அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா புதிய அரசியல் அமைப்பு சம்பந்தமாக சமீபத்தில் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்த விளக்கத்தைத் தொடர்ந்தே சேர் ஆர்தர் ரணசிங்கா தமது கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

''இலங்கையை குடியரசு நாடாக்கவேண்டுமென விரும்பி அதற்கான முயற்சிகளை மேற்கொண்ட காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா, காமன்வெல்த்துக்குட்பட்ட ஒரு குடியரசு நாடாகவே இலங்கை இருக்கவேண்டுமென்று கூறியிருந்தார்'' என்றுசேர் ஆர்தர் தமது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார். அவர் விடுத்துள்ள அறிக்கையிலிருந்து, காமன்வெல்த் உறவுகளைத் துண்டித்துக் கொள்ளவும் மேற்கத்திய தொடர்புகளை அகற்றிக் கொள்ளவும் முயற்சி செய்யப்படுவதாகவும் புதிய அரசியலமைப்பு சோவியத் யூனியன், யூகோஸ்லாவியா போன்ற நாடுகளின் அரசியலமைப்பின் அடிப்படையில் உருவாக்கப்படக்கூடுமென்றும் அஞ்சுவதாகவும் தோன்றுகிறது. சுருங்கச் சொன்னல் கம்யூனிஸ்ட் நாடுகளிலுள்ள அரசியல் அமைப்பே இங்கு உருவாக்கப்படலாமென்றும் இது நல்லதல்லவென்றும் அவர் கருதுவதாகவே தோன்றுகிறது.

''டெயிலி நியூஸ்'' பத்திரிகையும் புதிய அரசியல் அமைப்புச் சம்பந்தமாக காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகாவின் கருத்து என்னவென்பதை ஒரு கட்டுரையில் எடுத்துக் காட்டியிருக்கிறது.

எனவே புதிய அரசியலமைப்புச் சம்பந்தமாக சர்ச்சை கிளம்பலாமென்று எதிர்பார்க்க இடமுண்டு.

## அரசாங்கம் அங்கீகாரம்

உடுப்பிட்டி, வெள்ளி

துன்னலை தெற்கு தயாநிதி கிராமமுன்னேற்றச் சங்க சனசமூகநிலையம் நடாத்தி வரும் முதியோர் கல்வி நிலையத்துக்கும் சிறுவர்பாடசாலைக்கும் அங்கீகாரம் வ[illegible]ங்கியுள்ளது.

இம்முதியோர் கல்வி நி[illegible]யத்திற்கும், சிறுவர் [illegible] சாலைக்கும் தேவையான [illegible] பாடங்களையும், விரி[illegible] யாளர்களையும் கொ[illegible] மாறு கல்வியமைச்சர் [illegible] பதியுதீன் மஹ்மூத் [illegible] இலாகாவிற்கு உத்த[illegible] பிறப்பித்துள்ளார்.

குறைந்த விலையில் சிறந்த பொருட்கள்
பெறுவதற்கு ஒரே ஒரு ஸ்தாபனம்
'ரொலரூம்ஸ்'
லங்காமணிப்புரிசாறி பிறின்டட்வொயில்சாறி
கைத்தறி சேலைகள் நைலோன்புறெக்குகள்
சூட்டிங், சேட்டிங், றெடிமேட் சேட்டுகள்
மற்றும்
வாசனைப் பொருட்களும்
மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.
இன்றே விஜயஞ்செய்யுங்கள்
ரொலரூம்ஸ்
46, பிரதானவீதி, போன்: 7099 யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளை விபுலானந்த அடிகளாரின் நினைவுதினமாகும். அதையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது.

# யாழ் நூல் தந்த ஈழத்து வித்தகர் விபுலானந்த அடிகளார்



1922-ம் ஆண்டென்று ஞாபகம். யாழ்ப்பாணத்து வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயம் எனப்பட்ட இங்கிலீஸ் பள்ளிக்கூடத்தில் நான்கல்விபயிலுவதற்காகச் சேர்ந்து ஒரு வருடமிருக்கலாம். வித்தியாலயத்தில் நான் பயின்ற காலத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி இன்றும் என் மனதில் பசுமை குன்றாமலிருக்கிறது. சுவாமி சர்வானந்தா அவர்கள் ஊர்வலமாக எமது வித்தியாலயத்திற்கு அழைத்து வரப்பட்டார்கள். அத்தகைய பிரமாண்டமான ஊர்வலத்தை அதுவரை நான் கண்டதேயில்லை. உயர்ந்த கம்பீரத் தோற்றமும் பொன் போன்ற மேனியும் கொண்ட சுவாமி அவர்கள் ராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்தவர்கள் அணியும் அங்கி தரித்து யாவரையும் வசீகரிக்கும் அழகுக் காட்சியளித்தார்கள். எனினும் அன்றைய சம்பாஷணை அவரைப் பற்றியதாகவன்றி துறவறம் பூணவிருந்த மற்றொருவரைப் பற்றியதாக விபுலானந்தரைப் பற்றியதாகவமைந்தது அப்பொழுது விபுலானந்தர் பண்டிதர் மயில்வாகனம் பீ.எஸ்.ஸி. (லண்டன்) என்னும் பெயரோடு மானிப்பாய் இந்துக்கல்லூரியின் அதிபராகப் பணியாற்றி வந்தார்கள், இவ்வுலக வாழ்க்கையைத் துறந்து சன்னியாசியாவதென்று மயில்வாகனனார் முடிவு செய்திருந்ததைப் பற்றியே அன்றைய தினம்

**— ஏ. எம். ஏ அசீஸ் —**

அனைவரும் பேசிக்கொண்டார்கள். ராமகிருஷ்ண மிஷன் எவ்வளவு செல்வாக்குடையதாகத் திகழ்ந்ததென்பதை அன்று நாம் ஓரளவு உணர்ந்தோம், சில வருடங்களுக்குப்பின் சுவாமியவர்கள் அண்ணாமலைச் சர்வகலாசாலையிலே பேராசிரியரமர்ந்து. ஆறுமுக நாவலர் மரணத்தின்பின் ஈழநாட்டிற்குப் புகழ்தேடிக் கொடுத்தார். கர்மயோகக் கொள்கைகள் ராமகிருஷ்ண மிஷன் குழுவாரின் ஒரு தனிச்சிறப்பு. அதற்கிணங்க விபுலானத்த அடிகள், தாம் பிறந்த கீழ் மாகாணப் பகுதியின் கல்வி நிலையையும், அங்குள்ள மக்கள் பெரும்பாலானோர் மதத்தோடிணங்கிய கல்வி விருத்திப் பெருமையையும் உணர்ந்து, கல்வித்துறையில் ஆக்கவேலைகளைச் செய்துகொண்டிருப்பதாகப் பத்திரிகை வாயிலாக அறிந்துள்ளேன். ராமகிருஷ்ண மிஷன் பாடசாலையிலே இங்கிலிஷ் ஆரம்பக் கல்வி பயின்ற எனக்கு அதனோடு சம்பந்தப்பட்ட புதினங்களை அறிந்துகொள்வதில் ஒரு தனி ஆசை.

சுவாமியவர்களை முதன்முதலாக நான் நேரிலே கண்டுகொண்டது 1939-ம் ஆண்டிலாகும். அதுவும் அவர்கள் மாயாவதித் தவப்பள்ளிக்குச் செல்லும்பொழுது எனது பிறப்பிடமாகிய வண்ணார்பண்ணையில் வைக்கப்பட்ட ஒரு பிரிவுபசாரக் கூட்டத்திலாகும். சில ஆண்டுகள் அவருடன்நெருங்கிய பழகக்கூடிய சந்தர்ப்பம் எனக்குக் கிட்டுவதாயிற்று.

1943-ம் ஆண்டிலே அவசரகால உதவி மாகாண அதிபதியாக நான் கல்முனையிருந்தபொழுது சின்னமுகத்துவார வாடி வீட்டில். நண்பர் திரு. வி. நல்லையா அவர்கள் விபுலானந்த அடிகளை எமக்கு அறிமுகம்செய்து வைத்தார். எமது விருப்பத்துக்கிணங்கி அடிகளார் தாம் பிறந்த கிராமமாகிய காரைதீவிலே (இது கல்முனையிலிருந்து நாலு. ஐந்து மைல் தூரத்திலுள்ளது) ராமகிருஷ்ணமிஷன் தமிழ்ப் பாடசாலையில் 'முத்தமிழ்' என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள் அப்பொழுது தலைமை வகிக்கும் பெரும் மதிப்பினை நான் பெற்றுக்கொண்டேன். சுவாமிகள் அவ்வேளையில் தான் இலங்கைப் பல்கலைக் கழகத்திற்குப் பேராசிரியராக வந்திருந்தார்கள். அடிகளும் நானும் மிகவும் உறவுகொண்டாடி, அதிக நேரம் வரையில் உரையாடிக் கொண்டிருந்தோம். அப்பொழுது கல்வியைப்பற்றிய பல விஷயங்களை அவர்களிடமிருந்து அறிந்துகொள்ளும் பாக்கியம் எனக்குக் கிட்டியதாயிற்று. அன்றைய தினம் சுவாமியவர்களுடன் நெருங்கிப் பழகி அவருடைய குணாதிசயங்களை அறியும் வாய்ப்புஎனக்குக்கிட்டியது. ஒருவர்பால் மற்றொருவர் கவரப்பெற்ற நாங்கள் இருவரும்இதன்பின்னர் சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் சந்தித்து உரையாடலானோம்.

சுவாமியவர்கள் சமூகசேவையின் முக்கியத்துவத்தைப்பற்றி அடிக்கடி எடுத்துக் கூறுவார்கள் மட்டக்களப்புச் சிவானந்த வித்தியாலயத்தைப்பற்றியும் பல விஷயங்களைச் சொல்லுவார்கள். கீழ் மாகாணத்து இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பொதுவாகிய மரபுகள், பண்புகள் சம்பிரதாயங்கள் பற்றியும் எடுத்துவிளக்குவார்கள் ''நவயுகத்தின் போக்கிலும் முயற்சி மிகுதியிலும் நம்முடைய பழஞ்

(13-ம்பக்கம் பார்க்க)

# கோயிலும் கலையும் (3)

## கச்சேரிகளும் கதாப்பிரசங்கங்களும்

**லாவண்யம்**

அன்றொருநாள் ஒரு கோயிலில் இராத்திருவிழாவுக்குப்பிரபலமானவித்வான் ஒருவரை பாட்டுக் கச்சேரிக்கு ஒழுங்குசெய்திருந்தார்கள். நல்ல பாட்டு நல்ல பக்கவாத்தியங்கள், நல்ல ரசிகர்கள். ஆனால் கச்சேரி எடுக்கவில்லை!

வெளி மண்டபத்தில் மேடையமைத்து கச்சேரி நடந்தது ஒலிபெருக்கி பூட்டியிருந்தார்கள். பாடகருக்கு சுமார் இருபது அடி தூரத்தில் ஒரு குழாய். அதிலிருந்து 'கர்புர்' என்ற சத்தங்களும் 'ஹூம்' என்ற ஓர் ஓங்கார நாதமும் புறப்பட்டுக்கொண்டிருந்தன. பாடகரின் சுருதிக்கும் இந்த நித்திய நாதத்துக்கும் அரைக்கட்டை வித்தியாசம். சுருதி எப்படிச் சேரும், வித்வான் எப்படிப் பாடுவார், கச்சேரி எப்படி களை கட்டும்?

இதுவும் போதாதென்று வெளி மண்டபமாகையால காற்று வேறு 'ஹோ' என்று இரைந்து தம்புரா சுருதியைக் கலைத்துக்கொண்டிருந்தது. கச்சேரிஎடுபடாததற்கு வித்வானைக் குறைகூறமுடியுமா?

எந்த மகாவித்வானாயிருந்தாலும் சந்தர்ப்பம். சூழ்நிலைகள் பொருத்தமாயில்லாவிட்டால் நாதலயம் சேரவேமாட்டாது. சுருதி. பக்கவாத்தியம், சபை, காலநேரம் இப்படிப்பல வகையான சாதனங்கள் ஒரு கச்சேரியை சிறப்பிக்கவும்முடியும், அடியோடு கெடுத்துவிடவும் முடியும்.

அன்றைய கச்சேரியில் நல்ல ரசிகர் குழாம் இருந்தது. நன்றாக வயதுபோனவர்கள் கூட 'இது இன்ன ராகம், இது இன்ன தாளம்' என்று தங்களுக்குள் பேசிக்கொண்டதைப் பார்க்க எனக்கு மிகவும் ஆச்சரியமாயிருந்தது. பக்கவாத்தியங்களும் பொருத்தமான பக்கவாத்தியங்கள். ஆனால் 'ஸ்பீக்கர்' குழாய் சுருதி பேதம்செய்ய, காற்றுவேறு அடம்பிடிக்க பாடகரால் ஒன்றும்செய்ய முடியாமல் போய்விட்டது. ஏனோதானோ என்று கச்சேரியை ஒப்பேற்றிவிட்டார்.

உப்பு, புளி இல்லாத கூழ் குடித்தமாதிரி இருந்தது.

'மைக்' என்ற பொருளினால் நன்மையுமுண்டு, தீமையுமுண்டு. அந்தக் காலத்தில் அதாவது 'மைக்'-இல்லாத காலத்தில் நல்ல நாகஸ்வரக் கச்சேரிகளையும் சதுர்க் கச்சேரிகளையும் கேட்பதற்கு கோயில் கோபுர வாசலில் இடிபட்டு மிதிபட்டு வருந்துவோம். 'மைக்' வந்தபின் இந்தத் தொல்லை அகன்றுவிட்டது. ஆனால் அதோடுசம்பந்தப்பட்ட வேறுகரைச்சல்கள் வந்துசேர்ந்துவிட்டன.

ஒரு கச்சேரியையோ, ஒரு கதாப்பிரசங்கத்தையோ எழுப்பிவைக்கவும் அமுக்கிவைக்கவும் ராட்சதபலம் படைத்தாகிவிட்டது இந்த 'மைக்' என்றபண்டம்!

நம்நாட்டில் ஓசைக்கும் ஒளிக்கும், சத்தத்திற்கும் நாதத்திற்கும் அதிக வித்தியாசம் இருப்பதில்லை காதுச் சவ்வுகளைத் தாக்கும் எல்லாம் ஒரே ஓசைதான்! வல்லோசை மெல்லோசை என்ற பிரிவினையும் கிடையாது. கோயிலில் திருவிழா ஆரம்பித்துவிட்டால் ஒருபுறம் கதறும் 'ஸ்பீக்கர்', மறுபுறம் காதைத் துளைக்கும் தவிலடி, இன்னொருபுறம் ஓயாமல் 'படபட'க்கும் 'லைட்மெஷின்' இவ்வளவும் ஒன்றுசேர்ந்து பேரிரைச்சல் போட்டால்தான் திருவிழா மொத்தம், இவற்றிலிருந்து புறப்படும் ஓசையைக் கட்டுப்படுத்தி கேட்பவர்களின் செவிகளில் சுநாதத்தை புகட்டும் [illegible] யென்று எவரும் [illegible] த்தவேண்டிய நிலையங்கள், 'மைக்' இருக்கவேண்டிய ஸ்தானம், கட்டுப்பாட்டுடன் ஒலியைப் பெருக்குதல் முதலியவற்றிலும் அக்கறை செலுத்துவோர் குறைவு. எந்த ஸ்பீக்கரி'லிருந்து சப்த ஆரவாரங்கள் முழுவேகத்துடன் குமுறிக் கேட்கின்றனவோ அதுவே திறமான ஸ்பீக்கர்!

கோயில்களில் சங்கீதக்கச்சேரிகளை ஏற்பாடு செய்யும் அற்புதமான யோசனையை நான் முழுமுற்றாக வரவேற்கிறேன். அது ஒருநல்ல வழக்கம். நாளுக்குநாள் கச்சேரிகள் அதிகரிக்கவேண்டும். ஆனால் அவற்றை ஒழுங்கு செய்பவர்கள் காலம், நேரம், இடம், பக்கவாத்தியம், 'மைக்' முதலியவற்றைக் கொஞ்சம் கவனித்துக்கொண்டால் விசேஷமானதாயிருக்கும்.

நவீன ஒவியல் விதிகளுக்கமையக் கட்டுப்பட்டு. பல பேர் இருந்து பார்க்கக்கூடிய விசாலமான கச்சேரி மண்டபங்கள் நம்நாட்டில் குறைவுதான் அப்படியே இருப்பினும் கோயிலுக்குள்ளேதான் அவை இருக்கும்: இவற்றில் கச்சேரிகளை வைத்தால் வெளியே நிற்பவர்கள் (நிற்பாட்டப்படுபவர்கள்) பாடகரின் குரலைமட்டும்தான் குழாய் வழியே கேட்க முடியும். இதுமுற்றிலும் தனிப்பட்ட பிரச்னை!

எப்படிருந்தாலும், இசையார்வம் கடல்போல் பொங்கிவரும் இக்காலத் தில் சங்கீதக் கச்சேரிகளை கோயில்களில் வைப்பதால் இளம் கலைஞர்களின் கேள்வி ஞானம் வளர்வதற்கு ஏதுவாயிருப்பதுடன் பொது மக்களுக்கும் உபயோகமானதோர் பொழுதுபோக்காகவும் இருக்கும் என்பது திண்ணம்.

நல்லூர் கந்தசுவாமி கோயில் வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் போன்ற சில கோயில்களில், திருவிழாக் காலங்களில் ஏன் மற்றும் விசேஷ தினங்களிலும்கூட, சங்கீத கதாப்பிரசங்கங்கள் நடப்பது இப்பொழுது பல வருடங்களாக இருந்துவரும் வழக்கம். இனிமையான இசையுடன் சேர்ந்து அறிவுக்குணவு தரும் பெரிய கருத்துக்களையும் தத்துவங்களையும் கலந்தளிக்கும் நிகழ்ச்சியே கதாகாலக்ஷேபம். இதுவுமன்றி பகவான் சந்நிதானத்தில் உண்மையான பக்திரஸம் சுரப்பதற்கும் இது மிகவும் ஏற்றது. மேற்படி கோயில்களில் ஆயிரக்கணக்கானோர் அமைதியாக உட்கார்ந்து ஒவ்வொரு கதையையும் ஆதியோடந்தம்வரை கேட்டு இன்புறுகிறார்கள்.

கதாப்பிரசங்கம் செய்யும் வித்வான்கள் ஈழத்திலேயும் பலர் இருக்கிறார்கள். இவர்களை திருவிழாக் காலங்களில் பிற கோயில்களிலும் நன்றாகப் பயன்படுத்த முடியும்.

இந்தியாவில் கோயில்களில்மட்டுமல்ல, பஜனை மடங்களிலும், சாதாரண பொது இடங்களிலும்கூட ராமாயணம், மகாபாரதம், ஸ்கந்த புராணம் முதலிய பக்திக் காவியங்கள் மாதக்கணக்காகத் தொடர்ந்து நடைபெறும். கலாபிமானிகளும் பொது ரஸிகர்களும் வித்துவான்களுக்குத் திருப்தியான முறைப்படி வேதனம் முதலிய சலுகைகளை வழங்கி கௌரவிப்பார்கள்.

இங்கேயும் இவ்வழக்கம் நன்றாக முன்னேறவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாயன்மார் முதல் பாரதியார்வரை கூறும்

# "நெஞ்சில் ஓர் ஆலயம்"

வெ. சு. நடராசா

ஆலயம், கோவில் என்ற பதங்கள் ஒரே பொருளை உணர்த்தும் இரு சொற்கள். ஆலயம் என்பதை ஆ-லயம் எனப் பிரிக்கலாம். 'ஆ' என்பதற்கு ஆன்மா என்று பொருள். 'லயம்' என்பதற்கு லயிப்பதற்கு அல்லது சேருவதற்கு உரியது என்பது பொருள். ஆகவே ஆலயம் என்பதற்கு கடவுளது திருவடியில் ஆன்மா லயிப்பதற்கு உரிய இடம் என்பது விளக்கம்.

'ஆ' என்பது ஆணவ மலத்தையும் 'லயம்' என்பது அடங்கியிருத்தலையும் குறிக்கின்றமையால் ஆலயம் என்பதற்கு ஆணவ மலம் அடங்குவதற்குரிய இடம் என்றும் பொருள் கூறலாம். 'நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்' என்ருல் என்ன அர்த்தம். மனசாரப் பொய்யைச் சொல்லக்கூடாதுஎன்பதுதானே. அப்படியாஞல் மனம் நெஞ்சு ஆகிய இரண்டும் ஒன்றையே குறிக்கின்றன என்பது தெளிவு ஆலயத்திற்குக் கோயில் அல்லது கோவில் என்றும் ஒருபெயர் உண்டு. அதனைக் கோ-இல் எனப் பிரித்துக் கோ - கடவுள் - இல் தங்குமிடம் எனவும் புணரியல் கற்பித்து வியாக்கியானம் செய்வார்கள் பண்டிதர்கள்: 'ஆ' என்பதை ஆண்டவன் என்றும் 'லயம்' என்பதைத் தங்கியிருக்கும் இடம் என்றும் பொருள்கொண்டுஆண்டவன் தங்கியிருக்குமிடம் என்றும் கூறலாம். இப்படியே அரசன் அல்லது பதி அல்லது தலைவன் தங்கியிருக்குமிடமாகையால் கோவில் என்றும் கோயில் என்றும் விரிவான பொருள் கொள்வர் பெரியோர்.

### வழிபடுமிடம்

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்றனர் தமிழ் மூதாட்டி ஒளவைப் பாட்டி. ஆலயம் என்ற பதம் வடசொல்லா, தென்சொல்லா? என்றெல்லாம் ஆராய்ச்சி வேண்டாம் நமக்கு இங்கே. மனித சமுதாயத்துக்கு ஆலயவழிபாடு இன்றியமையாதது என்பது இந்த நாட்டில் நிலவும் நான்கு சமயங்களும் ஒத்துக்கொள்ளும் ஒருமுடிந்த முடிபாகும். ஒருநாமம் ஓர்உருவம்ஒன்றுமில்லாத இறைவனுக்கு ஓர் உருவம் எதற்கு என்று வாதாடும் சமயங்கள்கூட அந்த உருவமில்லா ஆண்டவனை வழிபட ஓர் இடத்தை ஏற்படுத்திக்கொள்ளுகின்றன. அந்த ஓர்இடமே ஆலயமாகும். உருவவழிபாட்டையெதிர்க்கும் சமயங்கள் கண்டகண்ட இடங்களிலெல்லாம் இறைவனைத் தொழுவதில்லை. ஒருநாமம் ஓர் உருவம் ஒன்றுமில்லாத எம்பெருமானுக்கு எமது சைவசமயமோ, ஆயிரம் திருநாமம்சொல்லி ஆயிரமாயிரமிடங்களை யெல்லாம் வழிபடுமிடங்களாகக்கொள்ளுகின்றது. அந்த இடங்களில்ஒன்றுதான் நெஞ்சு. நெஞ்சில் ஓர் ஆலயத்தை அமைத்துக்கொண்டால் வேறு கல்லாலும் மண்ணாலும் எழுப்பிய ஆலயம் அல்லது கோயிலின் தேவை அருகிவிடும் என்பதே பல ஆன்ருேர்களின் அறிவுரையாகிவிடும். திருக்கோயில் உள்ளே சென்றுதான் இறைவனைத் தரிசிக்க வேண்டும் என்ற ஏற்பாடு தளர்ந்துவிடும். ஆலயப் பிரவேசம் என்ற பிரச்னைக்கே இடமில்லாதுபோய்விடும். இதை அறிந்துகொள்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### நெஞ்சமே கோயில்

'நெஞ்சமுமக் கேயிட
மாகவைத்தேன்
நினையாதொரு போது
மிருந்தறியேன்'

என்றெல்லாம் சூலை நோயால் துவண்டுகொண்டிருந்த நாவேந்தர் நாவுக்கரசர் தனது நெஞ்சத்தையே இறைவனுறையும் ஆலயமாக அர்ப்பணம் செய்துநின்றதுகூர்ந்துநோக்கத்தக்கதாகும்.

'நெஞ்சே நீநினையாய்-நிமிர்
புன்சடை நிர்மலனை
மஞ்சாடுமலை மங்கை மணாளனை
நெஞ்சே நீநினையாய்'

என்று மேலும் பாடுகிருர் அப்பர் சுவாமிகள். ஆலயத்தில் போய்த்தான் கடவுளை நினைக்கவேண்டும் வேறேரிடத்திலும் நினைக்கக்கூடாது என்று அப்பாடிகள் கூறவில்லை. நின்மலனை நினைப்பதற்கு ஏற்றிப் பணிவதற்குத் தகுந்த இடம் நெஞ்சு என்று ஐயந்திரிபற அறுதியிட்டுக் கூறுகிருர் நமது 81 வயது நிரம்பிய பிரமச்சாரி நாவுக்கரசர் தமது முதிர்ந்த அனுபவத்திஞலே.

### கயிலைக்காட்சி

இதே நாவரசர் இறைவன் திருக்கோலத்தைக் கயிலையில் காணவேண்டி யாத்திரை மேற்கொண்டார். இரவும் பகலும் நடந்தார். காடு, மலை, நாடு, நகரங்களையெல்லாம் கடந்தார். இறுதியில் காசியை அடைந்து கங்காநதியையும் கடந்து சென்றார். காலால் நடந்து கால்கள் தேய்ந்து போயின. தவழ்ந்தும், உருண்டும், புரண்டும் கயிலை நாதனைத் தரிசித்தல்லாது திரும்பமாட்டேன் என்று சத்தியாக்கிரகஞ் செய்து நின்ற அப்பர் சுவாமிகளுக்கு இறைவன் இரங்கி ஒரு முனிவரைப்போல் தோன்றிப் பக்கத்தே யிருக்கும் திருக்கழுக்குன்றத்திலே முழுகித் திருவையாற்றிலே கயிலைக்காட்சியைக் காண்பாயாக என்று கூறி மறைந்தார். முனிபுங்கவர்பணித்தவாறேசெய்துகயிலைநாதனைக் கண்டுகொண்டவர்தான் அன்புக்கு அத்தாட்சியாகத் திகழும் மருள்நீக்கியார் என்ற மறுநாமம் பூண்ட நமது நாவுக்கரசர்.

கயிலையில் இறைவன்திருக்கோலத்தைக் காணப் பகீரதப் பிரயத்தனம் செய்த இந்த நாவுக்கரசர் மேலும் என்ன சொல்லுகிருர்.

'தேடிக்கண்டுகொண்டேன் -
திருமாலொடு
நான்முகனும்
தேடித் தேடொணாத்
தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டுகொண்
டேன்'

என்று அழுத்தம் திருத்தமாகக் கூறிவிட்டார். இங்கே ''என்னுள்ளே'' என்பது வேறு ஓர் இடமுமல்ல நெஞ்சினைத்தான். எனவே நெஞ்சிலே ஓர் ஆலயம் அமைத்துக்கொண்டால் கோயில் குளம், காடு, மேடு எல்லாம் அலையவேண்டியது இல்லை என்பது இவர் அனுபவரீதியாகக்கண்டஉண்மையென்பது புலஞகும்.

### மனமே கோயில்

''கரவாடும் வன்னெஞ்சக்
கரியானைக் கரவாமல்
விரலாடும் பெருமானை
விடையேறும் வித்தகனை
அரவாடச் சடைதாழ
அங்கையி னனலேந்தி
இரவாடும் பெருமானை
என்மனத்தே
வைத்தேனே''

இங்கேயும் அடிகளார் என் மலத்தேவைத்தேனேஎன்று கூறுவதிலிருந்து என்ன அறிகிருேமென்ருல் அகத்தை, மனத்தைஆலயமாக அமைத்துக்கொண்டமையிஞல்தான் விடையேறும் பெருமான் தன்னிடம் கோயில் கொண்டருளிஞன் என்பதைத் துலாம்பரமாக வெளியிடுகின்ருர்.

''திருவே என் செல்வமே
......தேனே
......என்னூனே ஊனின்
உள்ளமே உள்ளத்தி
னுள்ளே நின்ற கருவே
என் கற்பகமே ...அமர
ரேறே''

என்று பாடிய திருத்தாண்டகத்தையும் உற்று உணர்ந்தால் நமது சுவாமிகள் நெஞ்சில் ஓர் ஆலயத்தின் அவசியத்தை உணர்த்தியது போல் வேறு ஒருவரும் குறிப்பிட்டதாகத் தெரியவில்லை. 80 வயதைத்தாண்டிய நாவுக்கரசர் தமது நெஞ்சிலோர் ஆலயத்தின் அவசியத்தை அறிவுறுத்துகிருர் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

### நாதன் உள்ளிருக்கின்ருன்

சித்தாந்தம் என்பது சித்தர்கள் கண்ட முடிபு என்பர். தமிழ் மக்களில் பெரும்பாலோர் சைவசித்தாந்திகள். சைவசமயத்திலே பல சித்தர்களைப்பற்றிப் பேசப்படுகிறது. அவர்களில் பதினெட்டுச் சித்தர்களைப்பற்றித்தான் பெரும்பாலும் கூறுவார்கள். அந்தப் பதினெட்டுச் சித்தர்களில் ஒருவர் என்ன சொல்லுகிருர் என்று சிறிது சிந்திப்போமாஞல் போதும்.

''நட்டகல்லைத் தெய்வ
மென்று நாலுபுட்பம்
சாத்தியே
சுற்றிவந்து முணு
முணென்று சொல்லும்
மந்திரம் ஏதடா
நட்டகல்லும் பேசுமோ
நாதன் உள்ளிருக்கையில்
சுட்டசட்டி சட்டுவம்
கறிச்சுவை யறியுமோ?''

என்று கேள்விக்குறியோடு நிறுத்துகிருர் இந்தச்சித்தர். நாதன் இறைவன் உள்ளிருக்கையில் அதாவது உள்ளத்தில் இருந்து விட்டால் பின்னர் கல்லையும் செம்பையும் கடவுள் என்று ஏன் கும்பிட வேண்டும். புஷ்பங்கள், மலர்கள் தூவி மந்திரம் சொல்லி ஏன் வழிபாடு செய்ய வேண்டும் என்றும் தேவையில்லையே இறைவனை எமது நெஞ்சிலே இருத்திவிட்டால், நட்ட கல்லுந்தான் பேசுமோ என்று கேட்கிருர். இது எப்படியென்ருல் மண்ணிஞலே செய்யப்பட்டுத் தீயிஞலே சுட்டு எடுக்கப்பட்ட சட்டியில் எவ்வளவு சுவையான கறி அதனுள் இருந்தாலும் அந்தக் கறியின் சுவையை அறியுமோ அந்தச் சட்டி! இல்லையே என்று உதாரணமும் காட்டுகிருர். இப்படித்தான் எம்முள் இருக்கும் இறைவனின் அருமை பெருமைகளையெல்லாம் நாம் அறிந்துகொள்வதில்லை என்று அறிவுறுத்துகிருர் இந்தச் சித்தர். இதே சித்தர்கூட நெஞ்சில் ஓர் ஆலயத்தை அமைக்கவேண்டிய அவசியத்தை மறைமுகமாக வற்புறுத்துகிருர் என்பது வெள்ளிடைமலையல்லவா?

### நீண்டகாலம் வாழலாம்

உலகெலாம் அநேக கோயில்கள் இருந்தாலும் ''கோவில்'' என்று தமிழ் மொழியில் குறிப்பிடும் போது தில்லை மூதூரில் இருக்கும் சிதம்பரத்தையே குறிக்கும். சிதம்பரத்தின் மறுபெயர்களில் ஒன்று கோயில். இங்கே எல்லாம் வல்ல இறைவன் நடராஜஞகக் காட்சியளிக்கின்ருன் ஏன்? அண்டசராசரங்களையும் படைத்துக் காத்து அழிக்கும் இறைவன், சதா ஆடிக்கொண்டேயிருக்கின்ருன். சிதம்பரத்தில் ஆண்டவன் ஆடிஞல்தான் அகிலமே ஆடும். பஞ்சபூதங்கள் ஆடுகின்றன. காற்று, கடல், ஆகாயம், பூமி, விண்ணில் தோன்றும் சூரிய, சந்திர, நட்சத்திரங்கள் அனைத்தும் ஆடுகின்றன. மனிதனே ஏன் ஆடுகின்ருன். அவனது இருதயம்ஆடுவதஞலன்ருே. இருதயம் ஆடாமல் நின்ருல் மனிதன் பிணம் ஆகிவிடுகின்ருன். ஆண்டவன் ஆடாமல் நின்ருல் அன்றே உலகமும் சுக்குநூருகி அழிந்துவிடும். எனவே அங்கே கோயில் கோயிலாகிய சிதம்பரத்தின் கண்ணே, இறைவன் ஆட அகிலமே ஆடுகின்றது. இங்கே மனக்கோயிலாகிய நெஞ்சிலே இறைவன் உறைய இடம் வகுத்துக்கொண்டோமாஞல் நெஞ்சில் ஆண்டவன் குடிபுகுந்து தினமும் ஆடிக்கொண்டேயிருப்பான். எனவே எங்கள் இருதயமும் எப்போதும் ஆடிக்கொண்டேயிருக்கும். நாடும் துன்பமின்றி இன்பமாக நீண்ட காலம் வாழலாம்.

### இறவாதிருக்க மருந்து

மேற்கூறிய கருத்தையே துறவிகளில் ஈடு இணையற்ற துறவியாகிய பட்டினத்தடிகளும் பின்வரும் செய்யுளால் விளக்குகின்ருர்.

''பிறவாதிருக்க வரம்
பெறல்வேண்டும்
பிறந்துவிட்டால்
இறவாதிருக்கமருந்துண்டு
காணிது வெப்படியோ
அறவார் புகழ் தில்லையம்
பல வாணரடிக்கமல
மறவாதிருமன மேயது
காணன் மருந்துனக்கே''

### இறைவர் உள்ளத்து ஒடுக்கம்

சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா? என்று கேட்டு ஒளவையாரைத் திணறவைத்த சுப்பிரமணியக் கடவுளுக்கும் ஒளவையாருக்கும் நடந்த கலாவிஞேதத்தில் ஒளவையாரின் கல்விச் செருக்கை

(13-ம் பக்கம் பார்க்க)


"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ்
(Nylon & Cotton)

லேடன் காமென்ஸ்
74A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 330

Modern Scientific School of Tailoring
நவீன தையற் கலாசாலை




வெளிநாட்டில் பயிற்சி பெற்ற பிரபல தையற் கலை நிபுணர்களால் ஆண்களுக்கும், பெண்களுக்குமான எல்லா உடைகளையும் விஞ்ஞான முறையில் வெட்டுவதற்கும் தைப்பதற்கும் சிறந்த விளக்கப் படங்களுடன் தபால் மூலம் போதிக்கப்படுகிறது. கொழும்பில் இயங்கிக்கொண்டிருக்கும் இத்தையற் கலாசாலை இப்பொழுது யாழ் நகரில் இதன் கிளைக்காரியாலயத்தை ஆரம்பித்துள்ளது. ஏழு மாதங்களில் நீங்களுமொரு சிறந்த தையற்கலை நிபுணராகி, 'டிப்ளோமா' பத்திரத்தையும் பெறலாம்.

விபரங்களுக்கு நேரில் விண்ணப்பியுங்கள் அல்லது எமக்கு எழுதுங்கள்.

இக்கலாசாலை அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பெற்றது.

மனேஜர்: M. S. T.
95/3, Stanley Road,
JAFFNA.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுநாவல்

# 'தீபச்சுடர்'

— "அன்புமணி" —

(சென்றவாரத்தொடர்ச்சி)

ஏன் நிறுத்திவிட்டீர்கள்? இதை நீங்கள் எங்கே படித்தீர்கள்?

எங்கும் படிக்கவில்லை, நானாகத்தான் சொல்கிறேன்!

தீபனின் எழுத்துக்களை ஞாபகமூட்டுகின்றன உங்கள் வசனங்கள்.

தீபனா? அவர் கதைகளை நீங்கள் படித்திருக்கிறீர்களா?

ஒன்றுகூட விடாமல் படித்திருக்கிறேன்; அவர்தான் எனக்குப் பிடித்த எழுத்தாளர்.

திடீரென்று மேலெழுந்து ஆகாயத்தில் மிதந்தான் தீபன். அவன் இதுவரை எழுதியதே ஆக இருபதோ இருபத்தைந்தோ கதைகள்தான். அதற்குள் பிடித்த எழுத்தாளர் வரிசையில் இடம்பெற்று இப்படி ஒரு அழகிய பெண்ணின் உள்ளத்திலும் இடம்பெறுவதென்றால்...? அதுவும் அவள் எழுத்தைக் கண்ட மாத்திரத்திலே இனம்புரிந்து அறிந்துகொள்ளும் அளவுக்கு அவள் தீபனின் எழுத்துக்களில் ஊறிப்போயிருந்தாள் என்றால்...? தீபனைப்பொறுத்தவரை, வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாத ஒரு புதுமையான அனுபவம் இது.

என்ன யோசிக்கிறீர்கள்?

தீபன் பாக்கியசாலி இல்லை. திறமைசாலி.

சரி நீங்கள் எழுதுங்கள்.

தீபன் சொல்லிக்கொண்டே போனான். அவள் எழுதிக்கொண்டே போனாள். பத்து நிமிடங்களுக்குப் பிறகு தீபனின் வாய் ஓய்ந்தது. அவள் கையும் நின்றது. அத்தனை நேரமும் புயல் வேகத்தில் தீபன் கொட்டித் தள்ளிய வார்த்தைகளை இரண்டே பக்கங்களில் சுருக்கெழுத்துக் கூட்டில் அடக்கியிருந்தாள் அவள்.

எழுதிமுடிந்ததும் 'அடேயப்பா. நீங்கள் ஒரு டுப்ளிக்கேட் 'தீபன்' என்றாள் அவள்.

'ஏன்?'

சற்றுமுன் நான் கூறியதைவைத்தே அற்புதமான ஒரு சிறுகதை புனைந்திருக்கிறீர்களே!

இலக்கிய விமர்சனத்தில் வல்லவளாகத் தீபனுக்கு அவள் தோற்றினாள்.

நல்லது இந்தக் கதையை நல்ல தமிழில் விரிவாக்கி எழுதித் தருகிறீர்களா.

ப்போ முடியாது. நாளைக் காலையில்தான் தரமுடியும்.

சரி நாளைக்காலையில் கண்டிப்பாகக் கொடுத்துவிட வேண்டும்.

ஓ! தாராளமாக.

அடுத்தநாட்காலை தீபன் காலையுணவை முடித்துக் கொண்டு அறைக்கு வந்தபோது அந்தப் பெண்ணும் வந்துசேர்ந்தாள்.

'அற்புதமான படைப்பு' என்று சொல்லிக்கொண்டே முதல்நாள் தீபன் சொல்லத்தான் காகிதத்தில் வடித்திருந்த கதையை அவனிடம் கொடுத்தாள்.

தீபன் அதை ஒருமுறை படித்துப் பார்த்தான். அவளுடைய இரண்டு வார்த்தை விமர்சனம் சரியானதே என்பதை அவனுடைய மனமும் ஒப்புக்கொண்டது. கதையைப் படித்து முடித்ததும் 'ஆமாம் இதற்கு என்ன தலைப்பு இடப்போகிறீர்கள்' என்று கேட்டாள் அந்தப் பெண்.

தீபன் சிரித்துக்கொண்டே தன் சட்டைப்பையிலிருந்த பேனாவை எடுத்து அந்தக் காகிதக் கற்றையின்மேல் எதையோ எழுதி அவளிடம் கொடுத்தான்.

'இதயக்குரல், —எழுதியவர்- 'தீபன்'

ஆச்சரியத்தால் அசந்துபோய் நின்றாள் அவள்.

'தீபன் நீங்களா?'- நீங்கள்தான் தீபனா?' ஆச்சரியத்தால் பிளந்திருந்த அதரங்களிலிருந்து அவளையுமறியாமல் வெளிவந்தன இவ்வார்த்தைகள் அதில் ஆனந்தம், அற்புதம், அடக்கம்' ஆர்வம் அத்தனையும் பிரதிபலித்தன,

மௌனமாகத் தலையசைத்தான் தீபன்.

அவனையே இமை கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்த அவள் சட்டென்று தலையைக் குனிந்துகொண்டு 'என்னை எப்படி ஏமாற்றிவிட்டீர்கள். எனக்கு ஒரே ஆனந்தமாயிருக்கிறது' என்றான்.

'அடடே ஏமாற்றுவது கூட ஆனந்தமளிக்குமா? ஆச்சரியமாயிருக்கிறதே!' என்றான் தீபன், விஷமச் சிரிப்புடன்

'நீங்கள் யார் என்பதை இவ்வளவுநாளும் சொல்லவேயில்லையே?'

'நீங்களும்தான் உங்கள் பெயரை இன்னும் சொல்லவில்லை'

நாக்கைக் கடித்துக்கொண்டான் அவன் ஏதோ தவறு செய்துவிட்டவனைப் போல்.

'என் பெயர் திலகவதி'

'ஓ!' மகிழ்ச்சி பொங்கக் கூறினான் தீபன்.

மாலினி, லோசனி, ரஞ்சனி, ராகினி என்பன போன்ற புதுமைப்பெயர்களைவிட புனிதவதி, பூங்கொடி, சாவித்திரி, சகுந்தலை போன்ற பழமைப் பெயர்களைக் கேட்கும்போது ஒரு புனிதமான உணர்ச்சி உள்ளத்தில் சுரப்பது போல் அவனுக்கு ஒரு பிரமை. 'திலகவதி' என்ற பெயர் ஏனோ அவன் உள்ளத்தை மலரச் செய்தது.

'உங்கள் பெயர்?' திலகவதி கேட்டாள்.

'என் பெயர் திருநாவுக்கரசு!'

'இலக்கிய உலகில் தீபன். அப்படித்தானே?'

'அதுதான் தெரிந்து கொண்டீர்களே!'

'அதுசரி. நீங்கள் ஏன் நிறைய எழுதுவதில்லை, சிறு குழந்தையிடம் மிட்டாயைக் காட்டிவிட்டு மறைப்பதுபோல, அவ்வப்போது அற்புதமான கதைகள் மூலம் இலக்கிய உள்ளங்களில் ஆசையைத் தூண்டிவிட்டு அப்புறம் அந்தர்த்தியானமாகி விடுகிறீர்களே!'

'போதிய ஓய்வில்லை. அதுதான் காரணம்.'

'அதுதானா? இல்லை சோம்பலா?'

'இரண்டும்தான்.'

'இனிமேல் அது முடியாது.'

'ஏன்?'

தினம் ஒரு கதை நீங்கள் எழுதாவிட்டால் நான் உங்களை விடப்போவதில்லை.'

'அது எப்படி முடியும்?'

'நேற்று முடிந்ததே!'

'எனனால் ஒரு எழுத்துக் கூட எழுத முடியாது. சொல்லவேண்டியதைச் சொல்கிறேன். எழுதுவதெல்லாம் உங்கள் பொறுப்பாயிருக்கும்.'

'அதுஎன் பாக்கியம். இனிமேல் உங்களுக்குக் கிடைக்கும் ஓய்வுநேரத்தில் ஒரு நிமிடத்தைக்கூட வீணாக்கக் கூடாது எதையாவது சொல்லிக்கொண்டேயிருங்கள். நான் எழுத்து ரூபத்தில் அவைகளை வடித்து உங்களிடம் சமர்ப்பித்து விடுகிறேன்.'

'மிக்க நன்றி'

அன்றிலிருந்து தீபனின் இலக்கியசேவை வளர்ந்தது நாளொரு கதையும் பொழுதொரு கவிதையுமாகப் படைத்துத் தள்ளினான். திறமை, ஆர்வம், வசதி இந்த மூன்றும் சேர்ந்தால் செயலுக்குக் கேட்க வேண்டுமா? பாரதியாரிடம் சக்தி குடிகொண்டு கவிதை பொழியச்செய்ததைப் போல திலகவதி தீபனை இயக்குவித்தாள்.

### அத்தியாயம் — 2

திலகவதியைப் பார்க்கும்போதெல்லாம் 'எங்கிருந்தோ வந்தான்' என்ற பாரதியாரின் கண்ணன் பாட்டுத்தான் தீபனின் உள்ளத்தில் குமிழிடும். அந்த எண்ண ஊற்றில் பிறந்தது 'எங்கிருந்தோ வந்தாள்' என்ற அவன் முதல்நாவல். அது வாரப்பத்திரிகைகளில் தொடர்கதையாக வந்தபோது வாசகர்களின் அமோக ஆதரவைப் பெற்றது. அதன்பலன் பல்வேறு பத்திரிகை ஆசிரியர்களும் தீபனின் நாவல்களை வேண்டி நின்றனர்.

தீபன் திகைத்தான். ஆனால் திலகவதி விடவில்லை. எத்தனை நாவல்களானாலும் படைப்பதற்குத் தயாராகியிருந்தான் தீபன். ஆனால் அவற்றை எழுதும் திலகவதியின் கதி? கரும்பு ருசி என்று வேருடன் சாப்பிடக் கூடாதல்லவா?

திலகவதி தீபனின் ஆட்சேபனையைப் பொருட்படுத்தவில்லை. உண்மையைச் சொல்லப்போனால் அவள்தான் அவனை மேலும் படைக்கும்படி தூண்டிக் கொண்டிருந்தாள். எத்தனை படைப்புக்களைக் கொடுத்தாலும் எழுதித்தருவது தன் பொறுப்பு என்று தட்டிக்கொடுத்தாள்.

இந்த அசுர முயற்சியின் பலன் மத்தியான இடைவேளை, தேநீர் இடைவேளை, காலை, மாலை, படுக்கை நேரம் என்று ஒரு நிமிஷம் கூட ஒய்வு ஒழிச்சல் இல்லாமல் இலக்கியப் படைப்புக்குப் பலியானதுதான். இரவு பகல் என்று பாராது இருவரும் உழைத்தனர். சிறு சிறு இடைவேளை நேரங்களில் படைப்பு வேலையையும் (அதாவது தீபன் சொல்வதைச் சுருக்கெழுத்தில் எழுதுவதையும்) நீண்ட இடைவேளை நேரங்களில் எழுத்து வேலையையும் மேற்கொண்டனர்.

ஒரு நாவலுக்கான இரண்டு அத்தியாயங்களைத் திலகவதி சுருக்கெழுத்திலிருந்து மொழி பெயர்த்துக் கொண்டிருந்தாள். ஏற்கெனவே மொழி பெயர்த்துக் கொடுக்கப்பட்ட மற்றொரு நாவலுக்கான இரண்டு அத்தியாயங்களைத் தீபன் படித்துத் திருத்திக் கொண்டிருப்பான்.

காலையில் சுருக்கெழுத்தில் எழுதும் அத்தியாயங்கள் மாலையில் சுத்தமான தமிழில் டைப் செய்தோ, எழுதியோ தீபனின் கைக்கு வந்துவிடும். அதே போல மாலையில் கூறப்படும் அத்தியாயங்கள் காலையில் பிரசுரத்திற்குத் தயாராக வந்துவிடும்.

சிலவேளைகளில் திலகவதி காரியாலய நேரத்திலேயே இவைகளை 'டைப்' செய்து தருவாள் அவள் வேலை செய்தது ஒரு பெரிய வர்த்தக ஸ்தாபனத்தின் காரியாலயத்தில் அரசாங்கக் காரியாலயங்களைப்போல் வேலையற்ற நேரங்களை இங்கு அதிகம் எதிர்பார்க்க முடியாது. அப்படியிருந்தும் திலகவதி அதைச் செய்து கொண்டு வந்தாள். இது சம்பந்தமாக காரியாலய நிர்வாகிகளின் ஆட்சேபத்திற்கோ கண்டனத்துக்கோ அவள் ஆளாகாதது ஆச்சரியம்தான்.

சில சமயங்களில் திலகவதி தீபனின் காரியாலயத்துக்கே வந்துவிடுவாள். அநேகமாக மத்தியான இடைவேளைகளிலும் அவ்வப்போது பின்னேரங்களிலும் திலகவதியைக் காண்பதென்றால் தீபனின் அறையிலோ அவர்கள் சொல்வதெழுதல் செய்து கொண்டிருப்பார்கள்,

இதுதான் ஆரம்பத்தில் குறிப்பிட்ட தீபனின் பொற்காலம். எட்டுப் பத்திரிகைகளில் ஒரே சமயத்தில் தீபனின் தொடர்கதைகள் வெளிவந்துகொண்டிருந்த காலம்,

இத்தனைக்கும் திலகவதிக்குத் தீபன் எதுவித பிரதியும் செய்யவில்லை. அவளும் அதை எதர்பார்க்கவில்லை. மங்கிப்போய்க் கிடந்த தீபனின் மாபெரும் திறமையை மக்கள் அறியும்படி செய்தவள் திலகவதி. அவனுக்கு ஏற்பட்டிருந்த அத்தனை புகழுக்கும் மூல காரணம் திலகவதி. அப்படியிருந்தும் தன் மாசற்ற, மதிப்புமிக்க சேவைக்கு எவ்வித சன்மானமுமின்றித் தொடர்ந்து செய்துகொண்டிருந்தாள் திலகவதி.

இதற்குக் காரணம் என்ன அன்பா? ஆசையா? ஆர்வமா? ஆத்ம திருப்தியா? அல்லது ... வேறு என்ன?

அவர்கள் காதலர்களல்ல; இலக்கிய சேவகர்கள். கணவன் மனைவியரல்ல; கர்ம வீரர்கள்.

திலகவதி செய்யும் மகத்தான தொண்டின் பெறுமதி அவளுக்கும் தெரியவில்லை. தீபனுக்கும் தெரியவில்லை. அப்படித் தெரிந்துதான் இருந்தாலும் அதற்கேற்ற பிரதிபலன் செய்வதற்குத் தீபனால் முடியுமா என்பது சந்தேகந்தான். ஆனாலும் தீபன் உள்ளத்தில் திடீரென்று ஒரு அதிசய ஆசை துளிர்விட்டது.

திலகவதியைக் கதாநாயகியாக வைத்துக்கொண்டு ஒரு மாபெரும் நவீனம் சமைக்க

(12-ம் பக்கம் பார்க்க)

---

சின்னஞ் சிறுகதை

# ஆண்டவன் எங்கே உள்ளான்?

"நீலா"

'இரீச்...!' என்ற பேரிரைச்சலுடன் சற்றே தயங்கி, மின்வெட்டும் நேரத்தில் புழுதியைக் கிளப்பி மறைந்தது அந்தக் கார். அதன் வேகமான தாக்குதலுக்காளான அம்மனிதப் பிண்டம் சாலையில் தூக்கி எறியப்பட்டு, செந்நீர் வாய்க்கால் கட்டி ஓட, துடிதுடித்துக்கொண்டிருந்தது. தும்பைப்பூவைப் போல் நரைத்திருந்த தலையிலும், காவிப்பிசுக்கேறிய கந்தலிலும் செவ்வண்ணம் மெல்ல மெல்லச் சாயம் ஏற்றியது. தகரக் குவளை, உருமாறி அருகே உருண்டு தன்னுள் அடைக்கலம் புகுந்திருந்த ஒன்றிரண்டு சில்லறைகளை தார்றோட்டில் தஞ்சமாக்கிவிட்டு மடிந்து கிடந்தது. சிறிய துணிமூட்டை ஒன்று கிழவனின் காலடியில் அவன் அணைப்புக்காக ஏங்கிக் கிடந்தது.

இதற்குள் சிறு கூட்டமொன்று அங்கே இரை கண்ட காக்கைக் கூட்டமாக மொய்த்து, வேடிக்கையில் வம்பு வார்த்தைகளை வரம்பின்றி வெளியிட்டு, இன்பம் கண்டது. மரணாவஸ்தையில் துடித்துத் துவண்ட அந்த உயிரைப் பற்றிக் கவலைப்பட அங்கே யாரும் இல்லை. ஆபத்து நேரத்தில் உதவி செய்யும் கருணை அங்கே நின்ற எந்த இதயத்திலும் இருக்கவில்லை; மாறாக 'எப்படி நடந்தது?' 'யாரிலே பிழை?', 'கார் நம்பரென்ன'. 'இந்தப் பிச்சைக்கார நாய்களே இப்படித்தான்:' 'உயிர் போயிட்டுதா இருக்குதா?' இவை போன்ற வாதப் பிரதிவாதங்கள்தான் கடல்மடை திறந்தாற்போல் பெருக்கெடுத்தன.

சிறிதுநேரத்தின்பின் 'ஜீப்' வண்டி ஒன்று சீறிக்கொண்டு வந்து நின்றது. நின்ற கூட்டம் 'நமக்கேண்டாப்பாவம்பு!' என்று விலகிச் சென்று மறைந்தது. துடித்துக் கிடந்த அக் கிழவனின் உடலைச் சுமந்துகொண்டு, ஜீப் வந்த வழியே திரும்பியது.

0 0 0

முப்பது நிமிடங்கள் கடந்து விட்ட சில வினாடிகளில் மாநகரசபைக்குச் சொந்தமான நாய்கள் பிடிக்கும் அவ்வண்டி ஆடி அசைந்து அவ்வழியே நடைபயின்றது. மிடுக்குடன் குரைத்தபடி முன்னோக்கிச் சென்ற நாய்க் கூட்டம் அவனின் கம்பி வளையத்துக்கஞ்சி, வாலைச் சுருட்டி காலுக்குள் வைத்தபடி பாய்ந்து பதுங்கி மறைந்தன. அந்த வெள்ளைநாய் சற்றே பின்தங்கிவிட்ட நேரம், அவனுக்கு ஒருரூபாய் ஆதாயமாக இருந்தது. மறுகணம் வளையத்துக்குள் மாட்ட மாட்டிக்கொண்ட கழுத்தை, விடுவிக்க முடியாமல் 'வாள் வாள்' என்று அந்நாய் கத்த, தன் இனத்தின் நிலைகண்டு ஓடிக் கொண்டிருந்த நாய்களில் ஒன்று நின்று திரும்பி முறைக்கிறது. மறுகணம் ஒரே பாய்ச்சல்! அவன் துடையில் ஒரு துண்டு எடுத்துவிட்டுத்தான் மறுவேலை என்பதுபோல் இருந்தது அதன்வேகம். எதிர்பாராத அத்தாக்குதல் அவனைத் தடுமாற வைத்தது. ஒருவினாடி அவன் கைப்பிடி தளர அச்சந்தர்ப்பத்தை எதிர்பார்த்தாற்போல் திமிறித்தன்னை விடுவித்துக் கொண்டது அகப்பட்ட வெள்ளை. இரண்டும் ஓடி ஒழிந்து கொண்டபோது இவ்வளவுக்கும் சாட்சியாக நின்ற மரங்கள் காற்றிலே சலசலத்தன. அதன் ஓசை:- 'ஆண்டவன் எங்கே உள்ளான்?' என்று கேட்பது போல் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி த் தி ப் பு

## துரத்தவேண்டிய நீது

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலுள்ள தொடர்பு பன்னூற்ருண்டுகட்குமுற்பட்டது இன்று இவ்விரு நாடும் ஒரே நோக்கத்துடன் உலக ஒற்று மையை நிலைநாட்ட உழைத்து வருகின்றன. இரு நாடுகளும் சனநாயக அரசியலை மேற்கொண்ட நாடுகள். சனநாயக அரசியல்முறை ஒருநாட்டில் நன்கு கைக்கொள்ளப்படுகிறதா என்பதை அந்நாட் டின் ஆளும் கட்சியினர் எதிர்க்கட்சித் தலைவரை நடத்தும் முறைமையிலிருந்து அறியலாம். அதை ஆதாரமாக வைத்து நோக்கின் இலங்கை சனநா யக வழியினின்று தவறியதில்லை என்றே எண்ணு கிறேன். அநீதியையும் ஓரஞ்சான்று நடத்துதலை யும் சனநாயகத்தை ஏற்ற நாடுகள் முற்ருகத் துரத்திவிடவேண்டும். யாவரையும் சமசந்தர்ப் பத்தையும் நீதியையும் பெறக்கூடியதாயிருக்க வேண்டும்.

டாக்டர் ராதாகிருஷ்ணன்

## பெரிது பெரிது சத்தியம்...தர்மம்

உலகத்திலே மனித வரலாற்றில் மிகப்பெரிய காரியம் யாதெனில் மனிதனின் லெளகிக சித்திக ளல்ல. அவனுல் நிறுவப்பெற்றுப் பின்னர் இடித்து வீழ்த்தப்பெற்ற ஏகாதிபத்தியங்களல்ல; சத்தியத் தையும் தர்மத்தையும் தேடிக்கொண்டு யுகத்தி ற்கு யுகம் அவனுடைய ஆத்மா வளர்ச்சியடைந்து வந்திருக்கின்றதே அதுதான் மிகப்பெரிய காரிய மாகும் இந்த ஆத்ம வளர்ச்சிக்காகப் பாடுபடுகி றவர்கள் மானிட சமுதாயத்தின் ஞானவரலாற் றில் நிலையான இடத்தைப் பெற்றுவிடுகின்றனர். காலதேவதையானவள் எவ்வளவு இலகுவாக மற் றவர்களை மறந்து விடுகின்ருளோ அதேபோல வீரர்களையும் புறக்கணித்து விடுகிருள். ஆனுல் மகான்கள் என்றென்றுமே காலதேவதையின் நினைவைவிட்டு அகலாது இருக்கின்ருர்கள்.

— காந்தியடிகளின் சத்தியவாழ்க்கை பற்றி ஓர் உலகப் பெரியார்.

## சுவர்க்கம் எங்கே?

என்னைப் பொறுத்த மட்டில் முத்திக்குவழி எங்கி ருக்கிறதெனின் எனது தேசத்துக்காகவும் மனித வர்க்கத்துக்காகவும் ஓயாமல் பணியாற்றிக்கொண் டிருப்பதிலேதான்.

—காந்தியடிகள்

## 'தேசிய சிறை'

உலகிலுள்ள பல நாடுகளை நான் நேரிற்சென்று பார்த்ததுண்டு எங்கு சென்ருலும் மனிதனின் இயற்கைக் குணங்கள் ஒரேமாதிரியாகத்தான் இருக்கக் கண்டேன். முதன்முதலாக (1944—45ல்) சீனத்துக்கு நான் செ றிருந்தபோது அங்கு கோமிங்ராங் ஆட்சி நிலவியது. அந்நாட்களில் அங்குள்ள பேராசிரியர்களுடனும் மாணவர்களுடனும் நான் கலந்து பேசியதுண்டு. அதுசமயம் சீனமக்களின் மனப்பான்மையானது இந்திய மக்களின், மனப் பான்மையிலும் யப்பானியரின் மனப்பான் மையிலும் வேருனதாக இன்னென்ருக இருந்தது. ஜனநாயகத்தை அல்லாது வேறுமுறையான அர சியலைக் கைக்கொண்டதொரு நாட்டிலே தனிப் பட்டவர்கள் அபிப்பிராயம் வெளியிடுவதுதான் விநோதமாக இருந்தது. அப்போது கோமிங்ராங் சீனத்தில் மக்கள் தாராளமான அரசியல் கொள் கையுடையராக எம்முடன் கலந்து பேசினர். சியாங்கை ஷேக்கையும் அவர்தம் கொள்கைகளை யும் அவர்கள் கண்டித்தனர்.

1952-ல் இரண்டாம் முறையாக நான் சீனுவுக் குச் சென்றிருந்தபோது அங்கு கொம்யூனிஸ்ட் ஆட்சி ஏற்பட்டிருந்தது. முன்னர் நான் கலந்து பேசிய பேராசிரியர்கள் மாணவர்களை மறுபடியும் சந்தித்துப் பேசினேன். அப்போதும் அவர்கள் என்னுடன் மிக அன்பாகக் குழைந்து பேசினர். பழைய பழக்கத்தில் அரசியலைப்பற்றி நான் பேச ஆரம்பித்தபோது சிலர் பேசாதிருந்தனர். வேறுசிலர் அங்கிருந்து மெல்ல நழுவி விட்டனர். பழையநாட்போல் வெளிப்படையாகப் பேசி னுலோ அன்றேல் அரசினரைக் கண்டித்தாலோ தாம் தொந்தரவுக்குள்ளாக நேரிடுமே என அவர் கள் எண்ணிஞர்கள் போலும்.

இந்தியா சுதந்திரம் பெறுமுன்னதாக, 'பிரிட் டிஷ் ஆட்சி வேணுமென்ருல் இந்திய மக்களைச் சிறையில் அடைக்கலாம். ஆனுல் அவர்கள் உள் ளங்களில் எழும் எண்ணங்களையும் உணர்ச்சியை யும் அரசாட்சி சிறை செய்ய முடியாது' என்று அந்நாளில் பலரும் வீறுமொழி பகன்ற அதே சீனத்தில் இன்று மக்களின் உடல் மட்டுமன்று உள் ளமும் சிறையிலடைக்கப்படலாமென்பதைக் கண் டேன்.

சீனத்தில் நான் கண்ட இன்னெரு காரியம் குறிப் பிடப்படவேண்டியதொன்று. மாணவர்கள், தொழி லாளர், பெண்கள் ஆகிய யாவரும் தங்கள் வேலைத் தலங்களை நோக்கிச் செல்லும்போது ஆனந்தமா கப் பாடிக்கொண்டு அ ரி அணியாகச் செல்வ தைக் கண்டேன். ஆசியநாடொன்றில் இக்காட்சி அபூர்வமானதாக என் கண்களையும் மனத்தையும் தொட்டது.

நீண்ட காலத்துக்குச் சீனத்தில் வாழ்ந்துவரும் ஒருவருக்கு அங்குள்ள மக்களின் நாளாந்த வாழ் க்கை எவ்வித கிளர்ச்சியுமின்றி ஒரேமாதிரி மந்த மாகச் செல்வதாகவே தோன்றும்

சீனத்தில் பிரபல பத்திரிகைகள் பல்வேறுவித மான செய்திகளை வெளியிடுவதுடன் திரும்பத் திரும்ப ஒரேவிதமான ஆசிரிய வாசகம் உடைய னவாக இருக்கக் கண்டேன். இப்படித் திருப்பித் திருப்பி ஒரேமாதிரித் தலையங்கமெழுதுவதை ஜன நாயக ஆட்சி நிலைபெறும் நாடுகளில் காணவிய லாது.

பத்திரிகையாளர் பிராங் மொருயிஸ் 1957ல் இல ங்கையில் நிகழத்திய உரையில் ஒரு பகுதி)

நெல் உற்பத்தி செலவுகள் [2]

# நெல் விளைச்சலுக்கு செயற்கை உரம் அத்தியாவசியமானதா?

நெல் உற்பத்திச் செல வுகள்பற்றி இலங்கை மத் திய வங்கி வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கை ஒன்று, உரம் இடுவதால் விளைச்சல் சில இடங்களில் அதிகரித் துள்ளபோதிலும், கமக்கா ரர் அதன்மூலம் எதிர்பார்க் கும் அமோகமான விளைச் சல் பெறுவதற்கு நிலம், நீர், வசதி, சீதோஷ்ணம் முதலிய வேறு பல காரணங் களும் உள்ளன என்று கூறு கிறது

இலங்கையில் மிகவும் கூடு தலான உரத்தை உபயோ கிக்கும் மாவட்டம் மட்டக் களப்பு இங்கே சராசரி ஒரு ஏக்கருக்கு 262 ருத்தல் உப யோகிக்கப்பட்டது. ஆனுல் விளைச்சல் ஆக 27 புசல் தான், இதற்கு மாருக இலங் கையில் ஆகக்கூடிய (48 9) விளைச்சல் கண்ட பொலன் னறுவை மாவட்டம் ஏக்கர் ஒன்றுக்கு ஆக 14.1 ருத் தல் உரத்தையே உபயோ கித்திருக்கிறது. இதிலும் பார்க்க விசேஷம் என்ன வென்ருல் அனுராதபுர மாவட்டத்தில் ஏக்கர் ஒன் றுக்கு 52 ருத்தல் உரமே உபயோகிக்கப்பட்டது. இலங்கை முழுவதிலும் மிகக் குறைந்த தொகை இதுவே. ஆனுல் விளைச் சலோ ஏக்கருக்கு 38 புசல். இலங்கையின் சராசரி விளைச் சலுக்கு அதிகமானது.

யாழ்ப்பாண மாவட்டக் கமக்காரர் ஏக்கரில் கிட்டத் தட்ட 92 ருத்தல் உரத் தைத் தூவி 22 புசல் விளைச் சலையே பெற்றனர். யாழ்ப் பாணத்து சராசரி பரப்புக்கு பறைதானுமில்லை.

சாதாரணமாக ஓர் ஏக்க ருக்கு 392 ருத்தல் உரம் போடுவதே சிறந்ததென்று விவசாயப் பகுதி கமக்கார ருக்குச் சிபார்சு செய்துள் ளது. ஆனுல் சராசரியாக எந்த மாவட்டத்திலாவது இவ்வளவு தொகை உபயோ கிக்கப்படவில்லை.

மேற்கண்ட புள்ளிவிபரங் களிலிருந்து போதிய நீர்ப் பாசன வசதி, நல்ல இனத்து விதை நெல், களை கொல்லி களின் தாராளமான உப யோகம் முதலியவை இல் லாதவிடத்து, தனிய உரத் தால்மட்டுமே விளைச்சலை அதிகரிக்க முடியாதென்பது தெளிவாகிறது.

எல்லா மாவட்டங்களிலும் அதிகமாக உபயோகிக்கப் பட்ட உரம் அமோனியம் சல்பேட்.

களைகளும் பூச்சிகளும் இலங்கையின் எல்லாப்பகுதி

அது களைகொல்லிகளை உப யோகிப்பதிலும் பார்க்க பலிவானதென்று சிலர் கூறு கிருர்கள் பூச்சி கொல்லி களை சிறுவர் குழந்தைகளின் கைக்கு எட்டாமல் ஒதுக் கிப் பத்திரப்படுத்துவதும் இன்னெரு சங்கடம் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

களைகொல்லிகளுக்கும், பூச்சி கொல்லிகளுக்கும் ஆகக் கூடிய செலவு செய்த மாவட்டம் அம்பாறை- ஏக் கருக்கு ரூபா 7 86 ஆகக் குறைந்த செலவு செய்தது. களுத்துறை மாவட்டம்-

## விவசாயப் புலம்

களிலுமே நெல் விளைச்ச லுக்கு இடையூருகவிருந்து வருகின்றன மொத்த விளைச்சலில் இருபது வீதம் இவற்ருல் சேதமடைகிற தென்று கணிக்கப்படுகிறது.

இவற்ருல் கமக் காரருக்கு உண்டாகும் சரா

### — கலப்பை —

சரி செலவு ஏக்கர் ஒன்றுக்கு ரூபா 4 34, களைகொல்லி களுக்கும் பூச்சிகொல்லி களுக்கும் இவ்வளவு குறை ந்த தொகை செலவு செய் யப்படுவதற்கு கமக்காரர் பலவிதமான காரணங்களைக் கூறுகிருர்கள். களைகொல்லி மருந்துகள் நெற்பயிரையே தாக்குகிறதென்று சிலர் அபிப்பிராயப்பட்டார்கள். கையினுல் களைகளைப் பிடுங்கி அகற்றுவதே சிறந்த முறை யென்பது வேறு சிலருடைய அபிப்பிராயம். கூலியாட் களை அமர்த்தாமல் குடும்பத் திலுள்ளவர்களே களைகளைப் பிடுங்கக் கூடியிருப்பதால்

30 சதம் யாழ்ப்பாணக் கமக்காரர் ஏக்கர் ஒன்றுக்கு ரூபா 2 98 செலவு செய் தார்கள்.

ட்ராக்டர்கள், யந்திரக் கலப்பைகள் முதலிய உப கரணங்களின் வாடகைச் செலவைப் பொறுத்தளவில் வவுனியா மாவட்டம் முன் னணியில் நிற்கிறது இங்கே இவற்றிற்காக ஏக்கர் ஒன் றுக்கு ரூபா 95 35 செல வடப்பட்டது. கண்டி மாவட்டத்தில் ஆக ரூபா 2 63 தான் இவற்றிற்கான செலவு. யாழ்ப்பாண மாவட்டத்தில் ரூபா 47.74 செலவிடப்பட்டது;

இத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, எருமை முதலிய கமத்து மிருகங் களைத் தாபரிக்கும் செலவு வவுனியாவில் ஏக்கர் ஒன் றுக்கு ஆக ஐம்பத்து மூன்று சதம்தான். கேகாலை மாவட் டத்தில் இவற்றிற்கான செலவு ரூபா 49.12, யாழ்ப் பாணத்தில் இதற்கான செலவு ரூபா 8.38.

# அமைதி - ஒற்றுமை - சுதந்திரம் சமத்துவம் - விஞ்ஞானம்!

[கட்டுரை ஆசிரியர் விஜய குமார் பிள்ளை ஆந்திரப்பிர தேசத்தில்வாரங்கலிலுள்ள வட்டாரப் பொறியியல் கல் லூரி மாணவர். புதுடில்லி பயன்துறைஅரசியல்கல்விக் கழகம் நடத்திய போட்டி யில் வென்ற பரிசுக்கட் டுரை இது.]

அமைதியும் ஒற்றுமை யும், சுதந்திரமும் சமத்துவ மும், விஞ்ஞானமும் சமு தாயமும்—இவை குறித்த இலட்சியங்கள்தாம் மக்கள் குலத்தை வாழவைப்பவை.

மக்கள் குலத்துக்கு வளமும் உயர்வும வழங்கி நம்மை இவ்வுலகில் வாழத்தகுதி யுள்ளவர்களாகச்செய்பவை இந்த இலட்சியங்களே. ஆத லால் ஒருவர் இவ்வுலகுக்கு ஆற்றிய பணி என்ன என்று காணவேண்டுமாஞல் அவர் வாழ்க்கையால் இந்த இலக்கியங்களுக்கு என்ன பயன் உண்டாயிற்று என்று தான் காணவேண்டுமென் பது என் கருத்து,

மக்கள் குலத்தின் எதிர் காலம் எங்கே எனில், இந் தப் புனித இலட்சியங்களின் [illegible] காணவேண்டும். இன்று நம் அடிவானத்தில் [illegible]தாகக்

கறுத்துத்தோன்றும் ஐய மும் அவநம்பிக்கையுமான தீய கருமேகங்களிலே மக் கள் குலத்து எதிர்காலம் தெரியாது.

### தியாகிகள்

''சுதந்திரம் சமத்துவம், நீதி என்னும் இந்த இலட்சி யங்கள் காக்கவேண்டிய உடமைகளல்ல, அடைய வேண்டிய இலட்சியங்களா கும்'' என்கிருர் முன்னுள் அதிபர் டாக்டர் கிருஷ்ராதா ணன். இதுதான் உலகத்தின் மனச்சாட்சியும். இந்தமனச் சாட்சியின் குரலுக்குஉயிர்த்

வதற்குத் தங்கள் பதவிக் காலமும், வாழ்நாளுங்கூடக் காணுது என்று அவர்கள் கண்டார்கள் போலும். 1939லேயே நேரு கூறினுர்; ''இன்னமும், இன்னமும் காலம் கடந்துபோகிறது, எண்ணுது உலகம் தன் போக்கில் விரைகிறது; சிக் கல்கள் பெருகுகின்றன. இவற்றுக்கு ஏற்ப நாமும் மும்முரமாகவில்லையெனில் நாம் அழிந்தோம். மெத்த னமபக இருப்போர்க்கும், தயங்குவோருக்கும், நடப் பது நடக்கட்டும் நாமென்ன செய்ய' என்று நடப்பு

## இவையே மக்கள் குலத்தை வாழ வைக்கும் லட்சியங்கள்!!

தியாகிகள் போன்று செவி சாய்த்தார்கள் ஜான் எஃப். கென்னடியும், ஜவர்கலால் நேருவும். இதிலே அவர்கள் மும்முரமாக இருந்தார்கள். வாளாவிருத்தல் கூடாது. செயலாற்றவேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்தார் கள் ஆட்சி அதிகாரம் கைக்கு வந்ததுமே செயலில் இறங்கிவிட்டார்கள்.

அதன்பின் அவர்கள் முன் வைத்த காலைப் பின்வைக்க வில்லை. தங்கள் உள்ளத்தே வைத்துப் போற்றிய உயர் வான குறிக்கோள்களை அடை

களுக்கு அடிமைகளாக இரு ப்போருக்கும் அல்ல இன் றைய உலகம்.'

உலகத்தின் பிரச்னைகளை மடக்கி வெல்லவேண்டு மென்று அவ்வளவு துடி ப்பு! கென்னடியும் இதே போலத்தான். இவர் சொன் ஞர் 'சுற்றிச் சுழன்றடிக் கும் சூருவளியிலே அசையா மல் நிற்கமுடியாது; உலகம் முழுவதும் மாறுதல் காற்று வீசுகிறது.'

ஆகவே உலக அரசியல் பற்றிய அவர்களுடைய

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் நாட்டுக் கலைஞர்

# ஆடற் கலையை உயிருக்குயிராக காதலிக்கும் கிருஷ்சாந்தி!

'காலமெல்லாம் ஆடி ஆடி ஆடற்தெய்வத்துக்குப் பணிசெய்யப்போகிறேன்; என் இரத்தத்துடன் அது கலந்துவிட்டது; நடனக் கலைக்கு என்னையே நான் முற்றாக அர்ப்பணித்துவிட்டேன்.''

ஆடற்கலையை உயிருக்குயிராகக்காதலிக்கும் அழகுச் செல்வி கிருஷ்சாந்தி தான் என்னிடம் இப்படிக் கூறினார். ஏழு வயதில் மேடையிலாடி 'சபாஷ்' வாங்கியவர்! இப்போது எட்டு ஆண்டுகளுக்குப்பின் கலாபவனக் கலைஞர் கலைச் செல்வன் சுப்பையா அவர்களிடம் கற்றுத் தேறிய கலையை கலைஞர்களும், வித்தகர்களும், ரசிகர்களும் கூடியிருந்த அவையில் அரங்கேற்றினார்!

## 'நாட்டிய கலாஜோதி'

கலையரசு சொர்ணலிங்கம் 'நாட்டிய கலாஜோதி' என்ற பட்டத்தை வழங்கினார்!

சோழமன்னன் அவையில் பன்னிரண்டவது வயதில் மாதவியின் நடன அரங்கேற்றம் நடந்தது. அப்போது அவளின் ஆடற்திறன் கண்டு மெய்மறந்து மெச்சி 'தலைக்கோலரிவை' பட்டத்தையும், ஆயிரத்து எட்டுக்களஞ்சு பொன்னையும் வழங்கினான் சோழமன்னன்! கிருஷ்சாந்தியின் நடன அரங்கேற்றத்தின்போது கலையரசு வழங்கிய பட்டம் இதனைத் தான் நினைவூட்டுகிறது.

''பரதக்கலையை நான் முற்றாக இன்னும் பயின்றுவிடவில்லை. எனது குரு சுப்பையா மாஸ்டரிடம் எட்டாண்டுகள் பயின்றிருக்கிறேன். இன்னும்எவ்வளவோ கற்க இருக்கிறது'' என்று கிருஷ்சாந்தி கூறியது அவரது அடக்கத்தைக்காட்டியது.

மாதவியின் எதிர்காலத்தைப் பன்னிரண்டு வயதில் கண்ட மன்னன் எப்படி 'தலைக்கோலரிவை' பட்டத்தை வழங்கினனே. அதேபோன்றுதான்கலையரசுவும் பதினைந்து வயது கிருஷ்சாந்தியின் எதிர்காலத்தைக் கண்டு 'நாட்டியக் கலா ஜோதி' பட்டத்தை வழங்கினார்!

கூடச் சொல்லலாம். அவரிடம் நாட்டியம் பயின்றவர்கள் இலகுவில் அவர் அனுமதிபெற்று அரங்கேற்றத்தை நடாத்திவிடமுடியாது. இந்த விஷயத்தில் கிருஷ்சாந்தி அதிர்ஷ்டசாலி!

பரத இலக்கணத்துக்குப் பிசகில்லாமல், தனது வித்தைக்குப் பங்கம் தேடித்தராமல் ஆடக்கூடிய திறமை தான் மாணவி கிருஷ்சாந்திக்கு இருக்கிறதென்பதை முற்றும் முழுதாக உணர்ந்ததால்தான் சுப்பையா மாஸ்டர் கிருஷ்சாந்தி அரங்கேற்றம் நடக்க அனுமதி வழங்கினார்!



## 'சினிமாவில் ஒரு போதும் நடிக்க மாட்டேன்'

மானிப்பாயிலுள்ள அவரது இல்லத்தில் அவரைச் சந்தித்தேன். கிருஷ்சாந்தியின் தந்தையார் சேனுதிராசா ஓரளவு நடனம் பயின்றவர்.

### ஏழுவயதில்

ஏழுவயதில், இயற்கையாகவே நடனக்கலைமீது பற்று ஏற்பட்டுவிட்ட தன் மகளுக்கு 'காலைத் தூக்கி வைக்கும்' ஆரம்பக்கலையைச் சொல்லிக்கொடுத்தார். அந்தச் சின்னவயதிலேயே பல இடங்களில் மேடையேறி சக்கைபோடுபோட்டார் கிருஷ்சாந்தி!

நாட்டிய உலகுக்கு எண்ணற்றவர்களைத் தந்த கலைஞர்கலைச்செல்வன்சுப்பையாவின் பெரும் மதிப்பைப் பெற்ற முதல் மாணவி கிருஷ்சாந்திதான் என்று

### மொழிபேசும் விழிகள்!

கள்ளங்கபடமற்ற உள்ளம்; ஆனாலும் ஆடற்கலைக்கென்றே படைக்கப்பட்டவரோ என ஐயுறும் அழகுத் தோற்றம்; மொழி பேசு விழிகள்!

அவருடன் பேசிக்கொண்டிருந்தபோது இவைகளை நான் கவனிக்கத் தவறவில்லை!

மானிப்பாய் இந்துமகளிர் கல்லூரியில் ஜி. ஸி. ஈ. சாதாரண வகுப்பில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் கிருஷ்சாந்தி விளையாட்டிலும் ஒரு வீராங்கனை!

ஈழத்து தமிழ் சினிமாப் படமொன்றில் கதாநாயகியாக நடிக்கப்போவதாக அங்குமிங்குமாகக் காற்றில் மிதந்துவந்து என் காதுகளில் புகுந்தசெய்தி உண்மை தானா என்று கிருஷ்சாந்தியைப் பார்த்துக்கேட்டேன்

அவர் மெல்லச் சிரித்தார்; ஆயிரம் அர்த்தங்கள் புதைந்து கிடந்தன!

### சினிமாவிலா! ஐயோ!

'சினிமாப்படத்தில் நான் நடிக்கப்போவதில்லை. என்றுமே நடிக்கமாட்டேன்; நடனம்கூடஆடமாட்டேன்! அந்த எண்ணம் என் உள்ளத்தில் துளிகூட இல்லை. ஆனல் வாழ்நாள் முழுவதும் பரதக்கலைக்குப் பணி செய்துகிடப்பேன்!'' என்று சொன்னவர், இன்னும் தன் உள்ளத்தில் தோன்றியதை சொல்ல முயன்றார். ஆனல். அவை வார்த்தைகளாகஉடு வெடுக்கவில்லை!

படத்தில் நடிப்பதுபற்றித்தான் அவர் இன்னும் ஏதோ கண்டனக் குரல் எழுப்ப முயல்கிறார் என்பதை மட்டும் என்னல் புரிந்துகொள்ள முடிந்தது!

கிருஷ்சாந்தி விரைவில் இந்தியாசென்று நடனம் பயிலவிருக்கிறார். கலாச்சாரத்திணைக்களம் நடத்திய பரதநாட்டியப்போட்டியில், யாழ்ப்பாண மாவட்டத்தில் முதலாவது பரிசைப் பெற்றவர் இவர்! ஆகையால் இலங்கை அரசு இவரை இந்தியா அனுப்பி தனது செலவில் நடனக் கல்லூரியில் மேலும் பயிற்றுவிக்க இருக்கிறது.

### இனியவர்கள்!

கிருஷ்சாந்தியின் பெற்றோர்களான சேனுதிராசா தம்பதிகள் இனியவர்கள்! தமது மூத்தமகள கிருஷ்சாந்தி நடனக் கலையில் உலகப்புகழ்பெற்று நாட்டுக்குப் பெருமை தேடித்தரவேண்டுமென்பதற்காக தம்மை அவர் வெற்றிக்கு அர்ப்பணித்து வாழ்கிறார்கள்!

கிருஷ்சாந்தி அடிக்கடி தனது குருபற்றியே சொல்லிக்கொண்டிருந்தார்! இதிலிருந்து அவரது குருபக்தியை உணர முடிந்தது!

### குருபக்தி

'சுப்பையா மாஸ்டர் எனது குரு; நான் நாட்டியப் புகழேணியின் உச்சாணியில் நிற்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டாலும் அந்தப் புகழுக்குரியவன் நானல்ல! அது என்குருவையேசாரும். அவர் பிறவிக்கலைஞர்' என்று கூறினார் அவர்!

1942-ல் சிவ தாண்டவம் ஆடியவர் கிருஷ்சாந்தியின் தந்தையார் சேனுதிராசா! நாட்டியக்கலையில்நன்குதேர்ச்சிபெற்ற இவர் சுவாமிநாதத்தம்பிரானின்முதல்மாணவர். அவருக்கு மகளாகப் பிறந்த கிருஷ்சாந்தி...

புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?

ஆம், கிருஷ்சாந்தி ஈழத்துநாட்டிய உலகுக்குக் கிடைத்த ஒரு நட்சத்திரம்!

ராஜன்





ஜூலை 15-ம் திகதி சிலோன் தியேட்டேஸ் ஸ்தாபனத்தினுல் வெளிவந்த 'கீதா' என்னும் சிங்களப்படத்தில் ''நாட்டிய கலாமணி'' வசந்தா டானியலும் ஜானகி குருகுல சூரியாவும் ஆடும் நவீன நடனம். இதனை ''பாசநிலா'' தயாரிப்பாளரான ஜோ தேவானந்த் தயாரித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவும் சோஷலிஸமுமே கிழக்கு ஜெர்மனியின முன்னேற்றம்

சமீபத்தில் கிழக்கு ஜெர்மன் ஜனநாயக குடியரசில் கூட்டுறவு நிர்வாகத் துறையில் பயிற்சி பெற்றுத் திரும்பிய சாவகச்சேரி யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாணவங்கி அதிபர் திரு. ஏ. பி. தணிகாசலம் கிழக்கு ஜெர்மனியின் சமூக அரசியல் பொருளாதார நிலைமைபற்றி இங்கு விளக்கமாகவும், சுவையாகவும் தருகிறர்.



''இலங்கையில் வீடற்றோர் பிரச்னை பெரும் பிரச்னையாக இருந்துவருகிறது. ஆனால் கிழக்கு ஜேர்மனியில் தனிப்பட்டோருக்கு வீட்டுப் பிரச்னை என்பது கிடையாது. அங்கே வீடு வாங்கவும் வேண்டாம். விற்கவும் வேண்டாம். அங்கு 75 வீதமும் அரசாங்க வீடுகளே. கிழக்கு ஜேர்மனி சோஷலிச நாடாவதற்கு முன் கட்டப்பட்ட பெரிய வீடுகளை அரசாங்கம் தேசியமயமாக்கி அவ்வீடுகளில் பொதுமக்களைக் குடியேற்றியுள்ளது. இம்முறை இலங்கையிலும் பின்பற்றப்படின் வேரவற்கத்தக்கது.''

இவ்வாறு கிழக்கு ஜேர்மனி ஜனநாயகக் குடியரசின் உபகாரச் சம்பளம் பெற்று, ட்ரெஸ்டன் (Dresden) கூட்டுறவுக் கல்லூரியில் கூட்டுறவு நிர்வாகத்துறையில் 'டிப்ளோமா' பட்டம் பெற்றுத் திரும்பிய சாவகச்சேரி-யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கியின் மனேஜர் திரு ஏ. பி. தணிகாசலம் கூறினர். கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த இவர் இலங்கைப் பல்கலைக்கழகப் பொருளாதாரப் பட்டதாரியும், லண்டன் வங்கியியல் 'டிப்ளோமா' பரீட்சையில் சித்திபெற்றவருமாவர். இவர் கிழக்கு ஜேர்மனியின் கூட்டுறவு பொருளாதார முன்னேற்றங்கள் திட்டங்கள்பற்றியும் எம்மிடம் விபரித்தார். அவரிடமிருந்து திரட்டிய சில தகவல்களை இங்கு மகிழ்ச்சியுடன் தருகின்றோம்.

## சோஷலிஸ முற்போக்கு

''சோஷலிஸ முற்போக்கு எண்ணம் கொண்ட கூட்டணி அரசாங்கம் ஆட்சி நடத்தும் இச்சமயத்தில் சோஷலிஸ நாடான கிழக்கு ஜேர்மனிபற்றிக் கூறுவதில் பெருமைப்படுகிறேன்'' என்று எமது பேட்டியை ஆரம்பித்த அவர், ''கிழக்கு ஜேர்மனியில் சகல தொழிற்துறைகளும் சோஷலிஸ ரீதியிலேயே நடைபெறுகின்றன. கூட்டுறவு அமைப்பிலேயே பெரும்பாலான திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. இலங்கையிலும் கூட்டுறவுச் சங்கங்கள் உண்டென்றாலும் கிழக்கு ஜேர்மன் கூட்டுறவுச் சங்கங்களுடன் ஒப்பிடமுடியாதனவாயுள்ளன. ஏனெனில் இலங்கையில் கூட்டுறவு அமைப்பு எல்லாத்துறைகளுக்கும் இன்னும் விஸ்தரிக்கப்படவில்லை. கிழக்கு ஜேர்மனியில் சலவைத் தொழிற்சாலை (பாண் பேக்கரி) கூட கூட்டுறவு அமைப்பிலேயே இயங்கிவருகிறது. கூட்டுறவுச் சங்கச் சொத்துக்கள் சங்கங்களுக்கே உரியவை. தனியாருக்கு அல்ல. சொத்துள்ளவர்கள் கூட்டுறவுச் சங்கத்துக்கு தம் சொத்தைக் கொடுத்து, அதிலிருந்து வரும் வருமானத்தைப் பொறுத்து வருவாயும் வேலை செய்தால் சம்பளமும் பெறுவர். இன்னும் விவசாயமும் கூட்டுறவு அடிப்படையிலேயே இயங்கிவருகிறது. பெரிய பெரிய விவசாயப் பண்ணைகள், கோழிப் பண்ணை, மாட்டுப்பண்ணை, பன்றிப் பண்ணை என்பனவும் கூட்டுறவு அடிப்படையிலேயே சிறப்புற நடைபெற்றுவருகின்றன. அரசாங்க விவசாயப்பண்ணைகளில் தனிப்பட்டோருக்குச் சலுகை இல்லை. தனிப்பட்டோர் உற்பத்தி செய்தாலும் அவர்களால் அரசாங்கத்தின் பெரும்படி உற்பத்தியுடன் நின்றுபிடிக்க முடியாத நிலையில் உள்ளார்கள் என ஜேர்மனிய கூட்டுறவு பற்றிக் குறிப்பிடுகையில் கூறினர்.



கூட்டுறவு முறையில் நடைபெறும் ஒரு சலவைத் தொழிற்சாலையின் உட்புறத்தோற்றம்.

## கூட்டுறவில் திட்டங்கள்

சகல துறைகளிலும் முன்னேறியுள்ள ஜேர்மனியில் மக்களுக்குள்ள வசதிகள் பற்றி அவர் குறிப்பிடுகையில், அங்கே சகல தொழில் துறைகளும் சோஷலிஸ ரீதியிலேயே நடைபெறுகின்றன. கூட்டுறவு இயக்க ரீதியில் அநேக திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. இலங்கையைப் போன்று அங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. சங்கச் சொத்துக்கள் சங்கங்களுக்கே உரியவை. தனியாருக்கு அல்ல. தொழிலாளர்களே இதனுல் பயனடைகிருர்கள். சொத்துள்ளவர்கள் கூட்டுறவுச் சங்கத்துக்குத் தமது சொத்தைக் கொடுத்து அதனுல் வரும் வருமானத்தைப் பொறுத்து வேதனமும், வேலை செய்தால் சம்பளமும் பெறுவர்.

அங்குள்ள ஒவ்வொருவருக்கும் பென்ஷன் உண்டு. தனியாராகக் கருதப்படும் கடைக்காரர்களுக்குப் பென்ஷன் இல்லை. அவர்கள் பென்ஷன் பெறவிரும்பினுல் குறிக்கப்பட்ட பணம் ஒதுக்கி வைக்கவேண்டும். அங்கே தனிப்பட்ட ஆஸ்பத்திரிகள் கிடையாது. சகலருக்கும் சுகாதார இன்சூரன்ஸ் திட்டம் உண்டு.

பிள்ளை பிறந்ததும் ஒரு கார்ட் வழங்கப்படும். அதனை எந்த ஆஸ்பத்திரியிலும் மருந்துக் கடைகளிலும் கொடுத்தால் இலவசமாக மருந்து கிடைக்கும். வெளிநாட்டவர்களுக்கும் இத்தகைய சலுகையுண்டு. பெரும்பாலும் ஒரு பிள்ளைக்கு 4 வயதுவரை பாலர் பராமரிப்பு நிலையங்களிலேயே அப்பிள்ளை தொடர்ந்து வளரும். அங்கே பாலர் கல்வி புகட்டப்படும்.

பெற்றோர் வருமானம் உள்ளவர்களாக இருந்தால் தாமே தமது பிள்ளைகளைப் பராமரிக்கலாம். ஒவ்வொரு பிள்ளைக்கும் 11-ம் வகுப்பு வரை 75 ரூபாவை அரசாங்கம் வழங்குகிறது. கல்வியில் முதன்மையான சித்தி பெற்றால் கூடுதல் தொகை வழங்கப்படும்.

படிக்கும் பிள்ளைகளின் வாழ்வு பாடசாலை விடுதி வாழ்வுதான்.

## திருமணத்தில் பெற்றோர் தலையீடில்லை

ஜெர்மனியில் போக்குவரத்து சீசன் டிக்கெட் முறையிலேயே நடைபெறுகின்றது. பஸ் கண்டக்டர்கள் கிடையாது. யந்திர மூலம் டிக்கெட்டைப் பெறலாம் மேலும் புகையிரத சேவை நம் நாட்டதுபோன்றதல்ல. புகையிரதம் இடையில் தாங்காமலே குறித்த இடத்தை அடையும்.

மதத்திற்கென அங்கே ஒரு நிர்வாகபீடம் கிடையாது. ஆலயங்கள் உள்ளன. அனைவரும்சென்று வழிபாடு செய்யலாம். ஆனுல் வணங்கச் செல்பவரே பூஜையையும் செய்யவேண்டும். அரசாங்கம் மதத்தில் ஊக்கம் காட்டுவதுமில்லை. மதத்தைத் தடைசெய்வதுமில்லை. தொழில்மயமான நாடு எனப் பெயர்பெற்ற ஜெர்மனி நாட்டில் 17 வயதில் அநேகமாக எல்லோருக்கும் உத்தியோகம் கிடைத்துவிடுகின்றது. பிள்ளைகளின் திருமணத்தில் பெற்றோர் தலையிடுவதேயில்லை. வாலிபர்களும் இளம்பெண்களும் தாமாகவே தமது திருமணத்தை நிச்சயித்துக் கொள்ளுகின்றனர் ஒருவர் திருமணம்செய்யாமல் இருந்தாலும் அவரது திருமணத்தைப்பற்றி எவரும் கவனிக்கப்போவதில்லை.

## 60 வயதில் பென்சன்

60 வயதில் அனைவருக்கும் பென்ஷன் கிடைக்கின்றது. உயர்கல்விக்குச் சகல வசதிகளும் அளிக்கப்படுகின்றது. தொழிலில் சேர்ந்தாலும் அத்தொழில் பயிற்சி உயர் பயிற்சியளித்துப் பரீட்சை நடாத்திப் பதவி உயர்வு செய்யப்படுவார்கள். 5-ம் வகுப்பிலிருந்து சகலருக்கும் கம்யூனிஸக் கல்வி ஊட்டப்படுகின்றது என ஜெர்மனிய நாட்டு மக்களின் உயர்ந்த வாழ்க்கைத்தரத்தைச் சுருக்கமாகக் கூறிய திரு தணிகாசலத்தை நாம் அங்குள்ள பல்கலைக்கழகத்தின் எண்ணிக்கைபற்றி வினுவிய போது:-

17 லட்சம் மக்களைக் கொண்ட கிழக்கு ஜெர்மனியில் 14 மாகாணங்கள் உள்ளன. இப்பதினுன்கு மாகாணங்களிலும் சனத்தொகை குறைவாகஇருந்தபோதிலும் 126 பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. ஒவ்வொருதொழிற்துறைபற்றியும் ஒவ்வொரு பல்கலைக்கழகம் பயிற்றுவிக்கிறது. வெளிநாடுகளிலிருந்து இப்பல்கலைக்கழகங்களுக்குச் செல்பவர்களுக்கு 6 மாத காலம் இப்பல்கலைக்கிகழகங்களில் ஜேர்மானி மொழி பயிற்றுவிக்கப்படுயறது.

இங்கு தூயகணிதத்திற்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. ரஷ்ய ஆங்கில மொழிகளும் போதிக்கப்படுகின்றன. விஞ்ஞானக்கல்வி நடைமுறையிலே சிறப்பாகப் பயிற்றுவிக்கப்படுகின்றது. தொழிற்கல்வியில் அதிக முன்னேற்றம் காணப்படும் இந்நாட்டில் தொழிற்கல்வி தொழிற்சாலைகளிலேயே பெரும்பாலும் பயிற்றுவிக்கப்படுகின்றது. இலங்கையைப்போன்று இங்குள்ள பல்கலைக்கழகங்களில் கலைக்கல்விக்கு முக்கியத்துவம் குறைவு. அவர்களை நாம் பின்பற்றினுல் எம்நாட்டின் கல்வித்துறையிலும் அதிக முன்னேற்[றம்] காணலாம்' எனக் கு[றி]ப்பிட்டார்.



அங்கவீனர்களின் நல்வாழ்விற்காக கூட்டுறவு முறையில் அமைக்கப்பட்ட சப்பாத்து உற்பத்திசெய்யும் சங்கம்.

## தொழிற்சாலைகளே எங்கும்

மேலும் அவர் ஜெர்[மனி] அரசாங்க அலுவலகங்[கள்] பற்றித் தெரிவிக்கை[யில்] 'நமது நாட்டில் ஒவ்வொ[ரு] துறை அரசாங்க அலு[வல]கங்களும் வேறு வேறு கட்டடங்களா[க] அமைந்துள்ளன. ஆ[னால்] கிழக்கு ஜெர்மனியில் [இ]வாறுஇல்லை. அங்கு தொ[ழிற்சாலை]கள் தங்குதடையனறி நல[ம்] பெறவேண்டும். அதேவே[ளை]யில் தொழிற்சாலைப்பிரச்[னை]களையும் நிர்வாக அலு[வல்]களையும் ஸ்தலத்திலே கவனிக்கவேண்டும் எ[ன்ற] நோக்கங்கொண்[டு] தொழிற்சாலைகளிலே அலுவலகங்களையும் அ[மைத்]துள்ளது எனத் தெரி[வித்]தார்.

இத்தகைய முன்னே[ற்ற]மடைந்த மேல்நாட்[டின்] நாணயப் புழக்கம் பற்றி[யும்] ஆவலோடு அந்நாட்[டின்] நாணயப்புழக்கம் எவ்[வா]றுள்ளது என வினுவினே[ாம்].

1952-ம் ஆண்டுவ[ரை] கிழக்கு ஜெர்மனி, மே[ற்கு] ஜெர்மனி ஆகிய இரு [நாடு]களிலும் ஒரே நாணய[ப்] புழக்கத்திலிருந்துவந்த[து]. மேற்குஜெர்மனி பின்[னர்] இந்த நாணயங்களைக்க[ட்டி] விட்டதால் கிழக்கு ஜெ[ர்ம]னியில் பஞ்சம் ஏற்பட்ட[து].

1960-ம் ஆண்டு கிழ[க்கு] ஜெர்மனி மற்கு ஜெர்[மனி] நாணயத்தை நிறுத்தித்[தன]கென ஒரு நாணயத்[தை] உருவாக்கியது. இத[னால்] வெளிநாடுகளில் கிழ[க்கு] ஜெர்மனி நாணயத்[தைப்] பற்றித் தெரியாது. வெ[ளி]நாடுகள் கிழக்கு ஜெர்[மனி] நாணயத்தை மதிப்[பது]மில்லை. இதற்காக்க் கிழ[க்கு] ஜெர்மனி சோர்வ[டை]வில்லை சோஷலிஸ நா[டுக]ளான போலன்ட், ரஷ்[யா], பல்கேரியா, யூகோஸ்[லா]வியா, செக்கோஸ்லவ[ா]கியா முதலிய நாடுகளுட[ன்] வியாபார உடன்படிக்[கை] செய்து தமது நாணயத்[தைச்] செயல்படுத்துகின்றது.

கிழக்கு ஜெர்மனியில்த[ான்] கல்வி கற்க நான் செ[ன்றா]லும் மேற்கு ஜெர்ம[னி] போலந்து. பிரான்ஸ், [செக்]கோஸ்லவாக்கியா. இ[ங்கி]லாந்து, பெல்ஜியம் முத[லிய]

# 'அரசாங்க ஊழியருக்குமட்டுமல்ல அனைவருக்குமே பென்ஷன்'

# 'காதல் தத்துவம்'

—குப்பிளான் ஐ. சண்முகன்—

ஊற்றின் சங்கமம் உத்தம நதியாம்;
நதியின் கலப்பு நந்திடும் கடலாம்;
காற்றின் அணைப்பு தண்ணிய சுகமாம்;
கவிதை உணர்வில் காவியப் பிறப்பாம்;
வாழ்வில் தனிமை உலகில் வேண்டாம்;
வாஞ்சை கலந்த உணர்வில் ஒன்ருய்
தனிமை தனிமை தவிப்பு எனக்கு
சார்வோம் அன்பே இணையாய் இன்று.

மலை முகட்டைக் கொஞ்சும் மேகம்;
அலை அணைந் தணைந்தே துள்ளும்;
மலர் அசைந்து மற்றதைப் புல்லி
மகிழ்ந்து சிரிக்கும் மன்பதை வாழ்வில்,
நிலத்தைச் சேரத் துடிக்கும் கதிர்கள்
நீந்திக் கடலில் திளைக்கும் மதியும்;
விரைந்து வந்தே என்னை அணைத்தே
விரும்பித் தாராய் முத்தம் அன்பே!

(ஷெல்லியின் ஒரு கவிதையைத் தழுவி எழுதப்பட்டது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மே

ற்றம்



அதிக முன்னேற்றம்
ாம்' எனக் குறிப்
ர்.

ழிற்சாலைகளே
ம்

ும் அவர் ஜெர்மன்
ங்க அலுவலகங்கள்
தெரிவிக்கையில்
நாட்டில் ஒவ்வொரு
அரசாங்க அலுவல
ம் வேறு வேருன
டங்களாக
துள்ளன. ஆனல்
ஜெர்மனியில் இவ்
ல்லை. அங்கு தொழில்

ட்டுமல்ல
ஷன்'

குதடையனறி நடை
வண்டும். அதேவேளை
ாழிற்சாலைப்பிரச்னை
நிர்வாக அலுவல்
ஸ்தலத்திலேயே
கவேண்டும் என்ற
கொண் அரசு
ற்சாலைகளிலேயே
களையும் அமைத்
எனத் தெரிவித்

கைய முன்னேற்ற
த மேல்நாட்டின்
ப் புழக்கம் பற்றியறி
லோடு அந்நாட்டின்
ப்புழக்கம் எவ்வா
என வினவினேம்:-
ம் ஆண்டுவரை
ஜெர்மனி. மேற்கு
ி ஆகிய இரு நாடு
ஒரே நாணயமே
திலிருந்துவந் தது.
ஜெர்மனி பின்னர்
ணயங்களைக்கடத்தி
ால் கிழக்கு ஜெர்ம
ஞ்சம் ஏற்பட்டது.
ம் ஆண்டு கிழக்கு
ி மற்கு ஜெர்மனி
தை நிறுத்தித்தமக்
ரு நாணயத்தை
ியது. இதனல்
டுகளில் கிழக்கு
நாணயத்தைப்
தெரியாது. வெளி
கிழக்கு ஜெர்மனி
தை மதிப்பது
இதற்காகக் கிழக்கு
சோர்வடைய
சோஷலிஸ நாடுக
லன்ட், ரஷ்யா,
ா, யூகோஸ்லா
செக்கோஸ்லவாக்
லிய நாடுகளுடன்
உடன்படிக்கை
மது நாணயத்தை
த்துகின்றது.

ஜெர்மனியில்தான்
்க நான் சென்று
ற்கு ஜெர்மனி,
. பிரான்ஸ், செக்
ாக்கியா. இங்கி
பெல்ஜியம் முதலிய

நாடுகளுக்கும் சென்று அந்நாடுகளில் வாழும் மக்கள் வாழ்க்கை மற்றும் அரசியல் பொருளாதார முன்னேற்றங்கள் ஆகியவற்றையும் மிகவும் நுணுக்கமாகக் கவனித்தேன். சுருங்கக்கூறினல் சோஷலிச நாடுகளில் வாழ்வதை நான் பெரும்பாக்கியமாகக் கருதுகிறேன்' என அந்நாடுகளின் அரசியல் பொருளாதார சமூக முன்னேற்றங்களை நேரில் கண்கூடாகக்கண்ட திரு. தணிகாசலம் தனது நன்றியையும் வணக்கத்தையும் எங்களுக்குத் தெரிவித்தார்.

பேட்டிகண்டுதொகுத்தவர்கள்:- ஜே. ஜெயக்குமார் — கே. சூரியமூர்த்தி.

# தேமதுரத் தமிழோசை - 13

# இருண்ட கண்டத்தில் தமிழொளி

இருண்ட கண்டம் என்று அழைக்கப்படும் ஆபிரிக்காக் கண்டத்திலும் 1860-ம் ஆண்டில் இருந்து தமிழ் மொழிக்கல்வி ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை நடைபெற்று வருகிறது. 1860-ம் ஆண்டில் இருந்து ஆபிரிக்காவின் கரும்புத் தோட்டங்களில் வேலை செய்ய இந்தியர்கள் ஆபிரிக்கா சென்று குடியேறினர் இதன் பின்னர் வியாபார நோக்கமாகவும் சிலர் சென்று அங்கு குடியேறினர்கள்.

## இந்தியக் குடியேற்றம்

இவ்வாறு குடியேறிய இந்தியர்கள் இன்று நாட்டின் பல்வேறுதுறைகளிலும் முன்னேறிச் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளார்கள். அங்கு இந்திய டாக்டர்கள், ஆசிரியர்கள் பெருமளவில் உள்ளனர். வழக்கறிஞர்கள், தொழில்நுட்ப வல்லுனர், பெருந்தோட்டப்பயிர்ச் செய்கையாளர்கள், வர்த்தகர்கள்எனபலதுறை இந்திய தொழில்வல்லுனர்களை நாம் ஆபிரிக்காவில் காணலாம். நேத்தால்(Natal), திரான்ஸ்வால் ஆகிய பகுதிகளிலேயே இந்தியர்களில் பெரும்பான்மையினர் வசிக்கிருர்கள். கேப் மாகாணத்திலும் ஓரளவுக்கு இந்தியக்குடியேற்றம் காணப்படுகிறது. தென் ஆபிரிக்காவிலுள்ள தமிழ், தெலுங்கு, இந்தி, குஜராத்தி உருது ஆகிய கீழைத்தேச மொழிப்பிரிவினரில் தமிழ் மொழியைப் பேசுபவர்களின் தொகையே கூடியதாகவுள்ளது. தமிழர்களின் சனத்தொகை இங்கு 250,000ஆகவுள்ளது.

## தாய்மொழிக் கல்வி

அன்னிய நாடாகிய இந்த நாட்டிற்கு வந்ததிலிருந்து இந்திய மக்கள்தாய்மொழிக் கல்வியில் கூடிய கவனம் செலுத்திஞர்கள். நாட்டின் எந்தப் பகுதியில் இந்திய சமூகத்தினர் வாழ்கின்ருர்களோ அங்கெல்லாம் பாடசாலைகள் நிறுவப்பட்டன. 1928-ல் தென் ஆபிரிக்காவில் தமிழ்க்கல்வியை வளர்ப்பதற்காக ஒரு பெரிய கல்லூரி நிறுவப்பட்டது. அப்போது இந்திய அரசாங்க முதலாவது அதிபராகத் தென்ஆபிரிக்காவில் கடமையாற்றிய திரு. வி எஸ். சிறீனிவாசசாஸ்திரி இக்கல்லூரியைத் திறந்துவைத்தார். இக்கல்லூரியைத் திறந்து வைத்துரையாற்றுகையில்இவ்வறிஉர் ''அன்னியமொழிமூலம் போதிப்பதிலும் பார்க்கத் தாய்மொழிமூலம் போதிப்பது அதிக நன்மை பயப்பதாகும்'' எனக்குறிப்பிட்டார். ஆங்கிலமொழிமூலம் கல்வி போதிப்பதற்கு டர்பனில் முதலாவதுகல்லூரியை -சாஸ்திரிகல்லூரி நிறுவுவதற்குக் காரணகர்த்தாவாக இவர் இருந்த பொழுதும் அவர் இந்தியர்கள் தங்கள் கலைகலாச்சாரத்தைப் பேணவேண்டுமானல் தங்களது மொழி, இலக்கியம் ஆகியவற்றில் அடிப்படை அறிவு பெற்றிருக்கவேண்டும். தாய்மொழி அறிவின்றித் தம் தாய்நாட்டின் கலாச்சாரத்தைப் பேணவியலாது என அங்குள்ள இந்தியமக்களுக்குத் தாய்மொழியின்மகத்துவத்தை வற்புறுத்திக்கூறினர்.

## ஆபிரிக்கத் தமிழர் தாய் மொழிக்கு முதலிடம் கொடுக்கிறார்கள்

இவ்வாறு தாய்மொழிக் கல்வி வற்புறுத்தப்பட்டு ஆபிரிக்காவில் போதிக்கப்பட்டுவந்த வேளையில் காலத்தின் மாறுதல்களுக்கிசைய இந்தியர்களில் பெரும்பாலோர் உயர்கல்வியின் பொருட்டு மேலைத்தேச மொழியாகிய ஆங்கிலத்தில் நாட்டங்கொண்டனர். இளைஞர்களில் பெரும்பான்மையினர் ஆங்கிலமோகங் கொண்டவர்களாக மாறினர். கடந்த பத்து ஆண்டுகளாகவே இந்த நிலைமை ஆபிரிக்காவில் ஏற்பட்டுள்ளது. இதற்குக்காரணம்ஆங்கில பாடசாலைகள் யாவும் அரசாங்க பாடசாலைகளாகவோ அல்லது அரசாங்க உதவிபெறும் பாடசாலைகளாகவோ உள்ளமையும், தமிழ்ப் பாடசாலைகள் தனியாரின் ஆதரவில் உள்ளமையுமேயாகும். தமிழ்க்கல்வி ஆபிரிக்காவில் பெரிதும் வளர்ச்சியடையாததற்குப் பாடசாலைகளின் இத்தகைய நிலைமையும் ஒரு முக்கிய காரணமாகும்.

இவ்வாறு இருந்த பொழுதும் மொழி, கலை, கலாச்சாரம் ஆகியவற்றைப் பேண வேண்டும் என்றபேரவாவும் அங்கு இருந்த இந்தியர்கள் பலரிடையேயில்லாமலில்லை. ஆபிரிக்காவில் வீழ்ச்சியடையவிருந்த தமிழ்க்கல்வியைபாதுகாத்து வேறுவழிகளைக் கையாண்டு வளர்த்த பெருமை இவர்களையே சாரும்.

## தமிழ்க்கல்வி நிறுவனங்கள்

இவர்களின் பெருமுயற்சியால் நேட்டாலில் பல தமிழ்க்கல்வி நிறுவனங்கள் நிறுவப்பட்டன. நேட்டால் தமிழ் வேதசங்கம் இவற்றில் ஒன்ருகும். இச்சங்கம் இங்குள்ள மற்றச் சங்கங்களிலும் பார்க்க மிகப்பெரியது. தமிழ்ச்சமய கலாச்சாரப் பண்புகளைத் தமிழ்மக்களிடையே வளர்ப்பதில் இது பெரிதும் உழைத்துவருகிறது. பலசிறு சங்கங்கள் இதில் ஒன்றுசேர்ந்து இயங்குகின்றன. அடுத்து இங்குள்ள சைவசித்தாந்த சங்கம் இருபத்திரண்டு கிளைச்சங்கங்களைக் கொண்ட இச்சங்கம் ஆபிரிக்காவில் தமிழ்க்கல்விக்குப் பெரிதும் தொண்டாற்றுகிறது. தமிழ் மக்களின் வாழ்க்கை காந்தியடிகள் கூறியது போன்ற மத அடிப்படையில் அமைய வேண்டும் என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு இச்சங்கம் சைவ சமய சித்தாந்தக் கருத்துக்களை தமிழ்மக்களுக்கு விரிவாகப் போதித்துவருகின்றது அருட்பா கழகம் என்ற மற்றுமொரு சங்கமும் சமயக்கல்விக்கும் தமிழ்க்கல்விக்கும்பெருந்தொண்டாற்றிவருகிறது. வையத்துள் வாழ்வாங்கு வாழவழி வகுக்கும் வள்ளுவத்தை வாழ்த்தாதார் கற்காதார் மிகவரிதென்றே கூறவேண்டும். அத்தகைய அரியதொரு தமிழ்ப் பொக்கிஷத்தைப் பேணுவதற்கென்றே

(12-ம்பக்கம் பார்க்க)

— குணம் —

அறுபது நிறையும் அருள்குமரன் — மகாஜனன் [சென்ற வாரத் தொடர்ச்சி]

# இலவசக் கல்விக்கு முன் இலட்சிய கல்வி திட்டமாக திகழ்ந்த ஆசிரியர்கள்

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் திரு. அம்பிகைபாகன் ஒருசமயம் தாபகர் நினைவு விழாவில் உரையாற்ற அழைக்கப்பட்டிருந்தார். அந்நாளில்தான் ஆனந்தவிகடன் பத்திரிகை ஆசிரியராயிருந்த கல்கியும் ஆனந்தவிகடன் கேலிச்சைத்திரிகன் மாலியும் முதல் தடவையாக இலங்கை வந்து திரும்பியிருந்தார்கள். அம்பிகைபாகன் அவர்கள் அன்று தாபகர் நினைவு விழாவில் பேசியபோது ''எனக்கு மட்டும் அண்மையில் யாழ்ப்பாணம் வந்துபோன விகடன் சைத்திரிகன் மாலிக்கு உள்ள ஓவியப்புலமை இருக்குமானல் திரு. துரையப்பா பிள்ளையின் உருவத்தை இங்கே ஒரு கரும்பலகையில் இப்பொழுது தீட்டிக்காட்டுவேன். அத்தனை தெளிவாக அவர் தோற்றம் என் மனத்தில் பதிந்திருக்கிறது. இன்று இப்போதைய இந்தச் சூழலில் அதனை நான் நன்ருக உணருகிறேன்'' என்று தமது பேச்சை ஆரம்பித்தார்.

இன்றைக்குச் செனட்டராயிருக்கும் மல்லாகம் வழக்கறிஞர் திரு நடராசா அன்ருெருபோது நெற்றியில் சந்தனப் பொட்டுத் துலங்க மாணவர்சங்கக் கூட்டமொன்றுக்கு உரை நிகழ்த்த வந்து 'மாணவர் கடமை' பற்றி சைவமணம் கமழப் பேசினர். 'நானும் ஒரு காலத்தில் மாணவராயிருந்தவனே' என்ருர்.

இப்பள்ளிக்கூடத்தில் எனக்குப் பத்துஆண்டுகள் முன்னதாக இங்கு கல்வி கற்ற என் பழைய நண்பர் ஒருவர் பிற்காலத்தில் வழக்கறிஞராகவும் அரசியல் வாதியாகவும் செனட்டராகவும் வாழ்க்கையில் பிரகாசித்தவர். ஒருசமயம் இங்கு ஒரு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தமது மாணவர் கால நினைவுகளைக் குறிப்பிட்டார். தமது காலத்தில் மத்தியானம் இரண்டு மணி வெய்யிலில் ஊர்ச்சந்தையிலிருந்து திரும்பிய கிராமத்துத் தாய்மார்கள் பள்ளிக்கூடத் தெருவாசலில் தலைச்சுமையுடன் நின்றபடியே வகுப்பிலிருக்கும் தங்கள்பிள்ளைகளை பெயர்[illegible] த்த குரலில் சத்தம்வைத்து வீட்டில் கூப்பிடுவதுபோலக் கூப்பிட்டார்களாம். கூப்பிட்டு சந்தையில் வாங்கிக் கொண்டுவந்த ஏதும் பழத்தையோ பட்சணத்தையோ கடகப்பெட்டிக்குள்ளிருந்து பட்சமாக எடுத்துக்கொடுத்து அவன் சாப்பிடுவதை நின்று பார்த்து விட்டுப் போகும்காட்சி மிக உருக்கமாயிருக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

எங்கள்காலத்தில் இந்தத் தாய்மார்கள் மறைந்து போய்விட்டார்கள். அவர்கள் இடத்தில் தகப்பஞர்களைப் பார்த்தோம். வயலிலும் தோட்டத்திலுமிருந்து நேரே சந்தைக்குப் பூட்டிய வண்டிலைக் கொண்டுவந்து பள்ளிக்கூட வாசலில் நிறுத்திவிட்டு தேகத்தில் வியர்வையும் செம்மண்ணும் இன்னமும் அப்படியே ஒட்டியிருக்க, தங்கள் பிள்ளைகளின் தவணைச் சம்பளம் செலுத்துவதற்காக 'ஹெட்மாஸ்டர்'மேசையைநோக்கி இடுப்புவேட்டிச் சண்டிக்கட்டை அவிழ்க்காமலே நடந்தார்கள.

அக்காலத்துத் தாய் தந்தையரின் உழைப்பிலும் வியர்வையிலும் அவர்தம் சிந்தையிலெழுந்த ஆயிரம் [illegible] இவ்வாறெல்லாம் ஆளானவர்க ளின் குழந்தைகள பலரை இன்று அங்கு காண்கிறேன், இவர்களின் எதிர்காலம், ஒவ்வொருவரினது வருங்காலமும் எங்கள காலத்தில் இருந்ததுபோல அத்தனை நிச்சயமும் நம்பிக்கையும் சுடர்விடுவதாயில்லை என்பது நம் அனைவருக்கும் தெரிந்திருக்கிறது தான் இனிமேலெல்லாம் பரிசுத்தொகையினை மனதில் எண்ணிக்கொண்டு வகுத்தறிவுப் போட்டி நிரப்புவதுபோல் நாற்காலி உத்தியோகத்தை இலக்கிட்டு கல்வி கற்கும் மனப்பான்மை நமக்குச் சித்திக்காது என்பதையும் அநுபவத்தில் கண்டுவருகிறோம். இலவசக்கல்வித் திட்டமோ மாணவப் பட்டாளத்தைக் கொடிவிட்டுப் பெருக்கியிருக்கிறது. பளளிக்கூடம் போய்ப் படித்த பிளளைகள அதன்பின் ஒன்றும் புரியத் தோன்றாமல் வீட்டிலே பத்திரிகைகளும் புத்தகமும் படிக்க உட்கார்ந்துவிடுகிறார்கள. திக்குத் தெரியாது காட்டிக்கொண்டுபோய் விட்டதுபோல திகைத்துநிற்கிறார்கள.

“ வேல் ”

ஹெட்மாஸ்டர் மேசைக்கு அந்நாளில் பலபேர் பலவித் காரியார்த்தமாக வந்தார் கள. குடும்பமுழுச்சம்பளம் செலுத்தும் பெற்ருேர்கள, பாதிச்சம்பளம்கட்டிப் பிளளைகளைப் படிப்பித்தவர்கள, தருமத்தில் படிப்பித்தவர்கள, சாதுக்கள, சந்நியாசிகள், பாடபுத்தக வியாபாரிகள் எனப்பலபேர் வகுப்புக்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தபோதெல்லாம் சற்றேனும் தட்டித்தயங்காமல் மண்டபத்துள் நுழைந்து விர்ரென்று நேரே ஹெட்மாஸ்டரைப் பார்க்கப் போவார்கள். சோதனைகார இன்ஸ்பெக்டர்கள் திடீரெனவந்து காரில் இறங்குவார்கள். இவர்கள் எல்லோருடனும் மிகச் சாதுரியமாகப்பேசி சாமர்த்தியமாக நடந்து மனச்சமாதானமாக அவர்களை அனுப்பிவைக்கும் சின்னப்பா மாஸ்டரின் பேராற்றலை அந்நாளில் வியக்காதவர்களே இலர். இன்ஸ்பெக்டர் ஒருவர் நடுமத்தியான வேளைபார்த்து கள்ளத்தனமாக திடீரென்று வந்துகுதித்துவிட்டாலவரை வாசல்வரைபோய் அழைத்து வந்து இருக்கை அளித்து உபசரித்து இன்மொழிபேசி பாடசாலைப் பின் வளவில் நின்ற எலுமிச்சையிலும் தென்னையிலும் நாலு காய் பறித்து தித்திப்பான இருதம்ளர் குளிர்பானம் பருகக் கொடுத்து மண்டபமே அதிரும்படி நாலைந்து சிரிப்பு வெடிபோட்டு வந்தவரை மனங்குளிரப்பண்ணி அவர் திரும்பும்போது வாசல்வரை கூடச்சென்று வழியனுப்பி விட்டுத் திரும்புவார்.

(12-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறள் கதை

## யார் வீரர்?

—பெருந்தேவி

முத்துவும் முருகனும் ஒரு காட்டிற்கு வேட்டையாடச் சென்றூர்கள். அவர்களிருவரும் கையில் ஆளுக்கொரு ஈட்டி எடுத்துச்சென்றூர்கள். சிறிது தூரம் காட்டினுள் சென்றதும்இருவரும் ஓர் இடத்தில் நின்றூர்கள்.

''முருகா, நாம் இவ்விடத்திலிருந்து பிரிந்து தனித்தனியாகச் செல்வோம். ஒரு மணிநேரம் கழித்து காட்டுக்கு வெளியே சந்திப்போம்'' என்று கூறினுன் முத்து.

''போடா கோழை! உன்ஞல் காட்டில் தனியே வேட்டையாட முடியுமா?'' என்று கேட்டான் முருகன்.

இதைக்கேட்ட முத்துவுக்குக் கோபம் வந்தது. 'ஒரு மணிநேரங்கழித்த பின் யார் வீரன் என்று பார்த்து விடுவோம்'' என்றுன்முத்து.

''சரி'' என்றுன் முருகன். இருவரும் தனித்தனியே சென்றனர்.

ஒருமணி நேரத்திற்குள் முத்து ஒரு முயலைக் குத்திக் கொன்று எடுத்துவந்தான். முருகனே பல முயல்களைப் பார்த்தும் ஒன்றையும் கொல்லவில்லை! அவன் ஒரு யானையைத்துரத்திச்சென்று ஈட்டியை எறிந்தான். ஈட்டி தவறிவிட்டது. நேரமாகிவிடவே முருகன் ஈட்டியை எடுத்துக்கொண்டுவந்தான்.

''பார்த்தாயா முருகா! யார் வீரரென்று! நான் முயலைக் கொண்டுவந்திருக்கிறேன். நீ வெறுங்கையோடு வந்திருக்கிறுய்.'' என்று கூறிஞன் முத்து.

யானையைத் துரத்திச் சென்றுஈட்டியைவீசினேன். குறி தப்பிவிட்டது. சிறியதைக்கொன்று பெறும்வெற்றியைக் காட்டிலும் பெரியதை இலக்காக்கித் தவறுதல் மேல். ஆதலால் நான்தான் வீரன்'' என்றுன் முருகன்.

இவர்களிருவரும் யார் வீரரென்று தர்க்கம் செய்து கொண்டிருக்கையில் வள்ளுவர் அவ்வழியே போவதைக் கண்டு அவரிடம் சென்று நீதி கேட்டனர்.

''எளியதை வாட்டி வதைத்து வெற்றிபெறுவதால் வீரன் என்று ஒருவன் மார்தட்டக்கூடாது. எதிர்க்கப்பெற்ற பொருள்களின் உயர்வு இழிவுகளினுல்தான் புகழமைந்துள்ளது.

''சிறியாரைக்கொன்று பெறும்வெற்றியைக்காட்டிலும் பெரியாரை இலக்காக்கித் தவறுதல்மேல். முயலைக் கொன்றதைக் காட்டிலும் யானையின்மேல் ஈட்டியை எறிந்து தவறவிட்டு ஈட்டியைப் பிடுங்கிவந்து விட்டதுதான் வீரம்'' என்று வள்ளுவர் கூறிவிட்டு வீட்டுக்குச் சென்றூர்.

கொண்டான்குறிப்பறிந்த வாசுகி, வள்ளுவரைக்கண்டதும் எழுதுகோலையும் புத்தகத்தையும் கொண்டுவந்து கொடுத்துவிட்டு உள்ளே சென்றுள்.

வள்ளுவர்தம்புத்தகத்தை எடுத்து படைச்செருக்கு என்னும் அதிகாரத்தைத் திறந்து, அதன் இரண்டாவது வரியில், ''காட்டில் ஓடும் முயலை நோக்கிக் குறிதவருமல் எய்த அம்பை ஏந்துதலைவிட, வெட்டவெளியில் நின்ற யானைமேல் எறிந்து தவறிய வேலை ஏந்துதல் சிறந்ததுஎன்று எழுதி வைத்தார்.

ஆகவே நாமும் சிறுசிறு காரியங்களில் வெற்றிபெற எண்ணுமல் வள்ளுவரின் குறளை மனதில் இருத்துவோம்.

''கான முயலெய்த
அம்பினில் யானை
பிழைத்தவேல்
ஏந்தல் இனிது''

## ஊஞ்சல் ஆடவா!

—மேலைப்புலோலி மு. சு. கதிர்காமத்தம்பி

ஊஞ்சலாடவா தம்பி ஊஞ்சலாடவா
உயர்ந்து தாழ்ந்து உலகமாட ஊஞ்சலாடவா
ஊஞ்சலாடவா

காய்ந்த மரத்தில் கயிறுகட்டி ஊஞ்சலாடவா
சாய்ந்து கயிற்றில் காலைநீட்டி ஊஞ்சலாடவா
ஊஞ்சலாடவா

மனத்துக்குகந்த மாலைப்பொழுதில் மகிழ்ந்து
ஆடவா
கனத்த நெஞ்சம் களிப்பில் மிதக்கக்காற்றிலாடவா
ஊஞ்சலாடவா

கழுத்துவரையும் தள்ளிப்பின்ஞல் ஓடியாடவா
களைக்குமளவும் கதைகள் சொல்லிப் பாடியாடவா
ஊஞ்சலாடவா

இணைந்திருந்து இதயம்பொங்க இருந்து ஆடவா
அணைந்திருந்து அருகருகே ஆடிப்பாடவா
ஊஞ்சலாடவா

கயிற்றை முறுக்கிக் கையிற்பிடித்துச் சுழன்று ஆடவா
வயிற்றை ஒடுக்கி வாயைக்கடித்து வளைந்து ஆடவா
ஊஞ்சலாடவா

கொஞ்சுமுள்ளம் சிறகுகட்டிப் பறந்து ஆடவா
கோழையுலகில் ஏழ்மைநீங்கக் கூடியாடவா
ஊஞ்சலாடவா




## ஐக்கியநாடுகள் சபை

உலக அரசியலின் தலைமைப்பீடமாக விளங்கும் ஐக்கிய நாடுகள் சபை இம்மாதம் 26-ம் திகதியுடன் 25 வயதை அடைகிறது. இரண்டாவது உலக மகா யுத்தம் முடிவடைந்ததை அடுத்து 1945-ம் ஆண்டு ஜூன் மாதம் 26-ம் திகதிதான் ஐ. நா. சாசனம் கைச்சாத்திடப்பட்டது. எனவே இந்த உலக ஸ்தாபனம் உதயமாகி இன்றுடன் கால் நூற்றுண்டு காலம் கழிந்துவிட்டது. ஐ. நா. சபைக்கு முன்னேடியாக இருந்தது சர்வதேச சங்கமாகும். 1919-ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இச் சங்கம் வல்லரசுகளின் கெடுபிடியால் நிலைத்துநிற்கமுடியாமல் ஈற்றில் கலைக்கப்பட வேண்டியதாயிற்று.

1941-ம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் அமெரிக்க ஜனுதிபதி ரூஸ்வெல்டும் பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சிலும் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பலாபலனுகவே ஐ. நா. ஸ்தாபனம் தோற்றம்கொள்ளமுடிந்தது. இந்தப் பேச்சுவார்த்தைகளின் முடிவில் இவ்விரு தலைவர்களும் கூட்டாகக் கொள்கைப்பிரகடனம் ஒன்றை வெளியிட்டார்கள். அத்திலாந்திக் சமுத்திரத்தில், கப்பல் ஒன்றிலிருந்து இப்பேச்சுக்கள் நடைபெற்றதால் இவர்கள் விடுத்த இக்கொள்கைப் பிரகடனத்தை 'அத்திலாந்திக் சாசனம்' என்று சரித்திர ஆசிரியர்கள் கூறுவர்.

இப்பிரகடனம் விடுக்கப்பட்ட மறு ஆண்டு, ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய தேசங்களுடன் போரில் மோதிய 26 நாடுகள் மேற்படி அத்திலாந்திக் சாசனத்தை அங்கீகரித்துக் கைச்சாத்திட்டன. இதனை அடுத்து வாஷிங்டனில் அமெரிக்கா, பிரிட்டன், சோவியத் யூனியன், சீன ஆகிய வல்லரசுகளின் மகாநாடு ஒன்று நடைபெற்றது. இம்மாநாட்டின்போது சர்வதேச பாதுகாப்பு ஸ்தாபனம் ஒன்றை உருப்பெறச்செய்வதற்காகப் பூர்வாங்கத்திட்டம் ஒன்று வரையப்பட்டது. மறுவருடம் நடைபெற்ற ஜால்டா மகாநாட்டின்போது பிரிட்டன், அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகிய வல்லரசுகள் மீண்டும் சந்தித்து சான்பிரான்சிஸ்கோ நகரில் 'ஐக்கிய நாடுகள்மகாநாடு' ஒன்றைக் கூட்டுவது எனத் தீர்மானித்தது.

இதன் பிரகாரம் சான்பிரான்சிஸ்கோ நகரில் 1945-ம் ஆண்டு ஏப்ரல் 25-ம் திகதி ஐக்கிய நாடுகள் மகாநாடு கூட்டப்பட்டது. இம்மாநாடு சுமார் இரண்டு மாதங்கள்வரை நீடித்தது. இம்மாநாடு முடிவுற்ற தினத்தில் அதாவது ஜூன் மாதம் 26-ம் திகதி ஐ.நா. சாசனம்ஒன்று வரையப்பட்டு அதில் உலகநாடுகள்கைச்சாத்திட்டுக்கொண்டன.

பாதுகாப்புச்சபை, ஐ.நா. பொதுச்சபை மற்றும் விவசாயம், உணவு, சுகாதாரம், அபிவிருத்தி, நிதியுதவி போன்ற துறைகளில் உதவியளிக்கும் பல்வேறு கிளைத்தாபனங்களைக் கொண்டதாக ஐ நா. சபை இயங்கி வருகிறது.

ஐ. நா.வின் இந்தக் கிளைத்தாபனங்கள் உலக சமுதாய சுபீட்சத்திற்கென அளப்பரிய சேவையாற்றிவருகின்றன. ''சகல மக்களினதும் பொருளாதார சுபீட்சத்திற்கென சர்வதேச வளத்தைத் திரட்டிக் கொடுப்பது' என்று ஐ நா. சாசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் இந்த உன்னத இலட்சியத்தையே இக்கிளைத்தாபனங்கள் தமது பிரதான பணியாகக்கொண்டிருக்கின்றன.

மனித சமுதாய நல்வாழ்விற்கு ஐ. நா. கிளைத்தாபனங்கள் அருந்தொண்டாற்றிவரினும் அரசியல் விவகாரங்களில்தான் ஐ. நா. வின் பெயர் அடிக்கடி அடிபடுவதுண்டு.

(14ம் பக்கம் பார்க்க



## மாவீரன் லெனின்

தன் தாய் நாட்டுக்காகப் பாடுபட்டவரும் சோவியத் ரஷ்யாவின் தந்தையென அழைக்கப் பட்டவருமாகிய விளாடிமிர் இலிச் லெனின் 1870-ம் ஆண்டு ஏப்ரல் 22-ந் திகதி பிறந்தார். இவருடைய தந்தையார் பாடசாலைப் பரிசோதகராவார். இவருடைய தாய் ஒரு டாக்டரின்மகளாவார். வொல்கா ஆற்றுக்கு அருகிலுள்ள 'சம்பிறிஸ்க்' என்ற இடத்தில் பிறந்தார். இவருடைய உண்மைப்பெயர் 'விளையநோவ்'. அரசியல் காரியங்களில் ஈடுபடுத்துவதற்காகவே தனது உண்மைப் பெயரை மறைத்து 'லெனின்' என்ற பெயரை வைத்துக்கொண்டார். இவருடைய காலத்தில் பாட்டாளி மக்கள் மிக ஏழைகளாகக் காணப்பட்டனர். பிரபுக்களால் இவர்கள் மிகவும் கொடுமைப் படுத்தப் பட்டனர் நடுத்தரவகுப்பைச் சேர்ந்த லெனின் போன்ருேர் இம்மாற்றத்தைக் கொண்டுவர விரும்பி அதற்காக உழைத்தனர்.

லெனின், ஜெர்மனியன் கார்ல்மார்க்ஸின் கொள்கைகளை ஆதரித்ததோடு அவற்றைப் பின்பற்றவும் செய்தார். கார்ல் மார்க்ஸ், பொதுஸ்தாபனங்கள் குறிப்பிட்ட ஒரு சில மனிதருக்கு மாத்திரம் சொந்தமல்ல. அவைகள் எல்லோருக்குமே சொந்தம் எனக் கூறினுர். இந்த அடிப்படை உண்மைகளைப் பின்பற்றி ரஷ்யாவிலும் 'கம்யூனிஸத்'தைப் பரப்பினுர்.

1893-ல் லெனின் சென்ற் பீற்றர்ஸ்பர்க் என்ற இடத்துக்கு சென்றூர். இவருக்குப் பின் இந் நகரம் லெனின்கிராட் எனப் பெயரிடப்பட்டது. இந்நகரமக்கள் புரட்சி செய்தனர். இவர்களுக்கு தலைவராக விளங்கினுர் லெனின். இதனுல் லெனின் சைபீரியாவுக்கு நாடுகடத்தப் பட்டார்.

லெனின் நாடுகடத்தப் பட்டபின் சுவிற்சலாந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளுக்குச் சென்றூர். 'மூனிச்'சிலிருந்து லண்டனுக்கு ஒரு புதினப் பத்திரிகையை வெளியிட்டார் இப்பத்திரிகை சட்ட விரோதமாகவும் இரகசியமாகவும் ரஷ்யாவுக்கு அனுப்பப்பட்டது.

1917-ல் முதலாம் உலக யுத்தத்தின்போது ஜெர்மனி ரஷ்யாவோடு சண்டையிட்டது. அப்போது சென்ற் பீற்றர்ஸ்பர்க்நகரில் மக்கள் புரட்சி ஏற்பட்டது. அப்போது லெனின் சுவிற்சலாந்தில் இருந்தார். இப்புரட்சி ஏற்பட அதிகநாள் காத்திருந்தார். ரஷ்யாவை அடைவதற்கு ஜெர்மனியைத் தாண்டிச் செல்ல வேண்டும். தான் ரஷ்யனுக இருப்பதால் தன்னை ஜெர்மனியர் கொன்றுவிடுவார்கள் என அறிந்து அவர்களோடு ஓர் உடன்படிக்கை செய்துகொண்டு 1917 ஏப்ரலில் ரஷ்யாவுக்கு வந்து சேர்ந்தார். தனதுகட்சியை மக்களிடையே பிரச்சாரம் செய்து முதலில் தோல்வி கண்டார். அடுத்த தடவை வெற்றிகண்டார். முதல் தடவையாக 'கம்யூனிஸத்தை' ஆட்சிக்குகொண்டு வந்த பெருமை இவரையே சாரும். 1918-ல் இவரைக் கொலைசெய்ய எத்தனித்தார்கள். ஆனுல் தப்பிவிட்டார்: தமது ஆட்சிக்காலமாகிய ஆறு வருடத்திலும் திறமையாகப் பணிபுரிந்தார் 1924 ஜனவரியில் மரணமடைந்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இயற்கை வைத்தியம்

குழந்தை இரவில் படுக்கப் போகும்போது அதற்கு இரண்டு பேரீச்சம்பழம் கொடுங்கள். பேரீச்சம்பழம் டானிக்கைவிட வைட்டமின் மாத்திரையைவிடச் சிறந்தது. இரும்புச் சத்துடன் இன்னும்பல சத்துக்களும் பேரீச்சம் பழத்திலிருக்கின்றன.

0 0 0

வயிற்றில் புண் இருந்தால் வாயில் புண் வரும். இந்த வயிற்றுப் புண்ணுக்கும் வாய்ப் புண்ணுக்கும் மணத்தக்காளிக் கீரை மிகவும் நல்லது. மணத்தக்காளிக்கீரையையும் பச்சைப் பருப்பையும் கூட்டுச் செய்து தினசரி சாப்பிடுங்கள். வயிற்றிலும் புண் இருக்காது. வாயிலும் புண் இருக்காது. இது இயற்கை வைத்தியம்.

## பஜ்ஜி

தேவையான பொருட்கள்:-

கடலைமா அரை சுண்டு, அரிசிமா 1மேசைக் கரண்டி

மிளகாய்த்தூள், உப்பு, அப்பச்சோடா சிறிதளவு, பெருங்காயம் சிறிதளவு

கத்தரி, வெங்காயம், உருளைக்கிழங்கு, வாழைக்காய், கரட், தக்காளி முதலியவைகளின் வெட்டிய மெல்லிய துண்டுகள்.

செய்கைமுறை

கடலைமாவையும் அரிசிமாவையும் கலந்து சோடா, மிளகாய்த்தூள் முதலியவற்றோடு தண்ணீரில் திட்டமாய்க் கரைத்துக் கொள்ளவும். மெல்லிய வட்டமான காய்த்துண்டுகளை இம்மாவில் தோய்த்து, கொதிக்கும் எண்ணெயிலிட்டுப் பொரிந்தபின் எடுக்கவும்.

இவைகளோடு தேங்காய்ச் சட்டினி சேர்த்துச் சாப்பிடலாம்.

# அவன்பாடு ஆசிரியர்பாடு என்று இருக்கலாமா?

திருமதி மல்லிகா சின்னப்பன்

'சுவரை வைத்துத்தான் சித்திரம் எழுதவேண்டும்' என்பதை நாம் அறிவோம். பல இன, மொழி, பழக்க வழக்க சூழ்நிலையிலுள்ள பல குழந்தைகளும் புதிய இடத்தில் (பள்ளியில்) புதிய சூழ்நிலையில், அந்நியர் (ஆசிரியர்) ஒருவரின் கட்டுப்பாட்டில் தங்களைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டிய சூழ்நிலையில் தங்கள் பள்ளி வாழ்க்கையை ஆரம்பிக்கின்றனர்.

குணத்திலும் செய்கைகளிலும் வித்தியாசமுடைய பல பிள்ளைகளோடு நம் குழந்தைகள் சேர்ந்து பழக பெற்றோராகிய நாம்தூண்டுகோலாயிருப்பதுடன் அவர்களுடைய நடத்தையிலும் இப்போதிருந்தே ஒருகண் வைத்திருக்கவேண்டும்.

ஏனெனில் ஐந்தில்வளையாததை ஐம்பதில் வளைக்க முடியாது. ஆசிரியர் ஒரே சமயத்தில் தன் வகுப்பிலுள்ள முப்பது, நாற்பது பிள்ளைகளைக் கண்காணிக்க வேண்டிய நிலையில், அதுவும் சிலமணி நேரப் பாதுகாப்பில் எதையும், எவரையும் ஓரளவே சீர்திருத்த முடியும், ஆசிரியர் ஒருவரால் மட்டும் ஒழுக்கம் உயர் வைத் தரும்' எனச் சொல்லிலும் செயலிலும் நடந்து காட்டிவிடுவதால் மட்டும் நம் குழந்தை உயர்ந்தவனாக வளர, வாழ முடியாது.

நம் குழந்தை அவனுடைய பள்ளி நண்பர்களிடம் கற்று வரும் நல்ல பழக்கங்களை குணங்களை நல்லதென்றால் போற்றவும், தீயதென்றால் உடனுக்குடன் கண்டிக்கவும் தவறினோமானால் அதுவே பின்னால் வீட்டுக்கும் நாட்டுக்கும் பிரயோசனமற்ற குடிமகனைப் பெற்றெடுத்த பாவியாகத் திகழ்வோம்.

நம் குழந்தை அறிவைப் பெறவும் அன்பையும்மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொள்ளவும் ஒற்றுமையுடன் வாழவும் பள்ளி வாழ்க்கைசிறந்ததென்று நாம் நினைக்கும் நினைப்பு வீணாகாமலிருக்க சமயம் வாய்க்கும்போதெல்லாம் நாம் வளர்ந்து வரும் நம் குழந்தைக்குச் சிறுகச் சிறுக நல்ல கருத்துரைகளைக் கூறி நம் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளத் தவறக்கூடாது.

நம் பிள்ளையின் ஆரம்ப, அடிப்படைக்கல்வியும் ஒழுக்கமும் சீராக இருந்தால் தான் அவனின் எதிர்காலம் சிறப்பாக அமைய முடியும்.

ஒரு நாட்டின் வாழ்வும் வீழ்ச்சியும் இன்றைய குழந்தைகளாகிய அவர்கள் நாளை தலைவராகும்போது தெள்ளெனப் புலப்படும். குழந்தை முதலே இளமை முதலே ஒற்றுமை, பிறர்க்குதவும் பண்பு, தன்கடமை, பொறுப்பு, நாட்டு-மொழிப் பற்றுக்களை உணவோடு ஆரம்பப்பள்ளி வாழ்க்கையிலிருந்தே ஊட்டி, உணர்த்தி வருவோமானால் நாம் பட்ட பாட்டுக்குப் பலன் கிடைக்காமல் போகாது.

நம் பிள்ளையைப் பள்ளிக்கனுப்பிவிட்டோம்: நம் கடமை தீர்ந்தது: அவன் பாடு அசிரியர் பாடு: வீட்டில் தொல்லை குறைந்தது என்று கூறும் ஒருசில பெற்றோர்களும் உண்டு. தன் பிள்ளை பள்ளிக்கூடம் போய் விட்டால் மட்டும் கடமை தீராது. பள்ளி முடிந்து திரும்பிவரும் குழந்தையை, வந்தவுடன் பெற்றோர் சிடுசிடுவென்று பேசாது, வேலை ஏதும் ஏவாது உடைமாற்றி, கைகால் அலம்பச் செய்து உணவளித்து சிறிது நேரம் ஓய்வெடுக்கச் செய்தபின் அன்பாக, ஆதரவாக அரவணைத்து அவனின் பள்ளி நேரத்தை எவ்வாறு எப்படி எல்லாம் கழித்தான் என்பதை ஆர்வமுடன் மகிழ்ச்சிகரமான மனநிலையில் அவனோடு அளவளாவிக் கேட்டறியவேண்டும்.

நம்பிள்ளையின் ஆசிரியர், நண்பர்கள், விளையாட்டுகள், இதைப் பற்றியும் ஓரளவு கூறக்கேட்டு, அவனோடு சேர்ந்துநாமும் மகிழுவதால் நம்பிள்ளைக்குப் பள்ளிசெல்லவும் கல்வியைக் கற்கவும் புதிய தெம்பையும் உற்சாகத்தையும் நம்மால் நிச்சயம் தர முடியும்




# பர்மிய நாகர்களின் திருமண மரபு

## மருமகளுக்காக வீட்டைத் தியாகம் செய்யும் மாமியார்

வீட்டுக்கு வரும் மருமகள் தனிக்குடித்தனம் நடத்த அவருடைய மாமனாரும் மாமியாரும் ஏற்பாடுசெய்து கொடுக்கும் பழக்கம் பர்மிய நாகர்களிடம் உள்ளது. மகனுக்குத் திருமணமாகி மருமகள் வந்ததும் அவனுடைய பெற்றோர்கள் அந்த வீட்டைக் காலி செய்து கொடுத்துவிட்டு வேறுவீட்டில் குடியேறுகின்றனர்!

இது பர்மிய நாகர்களிடம் தலைமுறை தலைமுறையாக இருந்து வரும் ஒரு பழக்கமாகும்.

திருமணம் போன்ற நிகழ்ச்சிகளுக்கு வரும் விருந்தினர்களைத் திணற அடிக்கும் வகையில் உபசரிப்பதும் அவர்களுடைய பழக்கம்.

திருமண வைபவத்துக்குப் பெருமதிப்புக் கொடுப்பதிலும் அந்த வைபவத்தின்

(14-ம் பக்கம் பார்க்க)

# உங்கள் கார்டயர் ஆணா? பெண்ணா?

என்ன திகைக்கிறீர்கள்? டயர்களில்கூட 'ஆண் டயர்' என்றும் 'பெண்டயர்' என்றும் இருக்கிறதா என்று கேட்கிறீர்களா? ஆம்! அமெரிக்கக் கம்பனி ஒன்று இரண்டுவிதமான டயர்களைத் தயாரிக்கிறது ஆண் டயருக்கு அடையாளம்] அகலமாக ஆழம் நன்றாகச்செதுக்கப்பட்டிருப்பதுதான். பெண் டயர்? பெண் என்றால் கவர்ச்சிவேண்டுமே! அதற்காகப் பெண் டயர் பல எழில்மிகு வண்ணங்களில் உருவாக்கப்படுவதோடு அல்லாமல் பல வண்ணங்களில் பூவேலைப்பாடுகளும் கொண்டு அழகாகக் காட்சியளிக்கிறது! வாடிக்கையாளர்கள் ஆண்—பெண் இரு டயர்களையும் விரும்பி ஜோடி ஜோடியாக வாங்கிச் செல்கிறார்கள்.

# ஆட்சியாளர்களைக் கலக்கிய எதிர்க்கட்சித் தலைவி!

உலகத்தின் முதலாவது பெண் பிரதமர் என்ற சாதனையை நிலைநாட்டிய திருமதி ஸ்ரீமாவோ, எதிர்க்கட்சித் தலைவியாக இருந்தும் ஆட்சியாளர்களுக்கு 'சாட்டை' யடி கொடுத்திருக்கிறார்.

1965—1970ம் ஆண்டு காலத்தில் தேசிய அரசாங்கத்துக்கு நேருக்கு நேர் நின்று பதில் சொல்லக்கூடிய திறனும் திராணியுமுள்ள எதிர்க்கட்சித் தலைவியாக இருந்தார்!

டட்லி தலைமையிலான அரசாங்கத்துக்கு அடிக்கடி தலையிடியை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்.

நல்லதொரு எதிர்க்கட்சி இல்லாவிட்டால், 'யார் நம்மைக் கேட்பது; நமது தவறைச் சுட்டிக் காட்டுவது என்ற போக்கில் ஆட்சியாளர்களும் 'தான் தோன்றித்தனமாக' நடக்க எத்தனித்திருக்கலாம்.

ஆனால் பலம் வாய்ந்த ஓர் எதிர்க்கட்சிக்கும், பலம் வாய்ந்த ஓர் எதிர்க்கட்சித் தலைவிக்கும் பதில் சொல்ல வேண்டுமேயென்ற பயத்தில், ஆட்சியாளர் நிதானமாக மிகமிக நிதானமாக நடவடிக்கைகளை மேற்கொண்டனர்

கண்ணிலே எண்ணெயை வார்த்துக்கொண்டு மிகவும் அவதானமாக இருந்தார், ஸ்ரீமா!

முற்போக்கு சக்திகளான கம்யூனிஸ்ட் சமசமாஜகூட்டணித் தலைவர் ஸ்ரீமாவுக்குப் பக்கபலமாக இருந்துகொண்டு நல்ல மந்திரிகள் இருந்து செயலாற்றினர்கள்.



அருமைக்கும் அருமையாகப் பிறந்த அருமைமகன் அனுரா!

ஆட்சிப் பொறுப்பை மக்கள் தம்மிடம் ஒப்படைக்காவிட்டாலும் அதனிலும் பெரிய பொறுப்பொன்றை ஒப்படைத்திருக்கிறார்கள் என்பதனை ஸ்ரீமா அப்போது மறக்கவில்லை.

ஆட்சியாளர்களைக் கண்காணித்து, தவறுகளைச் சுட்டிக்காட்டவேண்டிய இடத்தில் சுட்டிக்காட்டி மடக்கவேண்டிய இடத்தில் மடக்கி பொருதவேண்டிய இடத்தில் பொருதினர்!

பாமா ராஜகோபால்

நாடு விவசாயத் துறையில் முன்னேறி சுயதேவையைப் பூர்த்தி செய்து பொன்கொழிக்கும் பூமியாகத் திகழப்போகும் உச்ச நிலையை அடைந்துகொண்டிருக்கிறதென மூலை முடுக்கெல்லாம் அரசு பறைசாற்றிக் கொண்டிருந்தபோது ஸ்ரீமா சும்மா இருந்துவிடவில்லை.

உண்மை நிலையைத் தனது சகாக்களுடன் ஆலோசித்தார். அவருக்கு உண்மை புரிந்தது. மக்களுக்கு உண்மையை எடுத்தியம்பத் துடித்தார்.

'விவசாயத்தில் நாடு முன்னேறிவிட்டதாகச் சொல்வதெல்லாம் வெறும் 'டுப்'! இவைகளை நம்பாதீர்கள்!' என்று ஸ்ரீமா அன்று சொன்னது எவ்வளவு தூரம் உண்மை என்பதை மக்களே இப்போது உணர்வார்கள்!

விவசாயத்தில்மட்டுமல்ல, நாடு யந்திரமயமான ஒரு பொருளாதார பூமியாக மாறினால்தான் பல பிரச்னைகள் நம்மைவிட்டுச் செல்லும் என்று அன்று எதிர்க்கட்சியிலிருந்து கொண்டு குரல் எழுப்பினர்.

மகாவலித் திட்டம் வந்தது. உள்ளூர் பொறியியலாளர்களுக்கு முதலிடம் கொடுக்கவேண்டுமென்று கூறினர். வெளிநாட்டுக்கு அடிமைப்படுத்தக் கூடாதென்பது அவரது வாதம்!

இத்தனையையும் ஆட்சியாளர் உதறித்தள்ளிய போதும் அவரது கருத்துக்களைப் பலர் மறைமுகமாக ஏற்றனர்.!

தனது லட்சியத்தை நிறைவேற்ற காலத்தை எதிர் நோக்கிக் கொண்டிருந்தார், ஸ்ரீமா!

நாட்டை மாற்றியமைக்க பல திட்டங்களை நெஞ்சத்துக்குள் புதைத்து வைத்துக் கொண்டு, மக்களுக்கு உண்மைச்சேவை செய்யத் துடியாய்த் துடித்துக்கொண்டிருந்தார்!

அதற்கான காலமும் வந்தது!

(வளரும்)

எங்கள் பிரதமர் — 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுநாவல்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுமென்பதுதான் அந்த ஆசை. ஒருவேளை இதுதான் அவள் சேவைக்கு தகுந்த பரிசு என்று தீபன் கருதினுனே என்னவோ!

தீபம் ஒளி வீசுவதற்குக் காரணம் சுடர். சுடர் இல்லையென்ருல் தீபம் இல்லை. தீபன் என்ற தீபம் இலக்கிய உலகில் ஒளிவீசுவதற்குக்காரணம் திலகவதிஎன்ற சுடர். இந்த உண்மையை உணர்ந்துதானுேஎன்னவோ தீபன் தான் எழுதும் அந்த மாபெரும் நவீனத்துக்கு ''தீபச்சுடர்'' என்று பெயர் கொடுத்தான். ஈடிணையற்ற இலக்கிய சேவை செய்த திலகவதி இந்த நவீனத்தின் மூலம் இலக்கிய உலகில் எக்காலத்திலும் அழியாதஇடம் பெறுவாள் என்பது அவன் அந்தரங்க ஆசைபோலும்!

இந்த நவீனத்தைத்தீபன் தாஞகவே எழுதத் தொடங்கினுன். திலகவதியிடம் இதை எழுதும் பொறுப்பை அவன் கொடுக்க விரும்பாதது இயற்கைதானே. தணியாத ஊக்கமும் தணியாத வேட்கையும் இந்த நவீனத்தில் தீபனின் முழுத்திறமையையும் செலுத்திஉருவாகச் செய்தன. அற்புதமாக அமைந்த இந்த நவீனம் பத்திரிகைகளில் வெளிவரத் தொடங்கியதும் அகில உலகப் புகழே அடைந்துவிட்டது என்று சொல்லலாம். ஆங்கிலப் பத்திரிகைகள்கூட அது பற்றி விமர்சனம் செய்தன என்ருல் அதன் சிறப்பைப் பற்றிவேறு என்ன சொல்லவேண்டும்?

திலகவதிக்குத்தானே இந்த நவீனத்துக்குக் காரணம் என்பது முதலில் தெரியாது நவீனத்தின் முதல் சிலஅத்தியாயங்கள் வெளிவந்த பின்புதான் அவளுக்கும் உண்மை தெரிந்தது. அப்படிச் செய்ததற்காக அன்புடன் தீபனைக்கடிந்துகொண்டாள். ஆனுலும், அவள் உள்ளம் பெருமிதத்தால் துள்ளியது. வேறு யாருக்குக் கிடைக்கும் இந்தப் பாக்கியம்!

0 0 0

நண்பனின் திடீர் வளர்ச்சிக்கான காரணம் அறிந்துகொண்டதும் அளவில்லாத மகிழ்ச்சியடைந்தேன் நான். திலகவதியின் மேல் எனக்கு இன்னதென்று சொல்லமுடியாத பாசமும் பரிவும் ஏற்பட்டன. அவள் ஆற்றியிருக்கும் சாதனை சாமான்யமானதா என்ன? தீபனைத்தீபம் ஆக்கியதே அவள் தானே.

இந்த நிலையில்தான் தீபனை மறையச் செய்த அந்தத் துரதிர்ஷ்டம் குறுக்கிட்டது.

(தொடரும்)

# இலவசக் கல்விக்கு முன்..

9-ம் பக்கத் தொடர்ச்சி)

'ஆள்கீரிமலைக்குப் போகுதாம் மாஸ்டர்' என்று எவராவது ஒருவகுப்பு ஆசிரியரிடம் வாய்க்குள் நமட்டு சிரிப்புடனே நற்செய்திகூறி மற்றவர்களையும் மனஆறுதல்படுத்தி விட்டுத்தான் தமது சிம்மாசனத்'திலே போய் அமருவார்.

பாடசாலைத் தோட்டமொன்று அந்நாளிலேயே இருந்தது. அதன் முழுப் பொறுப்பும் ஏற்று நடத்தியவர் சின்னப்பா மாஸ்டர். வயதுவந்த மாணவர்கள் நாலுநாலுபேராகப் பள்ளிக்கூடம் விட்டபின் இரண்டு மணிநேரம் நின்றுவாரத்தில் மூன்றுதினங்களுக்கு தோட்டத்துக்கு இறைத்துவிட்டுப் போகவேண்டும் என்று ஏற்பாடு. இம் மாணவர்களில் பலர் வீட்டிலே விடியற்சாமமாக எழுந்துஇரண்டாயிரம் மூவாயிரம் புகையிலைக்கும் வெற்றிலைக்கும் வாழைக்கும் சாமை, குரக்கன், மரவள்ளிக்கும் இடுப்பு ஒடிய இறைத்துவிட்டு வயிறுகுளிரப் பழஞ்சோறு சாப்பிட்டுவிட்டு புத்தகங்களைத் தூக்கிக் கொண்டு பள்ளிக்கூடத்துக்கு நடந்தவர்கள். அந்தச்சோற்றுப்பொலிவுடனே பள்ளிப்பொழுது முழுவேளையும் தாக்குப் பிடித்து நிற்க வல்ல உடலுறுதி பெற்றவர்கள். ஹெட்மாஸ்டரின் ஏற்பாட்டை மகிழ்ச்சியுடனே ஏற்றுக்கொள்வார்கள். பள்ளிக்கூடம் கலைந்ததும் இரண்டுபேர் கொடுக்குக் கட்(டு)டனே துலாவில் ஏறி விடுவார்கள். மூன்ருவது ஆள் பட்டைக் கொடியை எட்டிப்பிடிப்பான். நாலாவது ஆள் மண்வெட்டியுடனே தோட்டத்துக்குள் நுழைவான். ஒரு நொடியில் இறைப்பு முடிந்துவிடும். கைக்கு எட்டக் கூடியதாக மாங்காயும் தேங்காயும் கிடைத்தால் பிடுங்கி நாலு பேருமாகக் கூடிச்சப்பிச் சுவைத்துக்கொண்டே புத்தகங்களைத் தூக்கிக்கொண்டு வீடுநோக்கிப் பறப்பார்கள். ஹெட்மாஸ்டரும் கோடி புண்ணியம் பெறும் அவரது தருமசிந்தையில் கல்விகற்ற மாணவர்களும் அன்று இவ்வாறுகண்ணும்கருத்துமாகப் பாதுகாத்துவைத்த தோட்டப்புலத்தில்தான் இன்று கட்டடங்களும் விளையாட்டு மைதானமும் கம்பீரமாகக் காட்சிதருகின்றன.

இரண்டாம் உலகப் போரின்பின் இன்றெல்லாம் பத்திரிகைகளின் எண்ணிக்கையும் பத்திரிகைபடிப்பவர்களின் எண்ணிக்கையும் பலமடங்கு பெருகியிருக்கின்றன. அன்று, எங்கள் பள்ளிக்கூட வாசிகசாலையில் நாங்கள் வாசித்த தமிழ்பத்திரிகை ஈழகேசரியும் இந்துசாதனமும் சுதேச நாட்டியமும் உதயதாரகையும் ஆனந்த போதினியும் தாம். ஈழகேசரியுடன்

(13-ம் பக்கம் பார்க்க)

# இருண்ட கண்ட..

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆபிரிக்காவில் டர்பன் நகரில் திருக்குறள சங்கம் என்றபெயரில் ஒருசங்கம் நிறுவப்பட்டுள்ளது. இது தமிழ்மக்களுக்கு திருக்குறள பற்றிய விளக்கங்களையும், ஆய்வுரைகளையும் வழங்கி அதன் ஆக்க கருத்துக்களின் படி மக்களை ஒழுகவேண்டும் என வற்புறுத்தி வருகின்றது. திருக்குறளின் மொழி பெயர்ப்பு, ஆராய்ச்சிஆகியவற்றிலும் இச்சங்க அறிஞர்கள் ஈடுபட்டுவருகின்றனர். இங்கு குறிப்பிட்ட சங்கங்கள் தமிழையும் சைவத்தையும் ஒன்ருகச்சேர்த்துக் கவனித்து வரும் பொழுது தமிழ்க்கல்வியில் சிறப்பாக ஈடுபட ஒரு சங்கம் வேண்டும் என ஆபிரிக்க தமிழறிஞர்கள் ஆர்வம்கொண்டு நேட்டாலில் பீற்றர் மறிற்ஸ்பேர் தமிழ்ச்சங்கம் என்றதொரு தமிழ்ச் சங்கத்தை நிறுவித் தமிழ்மொழி, இலக்கியம் ஆகியவற்றை வளர்த்துவருகிருர்கள்.

திரான்ஸ்வாலில், நேத்தாலில்போன்று சமய அடிப்படையில் சங்கங்கள் அமையாவிட்டாலும் தமிழ்க்கல்வி கலாசாரத்தை வளர்க்கவென பிறிரோறியா தமிழ்ச்சங்கம், லோடியம் தமிழ்ச்சங்கம் என இரு தமிழ்ச்சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. கேப் மாகாணத்திலும் இவைபோன்ற சில தமிழ்ச் சங்கங்கள் தமிழ்க் கல்வியை வளர்த்து வருகின்றன.

இன்றும் ஆபிரிக்காவில் தமிழ்க் கலைகளுக்கு நல்ல வரவேற்புள்ளது. அங்குள்ள தமிழ்மக்கள் தாங்கள் கொண்டாடும் பண்டிகைகளான தீபாவளி, பொங்கல், புதுவருடம் போன்ற தினங்களில் கலை நிகழ்ச்சிகள் நடாத்தி அங்குள்ள தமிழ்மக்களை மட்டுமன்றி மற்றும் நீகிரோ, வெள்ளையர் போன்ற இனமக்களையும் மகிழ்விக்கிருர்கள். மக்கள மகிழ்வது மட்டுமன்றி தமிழ்நாட்டுக்குப் புறம்பானதொரு நாட்டில் தமிழர் கலாச்சாரம் பண்பாடு ஆகியனவும் பேணப்படுகின்றன. இவற்றைவிட இந்திய திரைப் படங்களும் பெருமளவில் தருவிக்கப்பட்டுக் காட்டப் படுகின்றன.

இந்தியாவிலிருந்து ஆபிரிக்காவற்கு விஜயம் செய்யும் தமிழ் அறிஞர்கள் அங்குள்ள இந்தியர்களை அவர்கள் தமிழ், கலை, கலாச்சாரம் ஆகியவற்றைப் பேணிப் பாதுகாக்கிருர்கள் எனக் கூறி அவர்களைப் பெரிதும் பாராட்டுகிருர்கள். 1963-ம் ஆண்டு ஆபிரிக்காவுக்குச் சென்ற தமிழ் அறிஞரான திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் ஆபிரிக்காவிலுள்ள இந்தியர்கள் மிகவும் பாராட்டத்தக்க வகையில் தமிழையும் சைவத்தையும் தமிழர் தம் கலாச்சாரத்தையும் பேணிக் காத்துவருகிருர்கள் எனப் பாராட்டியுள்ளார்.

இங்குள்ள சில பல்கலைக் கழகங்களும் கீழைத் தேசங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதற்கெனத் தனியானதொரு பிரிவை அமைத்துள்ள டர்பனிலுள்ள சலிஸ்பறி பல்கலைக் கழகம் கீழைத்தேசக் கல்வியைப் பெரிதும் வளர்த்து வருகிறது. தமிழ்க் கல்விக்கும் இங்கு ஒரு இடம் அளிக்கப்பட்டிருக்கிறது.

பின்தங்கியது எனவும் இருண்ட கண்டமெனவும் பலரால் கூறப்பட்டாலும் ஆபிரிக்காவில் தமிழ் மக்களையும் தமிழ்க் கல்வியையும் பொறுத்தளவில் நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது. மேற்படி சங்கங்கள் தற்போது மேலைத்தேச நாகரிகத்தில் மூழ்கியிருக்கும் இந்திய இளைஞர்களுக்கு தமிழ் கல்வியையும் சைவத்தையும் ஓரளவுக்குப் போதித்தால் வருங்காலத்தில் ஆபிரிக்காவில் தமிழ் மொழிக்குச் சிறப்பானதொரு எதிர்காலம் உண்டு எனலாம்.

(தொடரும்)

நீங்கள் வீடு கட்டும் பொழுது
ஒட்டுப் பலகை
கதவுகளை பாவித்து
விலையை 40% குறைக்கவும்
விலை ரூபா 60/ தொடக்கம் ரூபா 156/- வரையாகும்.



ஒட்டுப் பலகை கதவுகள் பாரம் குறைந்ததவை, நீண்ட காலம் பாவிக்கக் கூடியவை, அழகு மிக்கவை. இலகுவில் பொருத்த கூடியவை. புலரக மரங்களில் தேர்ந்தெடுத்து உற்பத்தி செய்யப்பட்டவை. கிரிகம்பலிகை, கூலன்கிக், சற்றின் ஆகிய ஆடம்பர ரகங்களிலும் சாதாரண ரகங்களிலும் கிடைக்கும்.

கதவுகள் பின் குறிப்பிட்ட அளவுகளில் விநியோகிக்கப்படும்:

உயரம் : 6' 9''
அகலம் : 2' 3'', 2' 9'', 3' 6''
கனம் : 1¼''

வீட்டத்திற்கு உபயோகிக்கப்படுகிற பசை நீண்ட கால உழைப்பிற்காக சிறந்த முறையில் பதப்படுத்தப்பட்டவையாகும்.

உற்பத்திக்கு உபயோகிக்கப்பட்ட பசை ஈரத் தன்மையை எதிர்க்கும வன்மையுடையது.

இக்கதவுகள் பாவனையாளருக்கு உடனடியாக விற்பனைக்கு கிடைக்கும்.

இலங்கை ஒட்டுப்பலகை கூட்டுத்தாபனம்
கிளை: 18, பலாலி வீதிச் சந்தி, ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 508.

இலங்கை ஒட்டுப்பலகை கூட்டுத்தாபனம்
420, பௌத்தலோக மாவத்தை
கொழும்பு 7.
தொலைபேசி : 95846, 92903

THUNDERFLASH

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நமது நூல் நிலையம்

தமிழருவி

ஆசிரியர்: வே. ஜே. போஸ்.

வெளியீடு:-

இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி. தமிழ் மன்றம். கொழும்பு.

தேமதுரத் தமிழோசை உலகெலாம் பரவும் வகை செய்தல் வேண்டுமென்று அடிமைப்பட்ட பாரதத்தில் கனவு கண்டவன் பாரதி. இதந்தருமனையில்நீங்கிஇடர் மிகு சிறைப்பட்டாலும் சுதந்திர தேவியைத் தொழுதுநின்ற அந்த மணிக் கவிஞனின் வாக்கு இன்று பலித்துவிட்டது.

நாட்டிலே பலபல கழகங்கள் செந்தமிழின் இன்பந் துய்த்து சிறந்த சேவை யாற்றுகின்றன. நல்லநாடகங்களை ஆக்கவும் மேடையேற்றவும் பல்லாயிரம்இளைஞர்கள் தோள்தட்டி நின்கின்றனர். இது தமிழ் வழங்கும் நல்லுலகமெங்கும் இன்று காணக்கூடிய காட்சியாகும்.

முன்புகலையை ஒருசாரார் மட்டுமே கட்டிக் காத்துவந்தனர். தமிழையும் குறிப்பிட்டவர்கள் மட்டுமே பேணினர். ஆனால் இன்று எல்லோருமே கலையும் தமிழும் பேணுகின்ற நல்ல இலட்சியம் ஊடுருவியுள்ளது.

இத்தகைய எழுச்சியின் பின்னணியிலே எழுந்தது தான் தமிழருவி. கொழும்பில்தொழில் நுட்பம் பயிலும்மாணவர்களுக்கா தமிழ்ப்பற்று? என்று சிலர் அதிசயப்படலாம். தொழில் புரிவதுதூயதமிழைப் பேணவே என்ற கருத்துடைய இளைஞர்தம் இதயஊற்ருக தமிழருவி பிரவகித்துள்ளது.

'எண்ணுறும்போது
தமிழையே பெண்ணீர்
இசைத்துழி தமிழையே
இழைப்பீர்'

என்றசுத்தானந்தரின் அடியில் செல்லும் தலைவரின் செய்தியுடன் மணியானகட்டுரைகள் கவிதைகள் என்பன அருவியை அலங்கரித்துள்ளன. ஆலய அமைப்பில் புதுமை, இலங்கை மனிதனும் நீரும், சோவியத் நாட்டில் தமிழிலக்கிய ஆராய்ச்சி, இலங்கையின் பொருளாதார முன்னேற்றம் ஆகியன தொழிற்கல்வி மாணவர்களின் வளர்ச்சிச்குகந்த கட்டுரைகள். அவர்களின் இலட்சியத்துக்கும் ஆக்கம் ஊட்டுகின்றன. பல பெரியார்கள் விடயதானம் செய்து மலரை [மலரவைத்துள்ளனர்.

"இன்றைய உலகில் மாணவர் எத்தனையோ துறைகளில் தொண்டாற்றிவருகின்றனர். அத்துறைகளில் எல்லாம் நம் தமிழ்பேசும் மாணவர் நாட்டின் நலத்துக்கும் தமிழ்பேசும் மக்களின் உயர்வுக்குத் தொண்டாற்ற வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்."

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" இவ்வாறு உலகத் தமிழ்மன்றச் செயலாளர் தனிநாயக அடிகளார் கூறுவதை தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் நெஞ்சேற்றி எதிர்காலத்தில் ஆக்கங்கள் புரிய முற்பட வேண்டும்.

"சென்றிடுவீர் எட்டுத்
திக்கும்-கலைச்
செல்வங்கள் யாவும்
கொணர்ந்திங்கு
சேர்ப்பீர்"

என்ற பாரதிமொழியுடன் நிறைவுறும் தமிழருவியின் இரண்டாவது மலர் பயனுள்ள படைப்பு. பைந்தமிழ் உள்ளங்களுக்குரிய விருந்து தரவல்லது.

—கரும்பு

# யாழ் நூல் தந்த...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

செல்வங்களையும்நாம்மறந்துவிடலாகாது; நாட்டுப் பாடல்களையெல்லாம் மக்கள் மறந்துவிடுமுன் அவற்றைத் தொகுத்து வெளியிடுதல்வேண்டும்" என்று கூறுவார்கள். கீழ் மாகாணத்தில் புதிதாக நிறுவப்பட்ட பள்ளிக்கூடங்களில் சுவாமியர்களுக்குத் தனிப்பிரீதி. பொதுமக்களின் முன்னேற்றத்தில் மிகுதியான விருப்பம் "வெறும் வயிற்ருேடு, உண்ண உணவும் உடுக்க உடையுமின்றி வாழும்மக்களுக்குக்கலாச்சாரம் எதற்கு? நாட்டைத் திருத்திப்பயிரிட்டு வயிறுகுளிர மக்கள் உண்ணுதல் வேண்டும்" என்பார்கள். இப்படியான உரைகள் சுவாமிகளின் தூய்மையான உள்ளத்திலிருந்து இயல்பாக எழும் உணர்ச்சியின் பாற்பட்டவை. இந்த வாசகங்களையெல்லாம் மிகுதியாகக்கேட்பதற்குச் சந்தர்ப்பங்கள்பல ஏற்படுவனவாயின் அதைப் பெரும்பாக்கியமாகவே நான் கருதினேன். சுவாமியவர்கள் மட்டக்களப்புப் பகுதிக்கு வரும்போதெல்லாம் நாங்கள் அடிக்கடி சந்திப்பதுண்டு. விரைவில் நானும் கல்முனையிலிருந்து மாற்றப்பட்டேன். சுவாமிகளும் பல்கலைக்கழகத்தோடு கொழும்பிலிருக்க வேண்டியவரானர்.

பின் 1944-ம் ஆண்டிலே, கண்டியில் மருதமலைய மாளிகையகத்தே, பன்னிரண்டுநாட்கள்வரை சுவாமியவர்களை விருந்தினராக வைத்து உபசரிக்கும்பெரும்பேறு எனக்குக்கிடைப்பதாயிற்று. கண்டியிலே அவர்கள், "வரகவி பாரதியார்" என்னும் பொருள் பற்றி நிகழ்த்திய பிரசங்கம் இன்னும் என்நினைவில் நிற்கிறது. தமிழிலே எளிய நடையிலே பாட்டுக்களை இயற்றியவருள்ளே பாரதி தலைசிறந்தவர் என்பதை யல்ல, தேசிய உணர்ச்சியும்தேசாபிமானமும் பொங்கும்படி கவிகளை எளிமை சார இயற்றியவர் பாரதி என்பதையே நாம் நினைவு கொள்ளவேண்டுமென்று வற்புறுத்திக் கூறினர். பாரதியார் உபயோகித்த சிற்சில சொற்களை எடுத்து அவைகளின் செம்மையை வடிவாக விளக்கினர்கள். ஒவ்வொன்றுக்கும் பற்பல உதாரணங்களை எடுத்துக் காட்டி 'கவிஞனுள்ளம்' இதுவென விபரித்தார்கள் கண்டியிலே சுவாமிகள் என்னுடன் தங்கியிருந்தபோது அரசியல், பொருளாதாரம், கல்வி. சமயசம்பந்தமான பல விஷயங்களைப் பற்றி உரையாடினேம். அந்தக் காலத்திலேயே நான் இலங்கை முஸ்லிம் கல்விச் சகாய நிதிக்கான திட்டமொன்றினை வகுத்துக் கொண்டிருந்தேன். அம்முயற்சியிலே சுவாமிகள்எனக்கு அளித்த உற்சாகமும், கூரிய புத்திமதிகளும் இவ்விடத்துக்கூற அடங்காது; இலங்கை முஸ்லிம்களின் பேச்சுவழக்கிலுள்ளறஹ்மத் பறக்கத், மௌளத்து. ஹயாத், நிய்யத் போன்ற சொற்களையெல்லாம் திரட்டிச் சேர்க்க வேண்டுமென்று சுவாமிகள் ஆசை கொண்டிருந்தார்கள். மொழிநூல் சம்பந்தமாகப் பல சொற்களை எடுத்து மாற்றங்களையும் எனக்குச் சுட்டிக்காட்டினர்கள்.

அவர்கள் என்னுடன் தங்கியிருந்தபொழுது, அவர்களுடைய தூய்மையையும், ஒழுக்கத்தையும் கடவுள் பக்தியையும் ஒருவாறு கண்டேன். சமூக ஊழல்களைப் பற்றி அவர்கள் கொண்டிருந்த கொள்கைகளை அறிந்தேன். ஏழை எளியவர்கள் மீது கொண்டிருந்த இரக்கத்தையும் சமய சமரச நோக்கங்களையும்கூடக் கண்டேன். இஸ்லாம் மதத்திற்கு அவர்காட்டிய பெருமதிப்பினையும் கண்டேன்.

இவற்ருேடு கூடி வற்ருத ஊற்றுப் பெருக்குப்போன்ற அவர்களுடைய சங்க நூலறிவினையும் ஆராய்ச்சி மாண்பினையும் கண்டேன். மொழி பெயர்ப்புத் துறையிலும் அவர் ஆற்றல் மிக்கவராக விளங்கியதைக் கண்டேன்.

1945-ம் ஆண்டில் கொழும்புக்கு மாற்றம் பெற்றபின் நான் அடிக்கடி ராமகிருஷ்ண மிஷனுக்குச் சென்று அடிகளாரைச் சந்திப்பதுண்டு. கடைசியாக நான் சுவாமிகளைக் கண்டு உரையாடியது மிஸ்றுக்கு எகிப்துக்கு போவதற்கு இரண்டொரு வாரங்களுக்கு முன்னதாகவாகும். அப்பொழுது சுவாமிகள் யாழ்ப்பாணத்தில் போய்த் தங்கியிருந்த வேளையில் ஏற்பட்டதொரு காயத்துக்குக் கையில் மருந்து கட்டிக் கொண்டிருந்தார்கள். உடல் நலமும் குறைந்தே இருந்தது, பல்கலைக்கழக முயற்சிகளைக்கூடத் துரிதமாகச் செய்ய முடியாத நிலையிலிருந்தார் அவர்கள் தமிழ்ப் பகுதியின் வேலைகளை மாத்திரமல்ல, பல்கலைக்கழகத்தின் முயற்சிகள் எல்லாவற்றையும் ஓரளவுக்குக் கவனித்துக் கொண்டிருந்தார். அப்போது புதிதாக அமைக்கப்பட்ட அரபுப் பகுதியின் தலைவரான டாக்டர் இமாம் நிகழ்த்திய சில விரிவுரைகளை வெகு ஆர்வத்தோடு கேட்டு இன்புற்ருர். சுவாமியவர்கள் இந்திய நாட்டுப் பல்கலைக்கழகங்களில் பெற்றுக்கொண்ட அனுபவமானது நமது பல்கலைக்கழக அதிகாரிகளுக்குப் பெரிதும் உதவுவதாயிற்று அவர்கள் இந்து மதத்தவராகவும் நான் முஸ்லிம் சாகியத்தவனுகவும் இருந்த போதிலும் கூட எங்கள் அன்புரிமை விரைந்து வளர்வதாயிற்று' அவர்களை நான் எனது மூத்தசகோதரன் போல மதித்து நடந்தேன். சிற்சில விஷயங்களில் எனக்குச் சிக்கல் ஏற்படும்போது அவருடைய புத்திமதிகளை நாடி நின்றேன், அதனுல் சுவாமிகளை நான் இலகுவில் மறந்துவிட முடியாது.





குளிர்மையான,
மெந்தோல் பில்டர் முனை
சிகரெட்டுக்கள். தற்கால நவீன
புகையின்பத்திற்கு
பசுமையுடன் உங்களை
அழைத்துச்செல்வன

நீடிய
குளிர்மையான
மறுமலர்ச்சி
மெட்டஹோரன்

சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட்


## நெஞ்சில்...

( 4-ம் பக்கத் தொடர்ச்சி)

அடக்க நினைத்து இனியது எது? கொடியது எது? அரியது எது என்று கேட்டு வந்த கலியுகவரதன் கந்தக் கடவுள், பெரியவற்றுள் எல்லாம் பெரியது எது? என்று வேண்டினர். ஔவையார் பின்வருமாறு விடை பகர்ந்தார்.

"பெரியது கேட்கின்
எரிதவழ் வேலோய்
பெரிது பெரிது புவனம்
பெரிது......
.........உமையோஇறைவர்
பாகத் தொடுக்கம், இறை
வரோ தொண்டருளத்
தொடுக்கம்
தொண்டர்தம் பெருமை
சொல்லவும் பெரிதே"

இங்கேயும் உள்ளம்தான் இறைவன் உறையும் இடம் என்பதை வலியுறுத்துகின்ருர் ஔவைப்பாட்டி.

சம்பந்தர் கூறுகிருர்

"தோடுடைய செவியன் ......என்று தேவாரம்பாடத் தொடங்கிய திருஞானசம்பந்தர்...... என்னுள்ளம்கவர் கள்வன் என்று உள்ளத்தினுள்ளே இறைவன் ஒளிந்துறையும்தன்மையை முதல் தேவாரத்திலேயே விளக்குகின்ருர்.

சுந்தரர் செந்தமிழில்

"பித்தா பிறைசூடி......
எத்தான் மறவாதே
நினைக்கின்றேன்
மனத்துன்னை"

என்று மனத்திலே, நெஞ்சிலே வைத்துக்கொண்டிருக்கின்றேன் என்பது இலகுவில் விளங்கக்கூடியது.

மணிவாசகரின் திருவாசகத்தில் வெள்ளையன் போப் பாதிரி அவர்கள் பாராட்டி வேண்டிய தூல் என்று உணர்ந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து ஆங்கிலத்துக்கே அறிமுகம் செய்து வைத்த திருவாசகத்தின் ஆரம்பத்திலேயே சிவபுராணத்தில் மணிவாசகனர்

நமச்சிவாய வாழ்க
நாதன்தாழ் வாழ்க
இமைப்பொழுதும் என்
நெஞ்சத்தில் நீங்காதான்
தாள் வாழ்க"

என்று இறைவன் தனது நெஞ்சில் கண்ணிமை-கும் நேரம்கூட நீங்காது வாழுகின்ருர் என்று வாயார வாழ்த்துகின்ருரென்ருல் இறைவன் இருக்கக்கூடிய இடம் நெஞ்சம் அல்லாது வேறு ஒன்று உண்டோ வாசகர்களே உணர்ந்து பாருங்கள்.

(அடுத்த வாரம் முடியும்)

## இலவசக் கல்வி ....

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

வெளிவந்த கல்வி அநுபந்தத்துக்கு எங்களில் பலர் கதையும் கட்டுரையும்எழுதினேம். அந்நாளில் ஈழகேசரியில் நிர்வாக ஆசிரியராகப்பணிபுரிந்தவரும்கல்வி அநுபந்தத்தைப் புதிதாகத் தொடங்கி நடத்தியவருமான சோ சிவபாதசுந்தரம் இலக்குவைத்த மாணவமணிகளில் மூவர் மகாஜனப் பள்ளிமாணவராயிருந்தோம். அவர் வைத்த இலக்குத் தப்பவில்லை. அவரது நம்பிக்கையும் வீண் போகவில்லை. இம்மாணவர்களுக்குப் பின்னணியில்அந்த பத்திரிகை, ஈழத்துப் பேனுமன்னர்கள் வரிசையில் ஸ்தானமளித்துப் புகழ்மாலை சூட்டிற்று.

[அடுத்த வாரம் முடியும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய நாடுகள்..

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 25 ஆண்டு காலத்தில் இந்த உலக ஸ்தாபனம். பெரும் சாதனைகளைச் செய்திருக்கிறது. அதே வேளை படுதோல்விகளையும் கண்டிருக்கிறது. பெரிய வல்லரசுகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ''வீட்டோ'' உரிமை காரணமாக ஏனைய அங்கத்துவ நாடுகளின் அபிலாஷைகள், விருப்புகள் பூர்த்தி காணுது நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமன்றி ஐ. நா. ஸ்தாபனம் பெரும் நிதி நெருக்கடிகளையும் எதிர்நோக்கவேண்டியிருந்தது. சமாதானப்படைகளைப் பராமரிக்கும் செலவுகளைக் கொடுக்க மறுத்து சில வல்லரசுகள் ஐ. நா. விற்குச் சிக்கலான நிலைமையை ஏற்படுத்தின.

இத்தகைய நெருக்கடியான நிலைமைகள் எழுந்தபோதும் உலக சமாதானத்தையும் பந்தோபஸ்தையும் நிலைநாட்டுவதில் ஐ. நா. ஸ்தாபனம் பெரும் பங்காற்றி வந்திருக்கிறது. ஐ. நா,வின் இந்த நடவடிக்கைகளை ''யுத்தத் தவிர்ப்பு ராஜதந்திரம்'' என்று காலஞ்சென்ற ஐ. நா. பொதுக்காரியதரிசி திரு ஹமஷீல்ட் வர்ணித்திருக்கிறுர்.

ஐ. நா. சமாதானப்படையின் சேவை இந்த ரீதியில் மகத்தானதாகும். சைப்பிரஸ் நெருக்கடியை எடுத்துக்கொண்டால் கிரேக்க, துருக்கி சமூகத்தினர் மத்தியில் எழுந்த இனவெறிக் கொந்தளிப்பைத் தவிர்த்து அங்கு சமாதானத்தையும் ஸ்திர நிலையையும் ஏற்படுத்திய பெருமை ஐ. நா. படைகளையே சார்ந்ததாகும்.

சர்வதேச நெருக்கடிகளைத் தவிர்ப்பதில் ஐ. நா. சபை தன்னுலான முயற்சிகளை மேற்கொள்ளத் தவறுவதில்லை. மத்திய கிழக்குப் பிரச்னையைப் பொறுத்தவரை 1967-ம் ஆண்டு யுத்தத்தை அடுத்து ஐ. நா. சபை ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டது. இத்தருணத்தில் ஐ. நா. பாதுகாப்புச் சபை நிறைவேற்றிய தீர்மானம் இப்பொழுதும் ஒரு நிரந்தர சமாதானத்திற்கான அடிப்படையாகவே இருந்து வருகிறது.

## பிரதான இலட்சியம்

உலகத்தில்சமாதானத்தை நிலைநாட்டுவது, யுத்தநெருக்கடிகளைத்தவிர்ப்பது. மனித சமுதாய நல்வாழ்விற்காக உழைப்பது ஆகியவையே ஐ. நா வின் உன்னத இலட்சியங்களாக இருந்துவருகின்றன. எதிர்காலத்தில் இந்த இலட்சியங்களில் ஐ. நா சபை வெற்றி பெறுவதற்கு இந்தச் சர்வதேச நிறுவனத்தில் அங்கம் வகிக்கும் சுபீட்சத்திலும் ஒவ்வொரு நாடும் அக்கறைகொண்டு உழைக்குமாயின் உலக சமாதானத்திலும் உலக சமுதாய சுபீட்சத்திலும் ஐ நா வின் இந்த உயரிய இலட்சியங்கள் பூர்த்தியாவது திண்ணம்.

# அமைதி ஒற்று...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்கை என்ன என்று நாம் உய்த்துணர்ந்து கொள்ளலாம்.

நேருவும் கென்னடியும் ஒரே காலத்தவராயினும், அவர்கள் தலைமையிலிருந்த நாடுகளின் வயதிலே பெருத்த வேறுபாடு உண்டு. இந்தியாவில் ஜனநாயகம் குழந்தைப்பருவத்தில் இருந்தது. எதிர்கால வாழ்வுக்குப் பாடுபட்டு வந்தது. அமெரிக்காவோ தக்கபருவம் நிரம்பியிருந்தது. அதன் எதிர்காலம் அதன் கைக்குள் இருந்தது. ஆகவே இவ்விருவருடைய முதன்மையான அக்கறைகள் வெவ்வேருக இருந்தன; இறுதி நோக்கம் ஒன்ருகவே இருந்தது இதுதான் அவர்கள் வாழ்க்கையின் ஒரே குறிக்கோள். உலகத்தில் அமைதியும் ஒழுங்கும் நிம்மதியும் விளங்கும் நாளைக் கொணரும் பணியே அவர்கள் வாழ்க்கைப் பணி.

இது எளிது அன்று; ஏனெனில் ''காலம் மிகக் கடுமை; அறைகூவல் மிக அவசரமாகக் கவனிக்கவேண்டியது; ஆபத்தோ பெரிது; எனவே அரசியல் வாக்குவாதத்தில் வழக்கமாக எழுகின்ற உணர்ச்சிக் கொதிப்புகளுக்கு இடமில்லை'' இத்தலைவர்களை மக்கள்குலம் மிக ஆர்வமாக நம்பித் தங்கள் ஆவல்களை அவர்கள்மீது வைத்திருந்தது. இவர்கள் தோல்வியடைந்தால் அந்த ஆவல்களெல்லாம் தகர்ந்துவிடும்.

## புகழ்மிக்க போராட்டம்

அவர்களும் சளைக்காது பாடுபட்டனர். ''தற்காலத்துக்கும் முற்காலத்துக்குமிடையே சண்டையைக் கிளப்பிவிடவில்லை, எதிர்கால வாழ்வை இழந்துவிடக்கூடிய ஆபத்துக்கு உள்ளாகவில்லை''. எதிர்த்தற்கு அரிய இந்த இரட்டையர் மக்கள் குலத்தின் பொது எதிரிகளை எதிர்த்துப் புகழ்மிக்க போராட்டம் நடத்துவதைக்காண உலகம் மிகக் கொடுத்து வைத்திருக்கவேண்டும். இறுதியில் அவர்கள் வெற்றி வீரர்களாக வாகைசூடினர்.

உலகம் அடைந்த நன்மை என்ன? நேருவினிடமிருந்து பக்குவமும் உறுதியும் வாய்ந்த இந்தியா கிடைத்தது. ஜனநாயகத்துக்கு உலகத்திலேயே மிகப்பெரியஆய்வு கூடம் இது என அனைவரும் புகழ்ந்தனர். ஜனநாயகம் பிழைக்குமா என்று மக்கள் குலத்துக்கு ஏற்பட்டிருந்த ஐயமெல்லாம் இதன் நற்பயனுக இனி எந்நாளும் தலைகாட்ட முடியாதபடி மறைந்து ஒழிந்தது. புதிதாக விடுதலை பெற்ற நாடுகள் நேருவின் வெற்றியை பற்றுக்கோடாகக் கொண்டு ஜனநாயகத்தை வரித்துக் கொண்டன. இன்று உலகப் படத்தைப் பார்க்கும்போது இந்தியாவிற்கு ஒரு பக்கம் தவிர மற்ற எல்லாப்பக்கங்களிலும் அதன் சகோதர ஜனநாயக நாடுகளே விளங்குவதைக் காண்கிறோம். நேருவின் தளராத முயற்சிக்கு இந்த உண்மை ஒரு புகழ்மாலையாகும்.

சமாதானத்தின் புதிய துறைகள் சமாதானத்துக்கு ஒரு புதிய பொருளும் பயனும்- இவை கென்னடி உலகுக்கு அளித்த நன்மைகளாகும். என் செய்வோம் என்று ஏங்கியிருந்த மக்கள் குலம் கடைசியாக அமைதி உதயமாவதைக் காண முடிந்தது. கென்னடியின் உளமார்ந்த முயற்சிகளின் பயனேயாகும். அது எத்தகைய அமைதி? ''மரணத்தின் அமைதியல்ல; அடிமையின் நிம்மதியல்ல. நான் சொல்வது உண்மையான அமைதி; உலகவாழ்க்கையை வாழத்தகுந்ததாக்கும் அமைதி; மக்களும் நாடுகளும் வளரவும் நம்பிக்கை கொள்ளவும் தம் மக்களுக்கு இன்னும் சிறந்த வாழ்க்கையை உருவாக்கவும்வகை செய்யும் அமைதி; அமெரிக்கருக்குமட்டும்உரிய அமைதியல்ல, ஆடவர், பெண்டிர் எல்லோருக்கும் உரிய அமைதி; நமது காலத்துக்கு மட்டும் உரிய அமைதியல்ல, எல்லாக்காலத்துக்கும் உரிய அமைதி.''

''எல்லாக் காலத்துக்கும் உரிய அமைதி.'' ஆம், இதைத்தான் கென்னடி உலகுக்கு வழங்க விரும்பினுர். அழிவிலாப் பாடலை அகத்துள் கொண்டு மென்மையாக நடைபயிலும் அமைதி அது.

ஆக அவர்களிடமிருந்து உலகம் பெற்ற நன்மை இதுவாகும். இவ்வுலகுக்கு அவர் [illegible] என்ற கேள்விக்கு இதுவே சிறந்த விடையாகும்.

## பர்மிய நாகர்

(11-ம்பக்கத் தொடர்ச்சி)

போது தங்களால் இயன்ற அளவுக்கு செலவிட்டு விருந்து அளிப்பதிலும் உலகில் முதலிடம் வகிக்கிறுர்கள்.

நாகர் இனத்தவர் பர்மாவிலும் அதை அடுத்த இந்தியப் பகுதிகளிலும் வாழ்கின்றனர். மனிதர் இப்படிப்பட்ட பிராந்தியத்தில் வாழ்க்கை நடத்த முடியுமா என்று மற்றவர் வியக்கும் அளவுக்குப் பல பிரச்னைகளும் இயற்கைத் தொல்லைகளும் நிறைந்த பகுதிகளில் அவர்கள் வாழ்கின்றனர்.

அவர்கள் வாழும் பகுதிகள் மிகவும் மலைப்பாங்கானவை எனவே எப்போதும் குளிர் உள்ளது சாகுபடி செய்து பிழைப்பதற்கு சம நிலம் மிகவும் குறைவு. போக்கு வரத்து தகவல் தொடர்பு வசதிகளும் குறைவு.

இவர்களுடைய விருந்தின் போது மாட்டுக்கறியும் மது பானமும் தாராளமாக அளிக்கப்படுகின்றன. செலவைவிட மத அல்லது சமூக வைபவத்தை நன்ருக நடத்தவேண்டும் என்பதே இவர்களின் முக்கிய நோக்கமாகும். விருந்துகளில் நடைபெறும் நடனததில் பெண்களும் கலந்து கொள்கின்றனர். விருந்துக்கு வரும் பெண்களிடம் ஆண்கள் முறைதவறி நடக்கும் பேச்சே இல்லை. விருந்தின் போது, அந்த அளவுக்குக் கண்ணியம் கடைப்பிடிக்கப்படுகிறது.

'மைத்தான்' கறி என்ருல் நாகர்களுக்கு மிகவும் பிரியம். மைத்தான் என்பது ஒருவகைக் காட்டெருது.

இளம்பெண்களும் இளைஞர்களும் சர்வ சாதாரணமாகக் கலந்து பழகுவதை அனுமதிக்கும் பழக்கம் பர்மிய நாகர்களிடம் உள்ளது. எனினும் ஓர் இளைஞன் ஒரு பெண்மீது ஆசைப்பட்டு நெருக்கமாகப் பழகினுல் அவளைத் திருமணம் செய்து கொண்டாக வேண்டும். சில சமயங்களில் பெற்ருேராகப் பார்த்துத் திருமணம் நடத்தி வைக்கின்றனர்.

இருவீட்டாரும் பரிசுகளைப் பரிமாறிக் கொண்ட பிறகு பெற்ருேர்கள் ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்கின்றனர். அதுபையன் வீட்டிலேயே நடத்தப்படுகிறது. புதுமணத்தம்பதிகள் அந்த வீட்டில்தான் வாழ்க்கை நடத்த வேண்டும்.

மருமகள் வீட்டுக்கு வந்தவுடன் அவருடைய மாமனும் மாமியாரும் அதற்குள்ளாகத் தங்களுக்கென்று கட்டிக்கொண்ட வேறு வீட்டில் குடியேறி மருமகள் தனிக்குடித்தனம் நடத்த வழி செய்கின்றனர். அவ்வளவாகப் பழகாத அந்த இளம் ஜோடிகள் நன்கு பழகி ஒருவரையொருவர் புரிந்து கொள்வதற்காகவும் பெற்ருேரின் தலையீடு இன்றிச் சுதந்திரமாக வாழ்ந்து, தங்கள் எதிர்காலத்தை தாங்களே வகுத்துக்கொள்ள வழி செய்யவும இந்தப்பழக்கம் இருந்து வருகிறது;

# சங்கமத்துறை

[ கங்காபுத்திரன் ]

## ஆற்றைக் கண்டால் — கவி ஊற்றுப் பெருகும்

ஒழுக்கவரம்பைத் தவருத உத்தமர்போல் வரம்பென்ற கட்டுக்குள் அமைந்து ஓடுகிறது ஆறு ஒன்று. கவிஞனின் கற்பனையும், ஞானியின் தெளிவும் பொய்மை விரவாத உள்ளத்தின் புனிதமும் உவமையாக அந்தநதி காட்சி தருகிறது இந்த ஆற்றுக்காட்சியை எல்லோருமே பார்க்கின்ருர்கள். ஆனுல் அந்தப் பார்வையிலே நல்ல இலட்சியத்தைப் புரிந்து தன்னை வளப்படுத்துகின்ற பண்புடையோன் பாவலன் ஒருவனே...

ஆற்றின் ஓட்டத்துள்ளே விரவிக் கிடக்கும் உட்பொருளை உற்றுணர்ந்து யாப்பென்ற அமைப்புக்குள் அதனையமைத்துப், பொருள் என்ற மேலான இலட்சியத்துடன் 'வையகமும் உய்யுக!' என்று வழங்கும் பாவலர்கள் பலர் ஆற்றுப் புறத்திலேயே வாழ்ந்துள்ளனர்.'

ஆதிக் கவியாகிய வான்மீகி கோதாவரிக்கரையில் வாழ்ந்தவன்.

கம்பன் பிறந்தஊர் காவேரி. தங்கும்ஊர்
கும்பமுனி. சாயம் குலைந்த ஊர் -செம்பது
மத்தாதக த்துநான்முகனும் தாதையும்தே டிக்காணு
வேதவித்து மேவும் அழுந்தூர்

இந்த வெண்பா நமது கவிச்சக்கரவர்த்தி கம்பன் காவேரிக்கரையிலே வாழ்ந்தானென்பதை விளக்குகின்றது.

மருதம் பொலியும் அந்தப் பிராந்தியத்தைக் கண்டு களித்த கம்பன்

தண்டலை மயில்களாடத்
தாமரை விளக்கந் தாங்க
கொண்டல்கள் முழவி னேங்கக்
குவளைகண் விழித்து நோக்க
தெண்டிரை எழினி காட்ட
தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிதுபாட
மருதம்வீற் றிருக்கு மாதோ

என்று பாடுகிருன்.

ஸ்ரீராம சரிதமானசத்தைத் தந்த துளசி புனிதக்கங்கையின் கரையிலே வாழ்ந்தவன். மலையாளத்தில் இராமாயணத்தை ஈந்த எழுத்தச்சன் அம்பலப்புழையில் பிறந்தவன் அதாவது அம்பலப்புழை என்ருல் அம்பலஆறு என்பது பொருளாகும் இவர்களது வாழ்க்கையை உற்று நோக்கும்போது ஆற்றின் ஊற்றிலேதான் கவிதையும் பிறக்கின்றதென்பதை யாம் அறியக்கூடியதாகவுள்ளது.

## அதிர்ஷ்டமும் ஆபத்துள்ளதா

அதிர்ஷ்ட இலாபச்சீட்டை ஒருவன் எடுத்திருந்தான். அவன் இருதய கோளாறுள்ள ஒரு நோயாளி டாக்டர் ஒருவர் அவனது கையிலுள்ள அதிர்ஷ்ட இலாபச்சீட்டை வாங்கிப் பார்த்தார். காலையில் வெளியான பத்திரிகையில் அதிர்ஷ்டலாபச் சீட்டின்பரிசு இலக்கங்கள் வெளியாகியிருந்தன டாக்டர் அந்தப் பத்திரிகையில் வெளியான இலக்கங்களுடன் நோயாளியின் சீட்டை ஒத்துப் பார்த்தார். என்ன அதிசயம் நோயாளியின் சீட்டே முதலாவது பரிசுக்குரியதாகத் தெரிந்தது டாக்டர் அந்த உண்மையை உடனடியாகச் சொன்னுல் மகிழ்ச்சிப்பெருக்கினுல் நோயாளி பாதிக்கப்படக்கூடுமென்பதால் நோயாளிக்கு அந்த விடயத்தைப் புலப்படுத்தக் கருதினுர்.

அவ்விருவர்க்கிடையேயும் நடைபெற்ற சம்பாஷணை வருமாறு:-

டாக்டர்:- அதிர்ஷ்ட இலாபச்சீட்டெடுத்துள்ளீர்களே. உங்களுக்கு 500 ரூபா பரிசு கிடைத்தால் என்ன செய்வீர்கள்?

நோயாளி:-ஐநூறுரூபா பெரியதொகையா? என்னுடைய சொந்தச் செலவுகளுக்கே பயன்படுத்துவேன்.

டாக்டர்:- ஐயாயிரம் கிடைத்தால்.....?

நோயாளி:- நல்ல வீடொன்று வாங்குவேன்.

டாக்டர்:- இரண்டு இலட்சம் கிடைத்தால்...

நோயாளி:- என்ன டாக்டர் கேலி செய்கிறீர்களே: இப்படி யாருக்குக் கிடைக்கப்போகுது...

டாக்டர்:- அதிர்ஷ்டம் சொல்லிக்கொண்டா வருகிறது.... உமக்கு இன்றைக்கு இரண்டு லட்சம் கிடைத்திருக்கின்றதென நீர் நம்பும். அதை என்ன செய்வீர்?

நோயாளி:- அப்படியா? நிச்சயமாக இன்றைக்கு இரண்டுலட்சம் கிடைக்குமானுல் அதில் ஒரு இலட்சத்தை உமக்குத் தந்துவிடுவேன்.

சம்பாஷணை தொடரமுடியவில்லை. டாக்டர் இருதய அமுக்கத்தினுல் மயங்கிவிட்டார். இந்த நல்ல செய்தியை அவராலும் தாங்கமுடியவில்லை. இது ஒரு கற்பனையான கதையாகவிருக்கலாம் ஆனுல் மனிதனுடைய உணர்ச்சிகள் திடீரென்று ஏற்படுகின்ற எந்தச் செயல்களினுலும் பாதிப்புறக்கூடும் என்பதையே விளக்குகின்றது.

## அன்பினுல் ஆண்டவனை அடக்கலாம்

மகாபாரதத்தின் காவியநாயகர்களான பஞ்சபாண்டவர்கள் அஞ்ஞாதவாசத்துக்குப் பின்னர் கிருஷ்ணபரமாத்மாவை தூதுவிடுவதற்கு இசைந்து அழைத்துள்ளனர். கிருஷ்ணபரமாத்துமாவிடம் ஐவரும் தங்கருத்தை வெளியிட்டனர். எல்லோருக்கும் இளைஞுகிய சகாதேவன் திரிகாலத்தையும் உணர்ந்தவன்... அவன் கிருஷ்ணபரமாத்துமாவை நோக்கி...

பாராள கர்ணன் இகல்பார்த்தனையும் கொன்றணங்கின்
காரார் குழல்களைந்து காலிற் றளைபூட்டி
நேராகக் கைப்பிடித்து நின்னையும் நான் கட்டுவனேல்
வாராமல் தடுக்கலாம் மாபா ரதமென்ருன்.

கிருஷ்ணர் சகாதேவனை புன்முறுவலுடன் நோக்கி முன்சொன்ன காரியங்களையெல்லாம் நீ சாதிக்கலாம். என்னை எவ்வாறு கட்டமுடியும் என்று கேட்டார். அப்போது சகாதேவன் உனது வடிவங்களைக் காட்டு உன்னைக் கட்டுவேன் என்ருர். அவர் பல வடிவங்களைக்காட்டும்போது மூலமூர்த்தியின் உண்மை வடிவை அறிந்து அன்பினுல் கட்டிவிட்டான். அவனது அன்புக்குக் கட்டுண்டான் கண்ணன். இறைவன் அவர் தம் அன்புக்குக் கண்டுண்ட காரணத்தினுலே குருக்ஷேத்திரப் போர்க்களத்தில் பஞ்சவர் வெற்றிகாணமுடிந்தது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

MITE ORGANIZATION 1967

## யாழ். நவீன சந்தை கட்டிடவேலை

எங்கள் தாபனத்தால் பொறுப்பேற்று நடத்தப்படும் மேற்படி ஒப்பந்தக் கட்டிட வேலைகளைப்பற்றிச் சில பொய்வதந்திகளும் விஷமப் பிரசாரங்களும் பரப்பப்பட்டிருப்பதால் அவற்றைப்பற்றிய உண்மைகளை அறியப் பொதுமக்களுக்கும் பத்திரிகையாளர்களுக்கும் வேண்டிய வசதியும் சந்தர்ப்பமும் அளிக்க வேண்டுமென முடிவுசெய்திருக்கின்றோம். அதனால் மேற்படி வேலைகளைப் பற்றியும் தற்போதைய நிலைமையைப்பற்றியும் உண்மைகளை அறிய விரும்புவோர், எங்கள் தாபனத்தின் வேலைத்தலகந்தோருக்கு பின்வருமாறு விஜயம் செய்யும்படி அழைக்கப்படுகின்றார்கள்.

ஜூலை 19, ஞாயிற்றுக்கிழமை

பத்திரிகையாளர்: காலை 10—12 மணிவரை.

பொதுமக்கள்: மாலை 3—5 மணிவரை.

கலாநிதி
கோபாலபிள்ளை மகாதேவா,
தலைவர்,
''மயிற்'' தாபனம்,
யாழ்ப்பாணம்.

2371

## உங்கள் இராசி பலன்

**மேடம்:**

வாழ்க்கையில் சலிப்புத் தானுகவே உண்டாகின்றது. கலைத்துறையில் முன்னேற்றம் ஏற்படலாம். வாரம் பூராவும் சினிமா ஈடுபாடு காண்பீர். உல்லாசப் பிரயாணம் தீங்கு விளைக்கும். தொழில்வகை பாதிப்பு உண்டு சகஊழியரால் அவமதிக்கப்படுவீர். குடும்பத்தில் ஓரளவு பிளவுமனப்பான்மை தோன்றலாம்.

**இடபம்:**

பணவிஷயம் சீரடைவதாயில்லை. தேவையற்ற செலவினமதிகரிக்கும். தொழில் கருதிப் பிரயாணம் மேற்கொள்ளுவீர். அவ்வழி வெற்றியை எதிர்நோக்கலாம். இரும்பு — கடினப் பொருள் வியாபாரம் பலிதமளிக்கும். சகோதரர்களால் பாதிப்புநிலை காண்பீர். படிப்பில் நாட்டம் குறைவுபடும்.

**மிதுனம்:**

வாழ்க்கையில் மிக உன்னதகாலம். சோதரர் சிறப்புஉண்டு. மாதா வழியாரிடை இறப்பு நிகழலாம். சினேகிதனே எதிரியாகவும் மாறவழியுண்டு தனிவழிப் பிரயாணம் தவிர்க்கவும். விஷ ஜெந்துக்களின் அபாயம் எதிர்நோக்கும் ஒரு சிலர்க்கு விவாகப் பேச்சில் குழறுபடிகள் நிகழலாம்.

**கடகம்:**

மனதிலே பதட்ட நிலை, தீயினுல் விபத்து, கள்வர் பயம் இவையுண்டு. கமத்தொழில் விருத்தி காண்பீர். மரக்கறிவகை வியாபாரம் பெருக்குநிலை காணும். சக ஊழியரின் உதவியால் உத்தியோக உயர்ச்சி பெறுவீர், குடல் சம்பந்தப்பட்ட நோயால் உடல் பாதிப்பு நிகழலாம். புத்திரர் சிறப்பு உண்டு.

**சிங்கம்:**

இல்வேந்தன் பாதிப்பு நிலை காண்கின்றுர். சென்றவிடமெல்லாம் எதிர்ப்புநிலை காண்பீர். குடும்பச் சிறப்பு காணலாம். ஒரு சிலர்க்கு விவாக நிச்சயார்த்தமே நிகழலாம். காணித் தகராறு உண்டு இதுவிஷயமாய் நீதிஸ்தலமேறவும் நேரும். நீரி

(16ம் பக்கம் பார்க்க)

ஜோதிஷமணி மேல்கரவை
-காவ. சிவப்பிரகாசன்-

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 10-00
பிரிபோயா, போயா 2-30மணி
சிவாஜி - சரோஜாதேவி
நடித்த
ஆலய மணி

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30 மணி
போயா, பிரிபோயா 2-30
எம் ஜி. ஆர். — சிவாஜி
நடித்த
கூண்டுக்கிளி

REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 P.M.
Poya, Pre-poya 10.30 a.m.
Glenn Ford,
Carolyn Jones
in
HEAVEN WITH A GUN

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7-00 & 9-45 p.m.
Poya-Prepoya 10-30 a.m.
Terry Moore,
Ben Johnson
in
MIGHTY JOE YOUNG
(Color)

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஜெமினி — சௌகார்ஜானகி
நாகேஷ்—ஜெயந்தி
நடித்த
இரு கோடுகள்

2வது வாரம்!
ராஜா - யாழ்ப்பாணம்
தினசரி 3 காட்சிகள் பிரிபோயா, போயா 4 காட்சிகள்
காந்தராவ், ராஜ்ஶ்ரீ, ஜெயந்தி
நடித்த
மாவீரன் ஜெயசீலன்

வின்ஸர் — யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
★ சிவாஜி கணேசன் (இருவேடங்களில்
பத்மினி - ராகினி - தங்கவேலு
நடித்த
உத்தம புத்திரன்
(புதிய கொப்பி)

## வரி விளம்பரம்

### தேவை

யாழ்ப்பாணத்தில் வீடு, காணி, வயல்கள் தேவை. பணம் உடனே கொடுப்போம். எழுதுங்கள், வெஸ்டன் றேட்ஸ், தபால் பெட்டி-54, யாழ்ப்பாணம். 3145

யாழ்ப்பாணம் கடற்கரை வீதியிலும், பாங்சோல்வீதியிலுமுள்ள கட்டிடத்தின் சுவர்களை இடித்து மண், கல் ஆகியன அப்புறப்படுத்தக்கூடியவர் எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். கே. அருணுசலம், செம்மணிவீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம் அல்லது த. நடராசா, 24/A, அல்பிறட் பிளேஸ், கொழும்பு-3 3175

### கல்வி

''அன்பு பாலர் பாடசாலை'' 330, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (சீதா சோடாக் கம்பனியருகு) 3 வயதுக்கும் 5 வயதுக்கும் இடைப்பட்ட பாலர்கள் மொன்ரிசோறி முறையில் கல்வியாரம்பிக்க ஓரிடமாகும். சில பிள்ளைகளுக்கே இன்னும் இடவசதியுண்டு. விண்ணப்பியுங்கள்; அல்லது பாடசாலை நேரம் நேரில் வாருங்கள். 3190

### விற்பனைக்கு

**மீன்கள்:**

பல இன வளர்க்கும் மீன்கள் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்க: N. மங்களேஸ்வரன், ''ஜோதி அச்சகம்'', ஸ்டான்லிவீதி' யாழ்ப்பாணம். 3173

**காணி:**

சாவகச்சேரி ஐந்துபரப்பு கட்டிட பிரிவிடுதல் உறுதிக்காணி பொலிஸ் ஸ்ரேஷன் ஒழுங்கை, தபால் நிலையம், சந்தை, புகையிரத நிலையம் கல்லூரி, ஆஸ்பத்திரி முதலியவற்றிற்குச் சமீபம். கூடுதல் விலை கவனத்திற்கு எடுக்கப்படும். கீழ்க்காணும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். திரு வி. நடேசன் ஆசிரியர், நுணுவில் கிழக்கு, சாவகச்சேரி. 3196

### விற்பனைக்கு

2'' நீர் இறைக்கும் லிஸ்டர் டீசல் இயந்திரம் பாவிப்பு நிலையில் உள்ளது. 1 1/2 அந்தர், எவரெடிராசு. ஶ்ரீவெங்கடேஷ், இரும்பு உற்பத்தி விற்பனை ஸ்தாபனம், பலாலிவீதி, கோண்டாவில். 3194

**காணி**

4 பரப்புக்காணி மானிப்பாய் அரசாங்க டிஸ்பென்சறிக்கு அருகாமையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு கா. மாணிக்கவாசகர்., மே/பா திருமதி கா. கார்த்திகேசு, மானிப்பாய் தெற்கு: மானிப்பாய். 2170

**வீடும் வளவும்**

வட்டுக்கோட்டையில் யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அருகாமையில் விசாலமான 6 பரப்பு வளவும் வீடும் விற்பனைக்குண்டு. விண்ணப்புக்கவும். விளம்பர இல: 3197 C/o ஈழநாடு காரியாலயம், இல. 6, கிளென்ஆபர் பிளேஸ், கொழும்பு-4. 3197

### வாடகைக்கு

தண்ணீர், மின்சாரம் முதலியவசதிகளுடன் பகுதி வீடு வாடகைக்குண்டு. விபரங்களுக்கு, No. 5 றக்காறேட், யாழ்ப்பாணம். 3195

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### சனி 18—7—70

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-15, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-35 மெல்லிசை, 7-30 படப்பாட்டுக்கள், 8-00 இந்து செய்திக் கடிதங்கள், 8-15 ஞானமிர்தம்-எம்- நமசிவாயம், 8-30 சைவநீதி.

344 மீ அன்ட் 61 மீ.

காலை 9 06 மனுேநிலையும் இயற்கைச்சக்தியும், 9-30 முஸ்லிம்சமயபாடம், 10-00 தொழிலாளர்களுடன், 10-30 படத்திலிருந்து, 11-15 சிறுவர்மலர்,

பகல் 12-00 எங்கள் விருந்தாளி, 1-00 குங்குமம்.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 6-00 பாமாலை, 6-25 இடைவேளை சங்கீதம், 6-30 வேல் விழா -அஞ்சல், 7-00 கத்தோலிக்க நிகழ்ச்சி, 7-35 விவேகச்சக்கரம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 8-15 நாடகம், 8-45 இஸலாமியபாடல்கள், 9-30 வேல் விழா - அஞ்சல், 10-30 செய்தித்தொகுப்பு

விலை குறைப்பு
ஆடவர்களுக்கு அரிய சந்தர்ப்பம்!
சகலவிதமான சேட்வகைகளின் விலைகள்
விற்றுமுடிப்பதற்காக கொள்விலையிலும் பார்க்க
விலை குறைக்கப்பட்டுள்ளது.
பொன்னுன இந்த வாய்ப்பை நழுவ விடாதீர்கள்!
மறுபடி சந்தர்ப்பம் கிடைக்காமற் போகலாம்.
இன்றே விஜயம் செய்யுங்கள்!
பொகுமால்ஸ்
(சேட் மாளிகை)
49, மெயின்வீதி, யாழ்ப்பாணம்.

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் யாழ்ப்பாணம்
திரைகளில்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)



★ ஏ வி.எம்.ராஜன்
★ சௌகார்ஜானகி
★ நாகேஷ் ★ குமாரிசச்சு
சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பதேவர்
★ கே. பி. சுந்தராம்பாள்
★ திருமுருக கிருபானந்தவாரியார்
மற்றும்பலர் நடித்த
'தெளிவில்லா இதயங்களைத் தெளியவைக்கும்
தெய்வத் தமிழ்க் காவியம்'
துணைவன்
கதை வசனம் பாலமுருகன்
சங்கீதம் K.V. மகாதேவன்
தயாரிப்பு: சாண்டோ M. M. A. சின்னப்பதேவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிமொழிகள்

மக்கள் தங்களது நிலம், அமைதி, கல்வி ஆகிய பிரச்னைகளை தாங்களே தீர்த்துக் கொள்ள வேண்டும். ஆங்காங்கு மக்கள் இப்பணிகளை மேற்கொண்டால் அரசாங்கத்திற்கு பளு குறைந்து அது மகிழ்ச்சியுறும். அரசின் சக்தியும் நேரமும் மீதமாகும்; அது இதர பணிகளில் ஈடுபடும். மக்கள், அரசு, ஆகியவற்றின் சக்தி ஒன்று சேர்ந்தால் மக்கள் சுபிட்சமாக வாழமுடியும்.

ஆங்கிலக்கல்வி உத்தியோகம் தேடித்தரும் ஒரு கருவியாக அமைந்துவிட்டதனுலும்பணத்திற்கு மதிப்பு உயர்ந்ததனுலும் உடலுழைப்புக்கு மதிப்பு குறைந்து முக்கியமில்லாததாகிவிட்டது. உடலுழைப்புக்கு முக்கியத்துவம் கொடுத்தும், உடலுழைப்பை விரும்புகிறவர்களுக்கு உரிய சந்தர்ப்பமும் கொடுக்கப்பட்டால் நாடு செழிக்கச் சிறந்த வழியாக இருக்கும்.

—விஞேபாபாவே






## உங்கள் இராசி —

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

ழிவு, இரத்தக் கொதிப்பு ஆகியநோய்கள் உண்டாக ஏதுவுண்டு.

**கன்னி**

அதிஷ்டத்தை எதிர்நோக்குவீர். ஆயினும் அடைய முடிவதில்லை. உலகஇன்பங்களில் நாட்டம் அதிகரிக்கும். மனநிம்மதி ஓரளவு கிட்டும் புத்திரர்களால் மதிப்புநிலை காண்பீர். பெண்களால் உதவியுண்டு தூரத்து உறவினருடன் தொடர்பு காண்பீர். அவ்வழிச் சிறப்பும் உண்டு. தொழில் கருதிப் பிரயாணம் மேற்கொள்ளுவீர்.

**துலாம்:**

மனதில் வேதனை குறைவுபடுவதாயில்லை. குடும்பத் தொல்லைகள் ஒருபுறம் உங்களை வாட்டும். இறைவழிபாடுகருதி யாத்திரை மேற்கொள்ளுவீர். எதிர்பாரா வகைப் பணப்பேறு கிட்டும். படிப்பில் நாட்டம் உண்டாகும். சோதனைகளில் சித்தியும் பெறுவீர் உத்தியோகப்பேறுகருதிய முயற்சி வெற்றி கொடுக்கும்.

**விருச்சிகம்:**

உமது வாழ்விற்கு ஒரு தனிமதிப்பு ஏற்படும். பலராலும் போற்றப்படுவீர். தருமசிந்தையுண்டு. புண்ணியதல யாத்திரை மேற்கொள்ளுவீர். பெண்களின் உதவியால் சிறுபணப்பெருக்கையும் எதிர்நோக்குவீர். வேலைத்தல சகஊழியர்களுடன் சிறு பிணக்கு நிகழும். நீரினுல் வாகனத்தால் விபத்து உண்டெனக் கோள்கள் வலியுறுத்துகின்றன.

**தனு:**

சென்றகால சம்பவங்கள் மனதில் நிழல்படமாயமைந்துவிடுகின்றன. உற்ருரின் உதவி மன வேதனைகளைக் குறைவுபடுத்தும். தனிமையில் இன்பங் காண்பீர். குடும்பத்தில் பிளவும் உண்டாகலாம். தனி வியாபாரத்தால் பெருநிதி சேரும். உடலில் உஷ்ண ரோகங்கள் உண்டு.

**மகரம்:**

வாழ்க்கையில் பெரிய வீழ்ச்சியடைய ஏதுஉண்டு. உம்மைப் பலவழியாலும் பாதுகாக்க உமது வாழ்க்கைப் பங்காளியே கை கொடுப்பாள். பெண்சகோதரங்களால் உமது முன்னேற்றம்சீர்பெறும். தோல் சம்பந்தப்பட்ட வியாதிகளின் தொல்லை உண்டு.

**கும்பம்:**

படிப்பில் முன்னேற்றம், சோதனைகளில் தேர்ச்சி, உத்தியோகப்பேறு ஆகிய நற்பலன்கள் கிட்டும். பலர்க்கு விவாகசம்பந்தம் கிட்டும் வாய்ப்பே உண்டாகும். உல்லாசப் பிரயாணத்தை வார நடுப்பகுதியில் எதிர்நோக்கலாம். அரசியல் ஈடுபாடும் ஓரளவுக்கு உண்டு. கடற்பிரயாணம்தீமை விளைக்கும்.

**மீனம்:**

பணப்பேறுகருதி முயற்சி மேற்கொள்ளுவீர். வார இறுதியில் ஓரளவுவெற்றியும் உண்டு. வியாபாரிகட்கு பெருத்த முதலீடு பெரும் பயன் விளைக்கும். கடல் கடந்த பிரயாணமுமுண்டு. பிதாவழி சொத்து சேரலாம். பவுண் ஆபரணச் கொள்வனவும் மேற்கொள்வீர். தொழில்கருதி திடீர் பிரயாணம் நிகழலாம்.

## உடுப்பிட்டி மக்கள் கமிட்டி

உடுப்பிட்டி, வெள்ளி

உடுப்பிட்டித் தொகுதியில் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுகளிலும் பிரதிநிதிகளைத் திரட்டி 'மக்கள் கமிட்டி' ஒன்றை நிறுவுவதென உடுப்பிட்டித் தொகுதித் தமிழரசுக் கட்சிக் கிளைச் செயற்குழுக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

மக்கள் கமிட்டிமூலம் ஒவ்வொரு பகுதி மக்களின் தேவைகளையும் அறிந்து உடுப்பிட்டி எம். பி. திரு. கே. ஜெயக்கொடி மூலம் அத் தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியும் என்று கூட்டத்தில் தெரிவிக்கப் பட்டது.

நாடு பூராவும் சாராய விற்பனையை இல்லாமற் செய்ய வேண்டுமென்று அமைச்சரைக் கோருவதென்று முடிவு செய்யப்பட் பட்டது.

## நிதியுதவி

மட்டுவில், வெள்ளி

நாட்டைக்காக்கும் நிதிக்கு கல்வியில் சைவப்பிரகாச வித்தியாசாலை ஆசிரியர்கள் தமது ஒருநாள் சம்பளத்தை கொடுக்கத் தீர்மானித்துள்ளதாக தலைமை ஆசிரியை திருமதி பொன்னையா தெரிவித்தார்.

## பேச்சுப்போட்டியில் முதல் பரிசு



வடமாகாண ஆசிரியசங்கத்தாரால் இவ்வாண்டு நடாத்தப்பெற்ற சிரேஷ்ட மாணவர்களுக்கான தமிழ்ப் பேச்சுப்போட்டியில் முதலாவது இடத்துக்குரிய பரிசையும் வெற்றிக்கிண்ணத்தையும்பெற்ற மல்லாகம் யாழ். இந்துக்கல்லூரி மாணவன் செல்வன் நா. கதிர்காமநாதன்.

## இரவு பகல் பொலிஸ் காவல்!

யாழ்ப்பாணம், சனி

கொடிகாமம் சந்தைப் பகுதியில் இரவு பகல பொலிஸ் காவல் போடும்படி வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் உத்தரவிட்டுள்ளார்.

கொடிகாமப் பகுதியில் மக்கள் அச்சமடைந்துள்ளதாகவும், இரவில் சந்தைப் பகுதிக்குச் செல்ல அஞ்சுவதாகவும், பொலிஸ் அதிபருக்கு கொடிகாம வாசிகள் செய்த புகாரைத் தொடர்ந்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## இதற்குத்தான் நிதியுதவி

கொள்ளுப்பிட்டி, வெள்

'திரு. ஸி. சுந்தரலிங்கத்தினுல் பிரிவுக்கவுன்சிலுக்கு அப்பீல் செய்யப்பட்டுள்ள வழக்குச் செலவுக்கு ரூபா 2000 வழங்குவதற்கு நான் சம்மதிக்கவில்லை. இலங்கையில் சிறுபான்மை இனத்துக்கு ஒரு சிறிதாவது பாதுகாப்பு அளிக்கும் அதி முக்கியமான 29-வது சரத்தை நடைமுறையில் கொண்டு வரக்கூடிய வழக்கிற்காக 2000ரூபா உதவிசெய்வதாக நான் வாக்களித்தேன்' என்று கொழும்பு பிரபல வியாபாரி திரு. ஐ குமாரசாமி எழுதுகிருர்.

பிரிவுக்கவுன்சில் செலவுக்குப் பணவுதவி செய்ய திரு. குமாரசாமி முன்வந்துள்ளதாக பத்திரிகைகளில் வெளிவந்த செய்தி சம்பந்தமாக இவ்விதம் அவர் அறிவிக்கிருர்.

## சஞ்சிகைகள் களவு

சித்தங்கேணி, சனி

சித்தங்கேணி கலைநகர் நேருஜீ சனசமூக நிலைய வாசிகசாலையில் வைக்கப்படும் சஞ்சிகைகள் தினமும் களவாடப்படுகின்றனவாம். இதுசம்பந்தமாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

கலைநகரில் தற்போது கள்வர் நடமாட்டம் அதிகரித்து வருகிறது.

## தபால் ஊழியரின் மேலதிக சம்பளத்தை நிறுத்துக!

### உபதபால் அதிபர்கள் யூனியன் சிபார்சு

யாழ்ப்பாணம், சனி

'தபால் அதிபர்களுக்கும் இலாகா ஊழியர்களுக்கும் மேலதிக வேலையைக்கொடுத்து மேலதிக சம்பளம் வழங்குவதை நிறுத்தி, அதற்குப்பதிலாக மாணவ ஆசிரியர்களைப் போன்ற திட்டத்தை உருவாக்கி, குறைந்த சம்பளத்துடன் மாணவ தபால் அதிபர்களை நியமிக்கவும்'

இவ்வாறு உபதபாலதிபர்கள் தொழிற் சங்கங்களின் யூனியன் அரசாங்கத்துக்குச் சிபார்சுசெய்துள்ளது.

நிதி ஆண்டு வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு முன்னேடியாக, தபால் இலாகாவில் செய்யப்படவேண்டிய திருத்தங்கள்பற்றிய ஆலோசனைகளை அரசாங்கம் தபால் இலாகாவைச் சேர்ந்த தொழிற்சங்கங்களிடம் கேட்டிருந்தது. உபதபாலதிபர்கள் தொழிற் சங்கங்களின் யூனியனின் இணைச்செயலாளர் திரு. ஐ. நடராசாவால் அரசாங்கத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜரில் 40,000 புள்ளிகளுக்கு மேலதிகமாக தொழிலாற்றும் உபதபாற்கந்தோர்களை தபாற்கந்தோர்களின் தரத்துக்கு உயர்த்தவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டாக்டர் நைல்ஸ் காலமானுர்!

(கு. வி. ம.)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முன்னுள் அதிபர் டாக்டர் டானியல் தம்பிராசா நைல்ஸ் வேலூர் ஆஸ்பத்திரியில் காலமானுர். 'டீ ரி.' என்று அன்பாக எல்லாராலும் அழைக்கப்படும் திரு. நைல்ஸின் மறைவு குறிப்பாக கிறிஸ்தவ உலகத்துக்கும், கல்வி உலகத்துக்கும் பெரும் நஷ்டமாகும். யாழ். டச்சுக் கோட்டைக்குள் இருக்கும் சரித்திரப் புகழ் பெற்ற தேவாலயத்தை யாழ். கிறிஸ்தவ சங்க சமாசத்துக்கு திரு. நைல்ஸ் அரசாங்கத்திடமிருந்து அனுமதியுடன் பெற்றுக்கொடுத்தார். இத்தேவாலயத்தைப் புனருத்தாரணம் செய்தவரும் இவரே இவர் மறைவு குறித்து இங்குள்ள கல்விமான்களும் அறிஞர்களும் பெரும் கவலையும் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்தனர்.

## சிராத்ததினம்

யாழ்ப்பாணம், சனி

கொக்குவில் சோதிடபரிபாலனமடம் வெங்கடேச ஐயர் அவர்களின் பெரிய தந்தையார் இரகுநாதஐயர் அவர்களது சிராத்த தினம் இம் மாதம் 20-ம் திகதி திங்கட்கிழமை நிகழவிருக்கிறது.

## பிரிட்டனில் அவசரகாலச் சட்டம்

லண்டன், ஜூலை 17

பிரிட்டனில் அவசர காலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. எலிசபெத் மகாராணியால் பிறப்பிக்கப்பட்ட அவசரகாலச் சட்டத்தின் கீழ் உணவுப் பொருட்களின் விலைகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன.

சம்பள உயர்வு கோரி சுமார் 5,000 துறைமுக ஊழியர்கள் நேற்று முன்தினம் முதல் வேலை நிறுத்தம் செய்து வருவதைத் தொடர்ந்து இச்சட்டம் பிறக்பிக்கப்பட்டது.

## மாணவிகளுக்கு டிக்கட் வழங்க மறுத்த கண்டக்டர்கள்

யாழ்ப்பாணம், சனி

இ. போ. ச. இரட்டைத் தட்டு பஸ் ஒன்றில் கடமையிலிருந்த இரு கண்டக்டர்களுக்கிடையே ஏற்பட்ட 'பிடிவாதத்'தினுல் 10மாணவிகள் பிரயாணஞ் செய்ய முடியாமல் இடைவழியில் இறங்கவேண்டிஏற்பட்டது. கடந்த புதன்கிழமை இரவு 8-30 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து பலாலி [illegible] சென்ற பஸ்ஸில்இச்சம்பவம் நடந்தது.

கீழ்த்தட்டில் கடமையாற்றிய கண்டக்டர்குறிப்பிட்ட மாணவிகளை மேல்த்தட்டுக்குப் போகும்படிகூறினுராம். ஆனுல் மேல்தட்டில் கடமையாற்றிய கண்டக்டர் கீழ்த் தட்டுக்கு இறங்கும்படிகூறினுராம் இவ்விதம்இருவரும் அடம்பிடித்து டிக்கட் வழங்க மறுத்துவிட்டனராம்.

பஸ்ஸில் போதியஇடமிருந்ததாகவும், கண்டக்டர்கள் ஏன் இவ்விதம் நடந்துகொண்டார்கள் என்றுபுரியவில்லையென்றும் பிரயாணி ஒருவர் கவலையுடன் கூறினுர். கந்தர்மடத்திலிருந்து பஸ்சில் ஏறிய குறிப்பிட்ட மாணவிகள் எல்லோரும் திருநெல்வேலியில் இறங்கிவிட்டனர். உரும்பராய், புன்னலைக் கட்டுவன்வரை செல்லவேண்டிய இவர்கள் பஸ் கண்டக்டர்களின் இச் செயலினுலேயே இடைநடுவில் இறங்கியதாகவும்வேறு பஸ்சில் பிரயாணஞ் செய்ததாகவும் கூறப்படுகிறது.

(கு. வி. ம.

இப் பத்திரிகை 'ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜூலை மாதம் 18ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org